©
GOVERNMENT OF TAMIL NADU
2008

[Regd. No. TN/CCN/117/2006-08.
[Price : Rs. 18.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 46B] CHENNAI, WEDNESDAY, NOVEMBER 26, 2008
Karthigai 11, Thiruvalluvar Aandu–2039

## Part VI—Section 2

(Supplement)

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/8-1, 22–11–2005 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/861/2008.

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளை செயற்படுத்துவது குறித்து ஒருசில இடர்ப்பாடுகளையும் தவறான கருத்துக்களையும் நீக்குவதற்காக, மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகைசெய்கிற திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வறையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது , அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 46ஆம் பிரிவுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/DC/8/1இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது, மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது **:–**

**“2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித்தொகுப்பு”**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்**:

(a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், “2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு’’ என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள், அவை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் கீழுள்ள, (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்கு (Sub Regulation) கீழே, பின்வரும் வரம்புரை சேர்க்கப்படுகிறது:**

“ஆனால், உரிமம்தாரர், எந்த நுகர்வோர் பெயரிலுள்ள பிற மின்னிணைப்பு எதனையும் பொறுத்து உரிமம்தாரருக்கு நிலுவைகளை செலுத்தத் தவறுகை செய்கிறாரோ, அந்த நுகர்வோருக்கு மின்சாரம் வழங்குவதற்கு மறுத்தல் வேண்டும்’’.

“29ஆம் ஒழுங்குமுறைவிதியின் கீழுள்ள, (12) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் முதல் பத்தி பின்வருமாறு மாற்றப்படுகிறது : –

(12) சாய்தளம் /அடித்தளம் நீங்கலாக, மொத்தக்கட்டிடப்பரப்பு 900 சதுர மீட்டருக்கு மேலாகவுள்ள அல்லது அந்தக் கட்டிடத்திலுள்ள தாழ் மின்னழுத்த மின்னிணைப்புகள் 150 கிலோ வாட் (KW)க்கு மேற்படுகிற தாழ் அழுத்த (LT) மின்னிணைப்பு கோருகிற கட்டிடம் / வளாகம் எதற்காகவும், –

(i) (a) 6 மீட்டர்கள் x 4 மீட்டர்களுக்கு அளவு கொண்ட செங்குத்தான இடைவெளியுள்ள 2.75 சதுர மீட்டர்களுடன் பூட்டக்கூடிய வசதியுடைய வளிப்போக்கி மின் விசிறிகள் மற்றும் போதிய அளவுள்ள மின் வடக்குழல் உள்ள கூரையில் வலிவூட்டிய கற்காரை, போடப்பட்ட மின்சார அறை நுகர்வோரின் பலமாடிக் கட்டிடத்தின் பிரதான நுழைவாயில் அருகில் தரைத்தளத்தில் மின் பகிர்வு மின் மாற்றியையும், அதனுடனான இணைப்பமைப்பையும் வைப்பதற்கு வகை செய்தல் வேண்டும், அல்லது

(b) திறந்தவெளியில் 10 மீட்டர் x 4 மீட்டர் அல்லது 5 மீட்டர் x 5 மீட்டர் இடமுள்ள நுகர்வோரின் வளாகத்திற்குள், பிரதான நுழைவாயிலில் கட்டமைப்பு மின் பகிர்மான மின்மாற்றியையும் அதனுடைய இணைப்பமைப்பையும் வைப்பதற்கு வகை செய்தல் வேண்டும், மற்றும்

(ii) மொத்தத் தேவை 5 MVAக்கு மேற்படுகிற வீடுகள் / வணிக வளாகங்களிலுள்ள இடங்களில் துணை மின் நிலையம்/ இணைப்பு மின் நிலையம் நிறுவதற்கு ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வரன்முறைகளின்படி இடம் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்.*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–2, 23–02–2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/862/2008.

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அந்த ஒழுங்குமுறை விதியினைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதியைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும்,

மேலேயுள்ள நோக்கத்திற்கு வகை செய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருப்பதாலும், மற்றும் அதற்கிணங்க அந்த முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் 2004 ஜுலை 21ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI–பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(*a*) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(*b*) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2006 பிப்ரவரி 23–லிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. ஒழுங்குமுறைவிதிக்குரியத் திருத்தம் :**

தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்பின் 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் (14)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின் *(b)* கூறின்படி பின்வரும் வகைமுறை புகுத்தப்படுகிறது :-

“ஆனால், உரிமம்தாரரின் தலைமை நிர்வாக அலுவலர், பிரதான வாயிலிருந்து 30 மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இடத்தில்,–

(*a*) உரிமம்தாரரின் அலுவலர்கள் எளிதாக நுழையக்கூடிய மற்றும் காணக்கூடிய இடமாக,

(*b*) பாதுகாப்பான மற்றும் காப்புறுதியான இடமாக, மற்றும்

(*c*) ஒழுங்கீன நடவடிக்கையுள்ளது என சந்தேகப்படக்கூடியதல்லாத இடமாக,

அத்தகைய இடம் உள்ளது என்று அவர் திருப்தியடைவாரானால், மின் வழங்கல் முறைக்கு ஒப்புதலளிக்கலாம். மேலும், தொலைவிடத்தின் அளவினைத் தளர்வு செய்கையில், தொழில்நுட்ப ஆதாரங்களை விட்டுக் கொடுத்தல் ஆகாது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–3, 31–05–2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/863/2008.

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதியினைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அந்த ஒழுங்குமுறை விதியினைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதியைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் 21.07.2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்.**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(a) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. ஒழுங்குமுறைவிதிகளின் திருத்தம்:**

(1) 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் (12) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக பின்வருவது அமைக்கப்படுகிறது :–

(12) புறம்போக்கு நிலத்தில்,–

(i) (துணைவட்டாட்சியர்படி நிலைக்குக் குறையாத) அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மைச் சான்றிதழ், அல்லது

(ii) மின்னிணைப்புக்கான விண்ணப்பதாரரால் அத்தகைய மறுப்பின்மைச் சான்றிதழை முன்னிலைப்படுத்த முடியாதவிடத்து, பின்வரும் ஏற்புறுதியை:–

(1) நான் காலி செய்வதற்குக் கடப்பாடுடையவன் என்பதும் மற்றும் அரசால் இந்த நிலங்கள் கோரப்படுமாயின் மற்றும் / அல்லது பிந்திய நாளில் பூசல் எதுவும் எழுமாயின், எந்த நேரத்திலும் மின்னிணைப்பு துண்டிக்கப்படும் மற்றும் இது பொறுத்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று நிலத்தின் உடைமையை கோருவதற்கு உரிமை இல்லை என்பதும் எனக்கு தெரியும்.

(2) மேலேயுள்ள ஏற்புறுதி நிலத்தின் உடைமைக்குரிய நிரந்தரமான மற்றும் முழு உரிமையை வழங்காது என்பதும் எனக்குத் தெரியும் என்று அளிக்கப்பட வேண்டிய ஏற்புறுதியை முன்னிலைப்படுத்துவதன் பேரில் மின்னிணைப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

(2) பின்னிணைப்பு III–இல், படிவம் எண்.3இல் இனம், எண்.7இன், உள்–இனம் (c)க்குப் பின்பு பின்வருவது சேர்க்கப்படுதல் வேண்டும் :–

"(d) இது புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளது மற்றும் நான் பின்வரும் ஏற்புறுதியை அளிக்கிறேன் :–

(1) நான் காலி செய்வதற்குக் கடப்பாடுடையவன் என்பதும், மற்றும் அரசால் இந்நிலங்கள் கோரப்படுமாயின் மற்றும் / அல்லது பிந்திய நாளில் பூசல் எதுவும் எழுமாயின், எந்த நேரத்திலும் மின்னிணைப்பு துண்டிக்கப்படும் மற்றும் இது பொறுத்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று நிலத்தின் உடைமையைக் கோருவதற்கு உரிமை இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.

**(2)** மேலேயுள்ள ஏற்புறுதி நிலத்தின் உடைமைக்குரிய நிரந்தரமான மற்றும் முழு உரிமையை வழங்காது என்பதும் எனக்குத் தெரியும். (பொருந்தாத கூறினை அடித்து விடுக).''

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 018
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு,**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–4, 22–06–2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/864/2008.

தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதியினைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்சொன்ன விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகைசெய்கிற திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 46ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 2004 ஜுலை 21ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

**"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு"**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(a) இந்த விதித் தொகுப்பு " 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு'' என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில்,–**

(a) 29ஆம் ஒழுங்குமுறைவிதியில், (13)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் குறிப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**குறிப்பு 1–**இந்த ஒழுங்குமுறைவிதியின் (12)ஆம் மற்றும் (13)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகளின்படி, குறித்த வகைத் தேவைக்கு இடைவெளிவிட வேண்டும் என்பதை, நுகர்வோர் / கட்டிடம் கட்டுநர்கள் / கட்டிடத்தின் சொந்தக்காரர்கள், தொடக்கநிலையிலேயே தற்காலிக மற்றும் முறையான மின் வழங்கல் நீட்டிப்பிற்கான விண்ணப்பங்களுடன் அணுகும்போது அறிந்திருக்க வேண்டும்.

**குறிப்பு 2** –(தற்போது தலைவர் /தமிழ்நாடு மின்சார வாரியம்) மின்பகிர்மான உரிமம்தாரரின் தலைமை நிர்வாக அலுவலர்,–

(a) அத்தகைய வளாகத்திற்கு மின் வழங்கல் இருந்து வரும் மின் பகிர்மான மின்மாற்றிகள் / பிற ஆதாரங்களிலிருந்து திருப்தியளிக்கும் வகையில் அளிக்கப்பட்டிருந்தது என்று,

(b) எதிர்காலத்தில் அந்த வளாகத்தில் / அருகிலுள்ள இடங்களில் மின் சுமை அதிகரித்து மின் வழங்கலின் தரத்தை பாதிக்காது என்று,

(c) மேலேயுள்ள அளவை தளர்த்துவதனால் தொழில் நுட்பத் தேவைகளின் பேரில் விட்டுக் கொடுத்தல் எதுவும் செய்யப்படவில்லை என்று,

(d) போதிய இடவசதி இல்லாமை / இட ஆய்வுக்குப் பின்பு உரிமம்தாரரால் மாற்று வழிகள் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று,

அவர் திருப்தி அடைந்து, அசாதாரணமான சந்தர்ப்பத்தில், இந்த ஒழுங்குமுறைவிதியின் (12)ஆம் மற்றும் 13ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகளில் குறிப்பிடப்பட்ட தேவைக்கு எதிராக தளர்த்துதல் செய்ய ஒப்புதலளிக்கலாம்.

(b) 42ஆம் ஒழுங்குமுறைவிதியில், முதலாம் வாக்கியத்தில், "கருதப்படும் நுகர்வோர் " என்ற சொற்றொடருக்குப் பதிலாக, " கருதப்பட வேண்டிய நுகர்வோர், 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் (13) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குரிய குறிப்பு 1–இல் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/8–5, 20–07–2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/865/2008.

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்சொன்ன விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்.**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(a) இந்த விதித் தொகுப்பு, 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித்தொகுப்பு, ***தமிழ்நாடு அரசிதழில்*** அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. (a) தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 29 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில், 29ஆம் ஒழுங்குமுறைவிதியின் (14)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் (a)கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"(a) உள்புற மின்னளவிக்காக, தரைப்பகுதி 5 மீட்டர்கள் x 6 மீட்டர்கள் அளவு கொண்ட செங்குத்தான இடைவெளியுள்ள 3.7 மீட்டர்கள் பூட்டக்கூடிய வசதியுடன் தரைதளம் மற்றும் கூரை / தூணின் அடிக்குமிடையே கூரையில் வலுவூட்டிய கற்காறை போடப்பட்ட மின்சார அறை, வளிப்போக்கி மின் விசிறிகள் மற்றும் போதிய அளவுள்ள மின் வடக்குழல் வசதிகளுக்கு தரைத்தளம் / அடித்தளத்தில், உரிமம்தாரரின் சாதனங்கள், முதலியவற்றை நிறுவுவதற்காக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். இந்த அறை தீப்பற்றாத மற்றும் நீர்புகாததாக இருத்தல் வேண்டும்."

(b) தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில், பின்னிணைப்பு III–இல் படிவம் 4–இல், இனம் 6–இன் கீழுள்ள குறிப்பிற்குப் பதிலாக பின்வரும் குறிப்பு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**குறிப்பு :** விண்ணப்பம் பின்வரும் ஆவணங்களுடன் சேர்ந்து போதல் வேண்டும்:–

(1) (a) விண்ணப்பதாரர் வளாகத்தின் சொந்தக்காரராக இருக்கும் போது அவர்கள் சார்பாக எழுதிக் கொடுக்கப்பட்ட கிரயப்பத்திரத்தின் சான்றிடப்பட்ட நகல்,

அல்லது

விண்ணப்பதாரரின் பெயரிலுள்ள வளாகத்திற்கான சொத்துவரி ரசீது.

(b) விண்ணப்பதாரர் வளாகத்தின் சொந்தக்காரராக இல்லாதபோது வளாக உரிமையாளர் அனுமதி பெற்ற கடிதம்,

அல்லது

(குத்தகைப்பத்திரம் உள்ளடங்கலான) சட்டப்படியான குடியிருப்புக்கான நிரூபணத்துடன் சேர்த்து பின்வருவன:–

(a) படிவம் 6–இல் ஈடுறுதிபிணை முறி.

(b) வழக்கமான வீதத்தைவிட இரண்டு மடங்கு பிணைய வைப்பீட்டுத் தொகை செலுத்துவதற்குரிய ஏற்புக்கடிதம்.

(2) கூட்டாண்மை நிறுவனமாக இருக்கும் விண்ணப்பதாரரைப் பொறுத்தவரை, கூட்டாண்மைப்பத்திரம் அல்லது நிறுமங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுமங்களைப் பொறுத்தவரை, சங்க அமைப்பு விதித் தொகுப்பு / சங்க அமைப்புவிதிகள்.

(3) கையொப்பமிட்டவரின் அதிகாரமளிக்கும் கடிதம் / தீர்மானம்.

(4) இடத்தின் வரைபடம். ”

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/8–6, 10–09–2007 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/866/2008.

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 43 (1) ஆம் பிரிவிற்கு இணங்க தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு, மேற்சொன்ன விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி மற்றும் முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்குப் பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பு)–இல் வெளியிட்டுள்ளது.

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(a) இந்த விதித் தொகுப்பு, 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித்தொகுப்பு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் (5) ஆம் மற்றும் (8) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகளை விட்டு விடுதல்,—**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில், 27ஆம் ஒழுங்குமுறைவிதியில், (5) ஆம் மற்றும் (8) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகள் விட்டு விடப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–6, 03–12–2007 நாளிட்டது)**

**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/8–7, 03–12–2007 நாளிட்டது)**

**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ/SPR/9/1–8, 03–12–2007 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/867/2008.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவின் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு, 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2–இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் மேலேயுள்ள விதித் தொகுப்புகள் மற்றும் மேலே சுட்டப்பட்ட 2004 ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விதிகளுக்குப் பொருத்தமான திருத்தங்களுக்கு வகை செய்யும் ஒருங்கிணைக்கப்பட்ட திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் மேற்சொன்ன திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, இதற்காக, மேற்சொன்ன சட்டத்தின் 181 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம், மேற்சொன்ன மின் வழங்கல் விதித் தொகுப்பு, மின் பகிர்மான விதித் தொகுப்பு, 2004ஆம் ஆண்டு ஒழுங்குமுறைவிதிகள் ஆகியவற்றிற்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) வெளியிட்டுள்ளது.

### அத்தியாயம்1, முன்னுரையாக.

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்**:–

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு, மின் பகிர்மான விதித் தொகுப்பு மற்றும் செயல்திறச் செந்தரங்கள் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(2) இந்த ஒழுங்குமுறைவிதிகள், அவை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

### அத்தியாயம் 2 – தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைத் திருத்தம் செய்தல்.

**2. தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்:**

தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17 ஆம் ஒழுங்குமுறைவிதியில், (6) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(7) உரிமம்தாரர், (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்படும் அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், நுகர்வோரால் செய்யப்பட்ட பிணைய வைப்புத்தொகை அல்லது கூடுதல் பிணைய வைப்புத்தொகை அல்லது ஏதேனும் பிற வைப்புத்தொகைக்கு எதிராக, நுகர்வோரிடமிருந்து நிலுவைகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகலாகும், நுகர்வோரிடமிருந்து கொடுபடவேண்டிய நிலுவைகளைச் சரிக்கட்டுதல் வேண்டும் மற்றும் சரிக்கட்டுதல் செய்த பின்பு, மீதி வைப்பீட்டுத்தொகை, ஏதேனுமிருப்பின், அதனை, (3) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்படும் அறிவிப்புக் காலஅளவு முடிவடையும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நுகர்வோருக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.''

### அத்தியாயம் 3 – தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பினைத் திருத்தம் செய்தல்.

**3. தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 33 ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்**:–

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 33 ஆம் ஒழுங்குமுறைவிதியில், (4) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு பின்வரும் ஒழுங்குமுறைவிதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

''(5) ஒன்று, (3) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின்படி நுகர்வோரால் அல்லது, நேர்வுக்கேற்ப, (4) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின்படி உரிமம்தாரரால் உடன்பாட்டுப்பத்திரம் முடிவுறுத்தப்படும் நேர்வில், உரிமம்தாரர், நுகர்வோரால் செய்யப்பட்ட பிணைய வைப்பீடு அல்லது கூடுதல் பிணைய வைப்பீடு அல்லது ஏதேனும் பிற வைப்பீட்டிற்கு எதிராக நுகர்வோரிடமிருந்து நிலுவைகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகலாகும், நுகர்வோரால் கொடுபடவேண்டிய நிலுவைகளைச் சரிக்கட்டுதல் செய்த பின்பு, நுகர்வோரிடமிருந்து கொடுபடவேண்டிய நிலுவைகள்,

எவையேனுமிருப்பின், அவற்றை வசூலித்தல் வேண்டும், மற்றும் அத்தகைய சரிக்கட்டுதல் செய்த பின்பு, உடன்பாட்டுப்பத்திரம் முடிவுறுத்தப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நுகர்வோரிடம், மீதி வைப்பீட்டுத் தொகை, ஏதேனுமிருப்பின், அதனை திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.''

**அத்தியாயம் 4–2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகள்.**

**4. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் 21 ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்:–**

2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் 21 ஆம் ஒழுங்குமுறைவிதியில்,–

(i) தொடக்கப் பத்தியில் கடைசி வாக்கியத்திற்குப் பதிலாகப் பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''வழங்கப்பட வேண்டிய நஷ்டஈடு, கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்படுகிறது, அதாவது :–

**அட்டவணை''**

(ii) (i) ஆம் கூறில் திருத்தம் செய்யப்பட்டவாறு மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதியின்படி அட்டவணையில்,–

(a) ''வ.எண்.'' என்ற தலைப்பின்கீழ் முதல் பத்தியில் ''8'' ஆம் இலக்கத்திற்குப் பின்பு, '' 9'' ஆம் இலக்கம் சேர்க்கப்படும்.

(b) ''நிகழ்ச்சிகள்'' என்ற தலைப்பின்கீழ் இரண்டாம் பத்தியில் ''குறையைக் கையாளுதல்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் சேர்க்கப்படும், அதாவது:–

''தற்காலிக மின் வழங்கல் காலம் முடிவடைந்த பின்பு தற்காலிக மின் வழங்கல் பொறுத்த வைப்பீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் மற்றும் மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் 6 ஆம் ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் 17 (6) ஆம் ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 33(5) ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான காலஅளவிற்குள் மீதி வைப்பீட்டுத் தொகையை திருப்பிக் கொடுத்தல்.''

(c) ''வழங்கப்படவேண்டிய நஷ்டஈடு'' என்ற தலைப்பின்கீழ், ''குறையைக் கையாளுவதில் தவறுகைக்காக ரூ.50/–'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, '' திருப்பிக் கொடுக்கும் நாள் வரையில், ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலான வட்டிக்குக் கூடுதலாக வாரம் ஒன்றுக்கு அல்லது காலத்தாழ்வின் அதன் பகுதிக்கு ரூ.100/–'' என்ற சொற்றொடர் சேர்க்கப்படும்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

சென்னை–600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–8, 08–02–2008 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/868/2008.

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு, மேற்சொன்ன விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86 ஆம் பிரிவினால் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்குப் பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) வெளியிட்டுள்ளது.

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்.

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(a) இந்த விதித் தொகுப்பு, 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானத் (முதலாம் திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித்தொகுப்பு, ***தமிழ்நாடு அரசிதழில்*** அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை விதித் தொகுப்பின் 2ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பின், 2ஆம் ஒழுங்குமுறைவிதியில், (q) கூறுக்குப் பதிலாக பின் வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

" (q) " பொறியாளர் " என்பது, எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், மின் பகிர்மான உரிமம்தாரரால் பணிக்கமர்த்தப்பட்ட மற்றும் வட்டாரப் பகுதியின் மின் வழங்கலுக்கு பொறுப்புடையவராக இருக்கிற பொறியாளர் என்று பொருள்படும் மற்றும் இந்த விதித் தொகுப்பின்படி பொறியாளரின் அதிகாரம் எதனையும் செலுத்துவதற்கு தம்மால் அல்லது தம்முடைய மேலதிகாரிகளால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பிற நபர் எவரையும் உள்ளடக்கும்."

**3. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 3 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:**

முதன்மை ஒழுங்குமுறைவிதியில், 3 ஆம் ஒழுங்குமுறை விதியில், (5) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (iii) ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"(iii) மாநிலத்திற்குள் மின்பகிர்மானம் மற்றும் மின் வழங்கலுக்கான மின் வாங்குகை/உடன்பாட்டுப்பத்திரங்கள் மூலம் மின் உற்பத்தி நிறுமங்கள் அல்லது உரிமம்தாரர்களிடமிருந்து அல்லது பிற ஆதாரங்களிலிருந்து மின்சாரம் கொள்முதல் செய்யப்படவேண்டிய விலை உள்ளடங்கலாக, மின் வாங்குகை, மற்றும் மின் பகிர்மான உரிமம்தாரர்களின் கொள்முதல் செய்முறை ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்துதல்."

**4. முதன்மை விதித் தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதியில், 4 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (c) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"c. மின் பகிர்மான அமைப்புமுறையின் உரிமம்தாரர் மற்றும் நுகர்வோர்களுக்கிடையேயான அமைப்புத் திட்டத்தின் விவரத்தினை பரிமாற்றம் செய்வதற்கான நடைமுறையை வரையறை செய்தல். "

**5. முதன்மை விதித் தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதியில், 5 ஆம் ஒழுங்குமுறைவிதியில், –

(i) (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (c) கூறுக்குப் பதிலாகப் பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(c) இயக்கப் பிரச்சனைகள் போன்ற, தாழ்வழுத்தம், போதியதல்லாத குறுக்குச் சுற்றத்தைத் தாங்கி நிற்கும் வல்லமை, மின்சக்தி அளவு மற்றும் பாதுகாப்புச் செயற்படும் திற பிழைகள் ஆகியவற்றிற்கான தீர் முடிவுகளுக்கு வகை செய்தல்."

(ii) (3) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், "வாடிக்கையாளருங்கூட" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறைவிதிகளின் 2 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (e) கூறில் பொருள் வறையறை செய்யப்பட்டவாறு நேரடி வாடிக்கையாளர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) (4) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், –

(a) அட்டவணை அறிக்கையில், " இடுபணி மற்றும் பிரச்சனைகள்" என்ற தலைப்பின் கீழுள்ள பதிவுகளில் வ. எண். 1–க்கு எதிராக "உயர் அழுத்தமட்டம்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின் அழுத்தமட்டத்தைத் தரம் உயர்த்துதல்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) மேற்சொன்ன அட்டவணை அறிக்கையில், " நடவடிக்கைகள்" என்ற தலைப்பின் கீழுள்ள பதிவுகளில் வ. எண் 3–க்கு எதிராக "நடுநிலைப்புள்ளியைக் கையாளுதல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "விளைவுறுதரையிணைப்புக்கான வகைமுறை" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(iv) (5)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில்,–

(a). (a) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"இடுபணியை வரையறுத்தல்"

(b). (b) கூறில், தொடக்கத்தில் வரும் ''தொடக்கம்'' என்ற வாசகத்திற்கு பதிலாக ''தொடங்குதல்'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

**6. முதன்மை விதித்தொகுப்பின் 6 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

முதன்மை விதித் தொகுப்பில், **6** ஆம் ஒழுங்குமுறைவிதியில், –

(i). **(3)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், இரண்டாம் வாக்கியத்தில் ''இணங்கி நட'' என்ற வாசகத்திற்குப் பதிலாக ''தொகுக்கப்பட்ட'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii). **(5)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், –

(a) தொடக்கப்பத்தியில், ''ஆணையத்தின்'' என்ற வாசகத்திற்குப் பதிலாக ''அந்த ஆணையத்தினால்'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) - (d) கூறில், –

(i). (iii) ஆம் இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனம் புகுத்தப்படுதல் வேண்டும்.

''(iiia) ஒருங்கிணைந்த தகுந்த காப்புடன் போதிய பாதுகாப்பு அமைப்பு.''

(ii) கடைசி வாக்கியத்தில் ''சட்டத்தின்'' என்ற வாசகத்திற்குப் பதிலாக ''அந்தச் சட்டத்தின்**''** என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) (f) கூறில் முதல் வாக்கியத்திற்குப் பதிலாக, பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

மின் பகிர்மான அமைப்பு, நடைமுறையிலுள்ள இந்தியச் செந்தரங்களுக்கிணங்க திறம்படத் தரையிடப்படுதல் வேண்டும், துணை நிலைய தரையிணை படல் குறைந்த ஒட்டுமொத்த மின்மறிப்பு / தடைக்கு மற்றும் பிழையின்போது குறைந்தது மாறுகால மின்னழுத்த ஏற்றம் காரணமாக (TGPR) அனுமதிக்கத்தக்கப் பாதுகாப்பான தொடுதல் மட்டுமே மற்றும் மின்னழுத்தத்தை அதிகரிக்கச் செய்வதற்கு வடிவமைக்கப்படுதல் வேண்டும்.**''**

**7. முதன்மை விதித் தொகுப்பின் 8 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பில், **8** ஆம் ஒழுங்குமுறைவிதியில், '' மரபுசாரா**''** என்ற வாசகத்திற்குப் பதிலாக ''புதுப்பிக்கத்தக்க**''** என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

**8. முதன்மை விதித்தொகுப்பின் 11 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

முதன்மை ஒழுங்குமுறைவிதியில், **11** ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக பின் வருவது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''மின் பகிர்மான அமைப்பிலுள்ள துணை நிலையங்கள், மின் உற்பத்தி நிலையம் மற்றும் உயர் மின் அழுத்த நுகர்வோர் ஆகியோருக்கு மின் அளவையின் குறைந்தபட்சத் தேவையானது, தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித் தொகுப்பில் (TNEGC) குறிப்பிடப்படுகிற தேவையாக உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

**9. முதன்மை விதித் தொகுப்பின் 13 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பில், **13** ஆம் ஒழுங்குமுறைவிதியில், (a). **(1)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் **(g)** கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

''(g) (இராண்டாம் நிலை) தாழ் அழுத்தப்பக்கத்திலுள்ள மின் பகிர்மான மின் மாற்றிகளின் பேரில், இணைப்பமைப்பு செய்யப்பட்ட அல்லது, நேர்வுக்கேற்ப, நிலையான மின் தேக்கிக்கான வகைமுறை.''

(b) **(3)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், –

(i) இரண்டாம் வாக்கியத்தில், ''நுகர்வோர்களுக்கு ஆலோசனை '' என்ற வாசகத்திற்குப் பதிலாக '' அந்த நுகர்வோர்களுக்கு ஆலோசனை கூறுதல்**''** என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) மூன்றாம் வாக்கியத்தில், ''வகைமுறைகளுடன்**''** என்ற வாசகத்திற்குப் பதிலாக ''அந்த வகைமுறைகளுடன்'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(c) **(4)**ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு –

(i) ''**13**'' என்ற வாசகம் ''**14**'' என்று மறு எண்ணிடப்படுதல் வேண்டும்.

(ii) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட **14** ஆம் ஒழுங்குமுறைவிதியில், முதல் வாக்கியத்தில் ''ஆணையத்தினால்'' என்ற வாசகத்திற்குப் பதிலாக ''அந்த ஆணையத்தினால்**''** என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

**10. முதன்மை விதித் தொகுப்பின் 15 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்**:—

முதன்மை விதித் தொகுப்பின் 15 ஆம் ஒழுங்குமுறைவிதியில், –

(a). (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், 6 ஆம் வரியில், ''நுகர்வோர்'' என்ற சொல்லுக்கு முன்பு வரும் ''தொடர்பான'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும் மற்றும் அது, "நுகர்வோர்" என்ற சொல்லுக்குப் பின்பு புகுத்தப்படுதல் வேண்டும்.

(b). (3) ஆம் ஒழுங்குமுறைவிதியில், (b) மற்றும் (c) கூறுகளுக்குப் பதிலாகப் பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

"b. மின் செலுத்தல் அமைப்பிலுள்ள பிரிகலன்கள், திறன் மின்மாற்றிகள், மின்னோட்ட மாற்றிகள், மின்னழுத்த மாற்றிகள், மற்றும் மின் தொடர்கள் போன்ற வலையமைப்பு உறுப்புகளின் செயலற்றல்,

c. மின் பகிர்வு அமைப்பிலுள்ள மின் பகிர்வு மின் மாற்றிகள், மின் தொடர்கள் முதலியன போன்ற உறுப்புகளின் செயல் நிறுத்தம்.''

(c). (6) ஆம் ஒழுங்குமுறைவிதியில்,–

i. ஏழாவது வாக்கியத்திலுள்ள ''அலுவலக நபர்கள்'' என்ற வாசகத்திற்குப் பதிலாக ''அலுவலர்கள்'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) கடைசி வாக்கியத்தில்,–

1. ''அதிக அளவிலான நுகர்வோர்கள்'' என்ற வாசகத்திற்கு பதிலாக, ''நுகர்வோர்கள்'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.
2. ''ஒப்பந்த தேவைகள்'' என்ற வாசகத்திற்குப் பதிலாக ''ஒப்பந்தம் செய்யப்பட்ட தேவை'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

**11. முதன்மை விதித் தொகுப்பின் 18 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

முதன்மை விதித் தொகுப்பின், 16 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (3) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில்,–

(a). (c) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(c) உரிமம்தாரரின் செயற்படும் பணியாளருக்கும் நுகர்வோர்களுக்குமிடையேயும், இடையிணைப்பு அல்லது இடைதளமுனையிலுள்ள ஒவ்வொரு தரப்பினரையும் சேர்ந்த கருவி எதனையும், இணைப்பமைப்பு, அல்லது சுற்றமைப்பு எதனின் பணியைச் செய்வதற்காக பொதுவான கட்டுப்பாட்டு எல்லைகளைக் கடந்து செல்லும் மின் பகிர்மான உரிமம்தாரர்களுக்குமிடையேயும் முறையான ஒருங்கிணைப்பு இருத்தல் வேண்டும்.''

(b). (e) கூறில், மூன்றாம் வாக்கியத்தில், ''தொடர்பான நபர்கள்'' என்ற வாசகத்திற்கு பதிலாக, ''நபர்களின் தொடர்பான'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(c). (h) கூறில் '' தொங்க விடுதல் '' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''காட்சிக்கு வைத்தல்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(d). (j) கூறில், ''பணியாளர் தொடர்பான அனைவரும்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''தொடர்புடைய பணியாளர் அனைவரும்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**12. முதன்மை விதித் தொகுப்பின் 19 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறை விதித் தொகுப்பில், 19 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் கூறில் ''தாழ் மின் அழுத்த வலையமைப்புகள்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''தொகுதி தாங்குகிற மட்டங்களுக்கும் மேற்படுகிற'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**13. முதன்மை விதித் தொகுப்பின் 20 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:**—

முதன்மை விதித் தொகுப்பின், 20 ஆம் ஒழுங்குமுறைவிதியில்,—

(a). (1) ஆம் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1) உரிமம்தாரர் மின் தொடர்கள் மற்றும் சாதனத்தை பருவ காற்றுக்கு முன்பு ஆய்வு செய்தல் மற்றும் பிற தடுப்பு நடவடிக்கைக்கான பராமரிப்பு விவரங்கள் அடங்கிய பட்டியலைத் தயார் செய்தல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் அதன் இணங்குகையை உறுதி செய்தல் வேண்டும். அநேகமாக பாதிக்கப்படக்கூடிய நுகர்வோர்களுக்கு அவசியமான முன் தகவல் அளிக்கப்படுதல் வேண்டும்.''

(b). (v) ஆம் கூறின் முடிவில் பின்வரும் வாக்கியம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“நுகர்வோர்கள், உரிமம்தாரரின் மின் பகிர்மான அமைப்புடன் இணையாக இயங்குவதைத் தடுப்பதற்கு தம்முடைய மின்னாக்கி தொகுதிக்காகவும், அத்தகைய மின்னாக்கிகள் மின் வழங்கலுக்காக உரிமம்தாரரின் வலையமைப்புடன் இடைத்தளம் அமைக்கப்படாமலிருப்பதற்காகவும், தகுந்த பிணைப்பு வசதியை உறுதி செய்தல் வேண்டும்.”

**14. முதன்மை விதித் தொகுப்பின் 27 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

முதன்மை விதித் தொகுப்பின் 27 ஆம் ஒழுங்குமுறைவிதியில்,—

(a). **(1)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், முதல் வாக்கியத்தில் “**43** ஆம் பிரிவு” என்ற வாசகத்திற்குப் பின்பு, “அந்தச் சட்டத்தின்” என்ற வாசகம் பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b). **(4)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில்,

(i) முதலாம் வாக்கியத்தில் “அவர் குடியிருக்கிறார்” என்ற சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ii) இரண்டாம் வாக்கியத்தில் “அவர்” என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(c). **(15)** ஆம் உள் ஒழுங்குமுறை விதியில், “கடைகள் அமைந்துள்ள இடம்” என்ற சொற்றொடருக்குப் பின்பு வெளிப்படையாக நிரந்தரமாகப் பிரித்துவைத்தலுடன் ” என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(d). **(16)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், “நுகர்வோர் குறை தீர்வு மன்றம்” என்ற சொற்றொடருக்குப் பின்பு, ‘’**2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் **42(5)** ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட” என்ற சொற்றொடர், முடிவில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

**15. முதன்மை விதித் தொகுப்பின் 29 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை விதித் தொகுப்பில், **29** ஆம் ஒழுங்குமுறை விதியில்,–

(a). **(3)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், “எல்லை வகுக்கப்பட்ட” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “ ஒதுக்கிவைக்கப்பட்ட” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b). **(12)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், (i) (b) கூறில்,–

“10m x 4m or 5m x 5m” என்ற வாசகத்திற்குப் பதிலாக, “**10** மீட்டர்கள் x **4** மீட்டர்கள் அல்லது **5** மீட்டர்கள் x **5** மீட்டர்கள்” என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(c). **(14)** உள் ஒழுங்குமுறை விதியில், (b) கூறில்,

“10m x 4m or 5m x 5m” என்ற வாசகத்திற்குப் பதிலாக, “**10** மீட்டர்கள் x **4** மீட்டர்கள் அல்லது **5** மீட்டர்கள் x **5** மீட்டர்கள்” என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

**16. முதன்மை விதித் தொகுப்பின் 30 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:—**

முதன்மை விதித் தொகுப்பில், **30** ஆம் ஒழுங்குமுறை விதியில்,—

(a). **(1)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“**(1)**” நுகர்வோரின் நிறுவுகை, கம்பியிடல் மற்றும் சாதனம் தொடர்பாக சட்டத்தின் **53** ஆம் பிரிவின் கீழ் அடங்கியுள்ள சட்டப்படியான வகைமுறைகளுக்கு இணங்கி நடப்பதற்கு ஏற்ப மாறாது ஒரே சீராக இருத்தல் வேண்டும். நுகர்வோரின் வளாகத்திலுள்ள சாதனங்களையும், கம்பியிடலையும் பராமரித்தல் அல்லது சோதனையிடல் பொறுத்த பொறுப்பு நுகர்வோரையேச் சார்ந்ததாகும்.”

(b). **(6)** உள் –ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் வரம்புரை புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

“ஆனால், அத்தகைய மிகைத்திறன், விண்ணப்பிக்கப்பட்ட / ஒப்பளிக்கப்பட்ட தேவையில் அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது மற்றும் அத்தகைய கணக்கீட்டுத் திறன், வகை செய்யப்பட்ட மின்னளவி மற்றும் பராமரிப்பு மின் தொடரின் திறனுக்கு ஏற்றதாக இருக்கும் மற்றும் மின் பகிர்வு நுகர்வோர்களுக்கு மின் வழங்கல் அல்லது சீர்ப்படுத்துதல் வகையினை மாற்றுவதை உள்ளடக்காது.”

**17. முதன்மை விதித் தொகுப்பின் 31 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,—**

முதன்மை ஒழுங்குமுறைவிதியில், **31** ஆம் ஒழுங்குமுறைவிதியின், **(1)** ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் வாக்கியம் முடிவில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“சோதனை அறிக்கையை எழுதிக் கொடுப்பதன்/அதில் கையொப்பமிடுவதன் பேரில், சோதனை அறிக்கையின் நகல் ஒன்று நுகர்வோருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.”

**18. முதன்மை விதித் தொகுப்பின் 32 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்,—**

முதன்மை விதித் தொகுப்பில், 32 ஆம் ஒழுங்குமுறைவிதியின், (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், பின்வரும் வாக்கியம் முடிவில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''நுகர்வோர் மின் அளவியை விலைக்கு வாங்குவதற்கு விரும்புவாரானால், அந்த உரிமம்தாரரால் சோதனை செய்யப்படும், நிறுவப்படும், இயக்கப்படும், பராமரிக்கப்படும், மற்றும் மூடி முத்திரையிடப்படும், அது உரிமம்தாராரின் அமைப்பிலிருந்து நிரந்தரமாக அகற்றப்பட்ட பின்பு மட்டுமே, நுகர்வோரால் விலைக்கு வாங்கப்பட்ட அந்த மின்னளவியைத் தம்முடைய சொத்தாக தம்மால் உரிமை கோரப்படும்.

**19. முதன்மை விதித் தொகுப்பின் 33 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்,—**

முதன்மை விதித் தொகுப்பில், 33 ஆம் ஒழுங்குமுறைவிதியின், (4) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் கடைசி வாக்கியத்திற்குப் பதிலாகப் பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும் , அதாவது:—

''உரிமம்தாரர், அத்தகைய முடிவுறுத்தலுக்கான காரணங்களை நுகவோருக்கு தெரிவித்தல் வேண்டும்.''

**20. முதன்மை விதித் தொகுப்பின் 35 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்,—**

முதன்மை ஒழுங்குமுறைவிதியில், 35 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் ''காசோலை'' என்ற சொல், விட்டுவிடுதல் வேண்டும்.

**21. முதன்மை விதித் தொகுப்பின் 37 ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்,—**

முதன்மை ஒழுங்குமுறை விதியில், 37 ஆம் ஒழுங்குமுறை விதியில்,—

(a). (d), (e) மற்றும் (f) கூறுகளுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதுல் வேண்டும், அவையாவன:—

"(d) அந்த இடத்தில் பயன்படுத்தப்படாமலிருக்கிற ஈடுசெய்யக்கூடிய பொருட்களின் தேய்மான மதிப்பு, எவையேனுமிருப்பின், அவை நுகர்வோரின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(e) தேவைப்படலாகும் போக்குவரத்து உள்ளடங்களாகப் புதிய பொருட்களின் செலவுத் தொகை.

(f) தேய்மான மதிப்பிலான ஈடுசெய்யப்பட முடியாத பொருட்களின் செலவுத்தொகை.''

(b) பின்வரும் வாக்கியம், முடிவில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''இருந்து வரும் மின்னிணைப்பினை மாற்றுவது பொறுத்து, நுகர்வோர், மேலேயுள்ள மாற்றுதல் கட்டணங்கள் நீங்கலாக, உரிமம்தாரருக்குக் கொடுபடவேண்டிய நிலுவைத் தொகைகள் அனைத்தினையும் செலுத்துதல் வேண்டும்.

**22. முதன்மை விதித் தொகுப்பின் 39 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பில், 39 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் ''கட்டணங்கள்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''செலவுகள்'' என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

**23. முதன்மை விதித் தொகுப்பின் 42 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பில், 42 ஆம் ஒழுங்குமுறைவிதியில், பின்வருவது பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

'' 42 சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைவிதிகள், ஆணைகள், முதலியன:

29 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (13) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குரிய குறிப்பு 1–இல் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, நுகர்வோர், பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள், மற்றும் அதன்படி செய்யப்படும் ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் அறிவிக்கைகளின் வகைமுறைகள் பற்றி முழுவதும் அறிந்துள்ளதாகக் கருதப்படுவார். நுகர்வோர், மேலே சொல்லப்பட்ட பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் அனைத்து ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் அறிவிக்கைகளுடன் உரியவாறு இணங்கச் செயற்படுதல் வேண்டும்.''

**24. முதன்மை விதித் தொகுப்பின் 7 ஆம் படிவத்தின் திருத்தம்,–**

முதன்மை விதித் தொகுப்பில், 7 ஆம் படிவத்தில், –

(i). (3) ஆம் கூறில், மூன்றாவது வாக்கியத்திற்குப் பதிலாக, பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''பதிவு செய்வது நிறுத்தப்படுகிற அல்லது குறைபாடுடையதாகக் காணப்படுகிற மின்னளவி எதனையும் பொறுத்தவரை, அத்தகையவாறு நிறுத்தப்படும் அல்லது அத்தகைய குறைபாடு இருக்கிற கால அளவின் போதான நுகர்வு, மின் வழங்கல் விதித் தொகுப்பில் குறிப்பிடப்படுகிறவாறு, முன் சென்ற அல்லது பின்வரும் நான்கு மாதங்களின் நுகர்வின் சராசரியின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.''

(ii). **(4)** ஆம் கூறில், இரண்டாம் வாக்கியத்திற்குப் பதிலாக, பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''மின்னளவி ஒவ்வொன்றின் அளவு, நுகர்வோருக்கு வழங்கப்பட்ட மின்னளவி அட்டையில் அத்தகைய கணக்கீட்டாளரால் பதியப்படுதல் வேண்டும்.''

(iii). **(6)** ஆம் கூறுக்குப் பதிலாக அதன் குறிப்புடன் பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**''6. மின் கட்டண வீதம் மற்றும் செலுத்துகை.**

அவ்வாறு வழங்கப்பட்ட அனைத்து மின் சக்திக்காக, நுகர்வோர், அவ்வப்போது ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படலாகும் மின் கட்டண வீதம்/குறைந்தபட்ச வீதங்கள் உரிமம்தாரருக்குச் செலுத்துதல் வேண்டும்.''

(iv). **(7)** ஆம் கூறில், '' பதினைந்து அறிவிப்பு'' என்ற வாசகத்திற்குப் பதிலாக ''பதினைந்து நாட்கள் அறிவிப்பு '' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(v). **(8)** ஆம் கூறில்,–

(a) (i) முதலாம் வாக்கியத்தில் ''வேண்டும்'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ii). மேற்சொன்ன முதல் வாக்கியத்தில், '' உரிமம்தாரர் '' என்ற சொல்லுக்குப் பதிலாக, ''உரிமம்தாரர், வேண்டும்'' என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b). ஆறாவது வரியில், ''வீதம்'' என்ற சொல்லுக்குப் பதிலாக, ''வீதங்கள்'' என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

(c). பத்தாவது வரியில் '' பொருந்தும்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''சரிக்கட்டுதல்'' என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

(vi). **(9)** ஆம் கூறில்,–

(a). முதலாவது பத்தியில் மூன்றாவது மற்றும் நான்காவது வரிகளில் ''பிணையவைப்பீடு'' என்ற சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(b). இரண்டாவது பத்தியில்,–

(i) நான்காவது வரியில் ''மற்றும் பிற ஆணைகள்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''அவ்வப்போது ஆணையத்தினால் பிறப்பிக்கப்படும்''

(ii) வரம்புரையில்,–

1. ஐந்தாம் வரியில் '' பகுதியாக '' என்ற சொல்லுக்குப் பதிலாக ''தரப்பினர்'' என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.
2. அதே வரியில் '' வாடிக்கையாளர்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''நுகர்வோர்'' என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

(vii) **(10)** ஆம் கூறில், முதலாவது வாக்கியத்தில் ''முந்திய'' என்ற சொல்லுக்குப் பதிலாக, ''முன்'' என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

(viii). **(11)** ஆம் கூறில், ''அவ்வப்போது'' என்ற சொல்லுக்குப் பின்பு ''ஆணையத்தினால்'' என்ற சொல் கடைசியில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ix). **(12)** ஆம் கூறில், (a) பத்தியில், இறுதியில் வரும் ''வகைமுறைகள்'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(x). **(13)** ஆம் கூறில்,

**(1)** ''மின் வழங்கல் கொடுக்கப்படவேண்டிய வளாகத்தின் விவரணம்'' என்ற தலைப்பின்கீழ் குறித்துரைக்கப்பட்ட என்ற சொற்றொடருக்குப் பதிலாக, பின்வரும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன :–

(*a*) மாவட்டம்

(*b*) வட்டம்

(*c*) நகரம்/கிராமம்

(*d*) கதவு எண்./நில அளவை எண்/தெரு

(*e*) தெருப்பெயர்/பகுதி

(2) மின் வழங்கல் விவரங்கள் –

(*a*) மின் வழங்கப்பட்டதன் நோக்கம்

(*b*) ஒற்றைத்தறுவாய் அல்லது முத்தறுவாய்

(*c*) மின்னழுத்தம்

(*d*) மின் கட்டண வீதம்

(3) தொடர்புடைய மின்சுமை விவரங்கள்..... கி.வோ.ஆ (KV) / கி.வா.(KW) / ப.தி (HP) நுகர்வோரால் கோரப்படும் தொடர்புடைய சுமையின் அதிகபட்சம்.

(b) உடன்பாட்டுப்பத்திரத்தின் முடிவின் அடியில் இடது பக்க மூலையில் காணப்படும் ''பொறியாளர் '' என்ற சொல் வலது பக்க மூலையில் காணப்பட வேண்டும்.

(c) கீழ்கடைசியில் வரும் ''அஞ்சல் முகவரி'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும் மற்றும் ''முகவரியுடன்'' என்ற சொல் ''சாட்சி'' என்ற சொல்லுக்குப் பின்பு சேர்க்கப்படுதல் வேண்டும்.

**25. முதன்மை விதித் தொகுப்பின் 8ஆம் படிவத்தின் திருத்தம்,**

முதன்மை விதித் தொகுப்பில், 8ஆம் படிவத்தில்–

(i). (2)ஆம் கூறின், முடிவில் பின்வருவன சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன –

''நுகர்வோர் மூன்று மாதங்களுக்குள் மின் வழங்கலைப் பயன்படுத்தத் தவறுவாரானால், நீட்டிக்கப்படும் காலத்திற்கு முன்னதாக குறைந்தபட்ச தொகையை மாதாந்திரமாக வசூலித்த பின்பு, மேலும் மூன்று மாதங்கள் நீட்டிப்பு உரிமம்தாரரால் வழங்கப்படுதல் வேண்டும்.

ஆர்வமுள்ள நுகர்வோர், மின் வழங்கலை பயன்படுத்தத் தவறுவாரானால், அந்த விண்ணப்பம், ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும் மற்றும் மின் பகிர்மான விதித் தொகுப்பின் வகைமுறைகளின்படி மின்னளவி பிணைய வைப்பீட்டுத் தொகை தவிர, நுகர்வோரால் செலுத்தப்பட்ட தொகை அனைத்தும் தண்ட இழப்பாக்கப்பட்டு உடன்பாட்டுப்பத்திரம் முடிவுறுத்தப்படும்.

(ii). (6)ஆம் கூறில்,—

(a) ''அதனைச் சேர்ந்த'' என்ற வாசகத்திற்குப் பதிலாக, ''அத்தகைய நுகர்வோரைச் சேர்ந்த'' என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) உடன்பாட்டுப் பத்திரத்தின் முடிவில் வரும் ''பொறியாளர்கள்'' மற்றும் ''கூட்டாளி / மேலாண்மை இயக்குநர்'' என்ற சொற்கள், கீழ்க்கண்டவாறு மறுபடியும் வரிசைப்படுத்தப்படுதல் வேண்டும்:—

''பொறியாளர்'' முன்பு
கையொப்பமிடப்பட்டது

1.

2.

பொதுவான இலச்சினை

M/s

முகவரியுடன் சாட்சிகள் கூட்டாளி

1. மேலாண்மை இயக்குநர் :

2.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

சென்னை–600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ /DC/8–9, 22–05–2008 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/869/2008.

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 43 (1)ஆம் பிரிவுடன் இணங்கியிருக்க வேண்டிய தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒரு சில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்சொன்ன விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்குத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்யும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள் முந்திய வெளியீட்டின் வறையரைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 86ஆம் மற்றும் 46ஆம் பிரிவுகளின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, மற்றும் முந்தைய வெளியீட்டிற்கு முன்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், 2004 ஜூலை 21ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ/ DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI– பிரிவு 2(பின்னிணைப்பு)–இல் வெளியிட்டுள்ளது:-

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள்.**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(a) இந்த விதித்தொகுப்பு, 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (இரண்டாம் திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித் தொகுப்பு, ***தமிழ்நாடு அரசிதழில்*** அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்,—**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறை விதியில்:—

(i). (1)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், மேற்சொன்ன உள்–ஒழுங்குமுறை விதியில் மறுபடியும் ஆக்கப்பட்டவாறு, சட்டத்தின் 43ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில்,—

(a) தொடக்கப் பகுதியில் வரும், ''மின் பகிர்மான உரிமம்தாரர் ஒவ்வொருவரும்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) முடிவில் பின்வரும் விளக்கம் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**விளக்கம் :** இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ''விண்ணப்பம்'' என்பது, அவசியமான கட்டணச் செலுத்துகையை மற்றும் பிற இணங்குகைகளைக் காட்டுகிற ஆவணங்களுடன் சேர்த்து பகிர்மான உரிமம்தாரரால் வேண்டுறுத்தப்படுகிறவாறு உரிய படிவத்திலுள்ளதும், அனைத்து வகைகளிலும் நிறைவான விண்ணப்பம் என்று பொருள்படும்.''

(ii). (16)ஆம் உள்–ஒழுங்குமுறை விதிக்குப் பின்பு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**விளக்கம் :** ஐயங்களை அகற்றும் பொருட்டு, மேலேயுள்ள (1)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் மறுபடியும் ஆக்கப்பட்டவாறு சட்டத்தின் 43(1)ஆம் பிரிவிற்குரிய விளக்கத்தில் வரும் ''பிற இணங்குகைகள்'' என்ற வாசகம், பின்வருவதை உள்ளடக்குதல் வேண்டும், அதாவது:—

(a) ஆர்வமுள்ள நுகர்வோரால் மின் வழங்கல் கோரப்படும் கட்டுமானம், மாற்றியமைத்தல் அல்லது கட்டிடங்கள் பழுதுபார்த்தல் அல்லது புதிய தொழிற்சாலைகள் அல்லது தொழிற்கூடங்கள் அல்லது பிற நிறுவனங்களை நிறுவுதல் குறித்து தமிழ்நாடு மாநிலத்தின் சட்டங்களில் சொல்லப்பட்டவாறு உரிய அதிகார மற்றும் 2006 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின்அளவிகள் நிறுவுகை மற்றும் இயக்கம்) ஒழுங்குமுறை விதிகளின், 15 ஆம் ஒழுங்குமுறை விதியின் (2) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், நுகர்வோர் மின்னளவி காட்டும் அளவீடு, தம்முடைய நுகர்வுக்கு ஏற்றதாக இல்லை. மின்னளவி நிற்றல், இலச்சினை சேதமடைதல், மின்னளவி எரிதல், அல்லது சேதமடைந்துள்ளது என்று உரிமம்தாரருக்கு நுகர்வோர் புகார் செய்யும் நேர்வில், மின் வழங்கல் பொறுத்து அறிவிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளில் விவரிக்கப்பட்டவாறு உரிய ஆணையத்தின் மின் வழங்கல் விதித் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறைகளின்படியும், உரிமம்தாரர் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாலும்,

மற்றும் ஆணையம், நுகர்வோர் ஒருவர் மின்னளவி குறைபாடுடையதாக இருக்கிறது என்று கருதுவாரானால், அதனை அவர் சிறப்புச் சோதனை செய்வதற்காக உரிமம்தாரருக்கு விண்ணப்பிக்கலாம் என்று மேற்சொன்ன மின் வழங்கல் விதித் தொகுப்பின் 7ஆம் ஒழுங்குமுறை விதியின் (Q) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் குறித்துரைத்துள்ளதாலும், மற்றும் மேற்சொன்ன மின் வழங்கல் விதித் தொகுப்பின் மேற்சொன்ன ஒழுங்குமுறை விதி, 7(Q)-இல், அத்தகைய சிறப்பு சோதனையைச் செய்வதற்கு தகுதி வாய்ந்த முகமை குறித்து குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை என்பது காணப்படுவதாலும்,

மற்றும், இடர்ப்பாடுகளையும் தவறான எண்ணங்களையும் நீக்குவதற்கு தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்கு வகை செய்வதற்காகத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள், முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதாலும், அதற்கிணங்க முந்திய வெளியீடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக 2003ஆம் ஆணடு மின்சாரச் சட்டத்தின், (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், (இதன் பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பில் உள்ள அமைப்புகளிடமிருந்து அனுமதி அல்லது ஒப்புதலளிப்பு அல்லது ஒப்பளிப்பு அல்லது இசைவு பெறுவது தொடர்பாக அத்தகைய சட்டங்களுக்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல் ; ”

(b) மேலேயுள்ள (4), (11)ஆம் மற்றும் (12)ஆம் உள்–ஒழுங்குமுறை விதிகளில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல் ;

(c) உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை, அல்லது ஆணை அல்லது தீர்ப்பு எதிலும் சொல்லப்பட்டுள்ள மின் வழங்கல் அல்லது பிறகோரிக்கைகள் பொறுத்து அத்தகைய தீர்ப்பாணை, அல்லது தீர்ப்பிற்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சென்னை–600 018,**
**2008 நவம்பர் 11.**

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(அறிக்கை எண். த.மி.ஒ.ஆ /SC/ 7–1, 22–11–2005 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/870/2008.

தமிழ்நாடு மின்சார விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒரு சில இடர்ப்பாடுகளையும், தவறான கருத்துக்களையும் நீக்குவதற்காக மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகைசெய்கிற திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வறையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின்(மத்திய சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 50ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/SC/7/1 இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI–பிரிவு 2இல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI–பிரிவு 2–ல் வெளியிட்டுள்ளது .

**"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு''**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:–**

(*a*) இந்த விதித் தொகுப்பு, '' 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு'' என்று வழங்கப்பெறும்.

(*b*) இந்த ஒழுங்குமுறைவிதிகள் ***தமிழ்நாடு அரசிதழில்,*** அவை வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வரும்.

**2. 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (2) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் பின்வருவது (iv) ஆம் கூறாகச் சேர்க்கப்படுகிறது.**

(iv) தாழ் அழுத்த (LT) மின் சேவையைப் பொறுத்தவரை, சுமையில் கூடுதல் அல்லது குறைப்பு எதுவும் மற்றும் உயர் அழுத்த (HT) மின் சேவையைப் பொறுத்தவரை தேவையில் கூடுதல் அல்லது குறைப்பு எதுவும், அதே மின்னிணைப்பில் நிலுவையிலுள்ள தொகை செலுத்தப்பட்டிருந்தாலன்றி, ஒப்பளிக்கப்படாதிருக்கலாம்.

**3. 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (4) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின்படி (iv) ஆம் கூறு திருத்தம் செய்யப்பட்டு பின் வருமாறு படிக்கப்படும்:–**

''(iv) (உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகள் தவிர) தாழ் அழுத்த (LT) நுகர்வோரைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம் மின்சார விலையின் பொருட்டு நிலுவையிலுள்ள தொகைக்காக மாதம் ஒன்றுக்கு 1.5 விழுக்காடு ஆகும். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகளைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம், மின்சார விலையின் பொருட்டு நிலுவையிலுள்ள தொகைக்காக மாதம் ஒன்றுக்கு 1 விழுக்காடு ஆகும்.

**4. 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (4) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் (v) ஆம் கூறு திருத்தம் செய்யப்பட்டு பின்வருமாறு படிக்கப்படும் : –**

(எ) உயர் அழுத்த (HT) நுகர்வோரைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம், அறிவிப்புக் கால அளவிற்கு மாதம் ஒன்றுக்கு 1.5 விழுக்காடு ஆகும். எனினும் (உரிமம்தாரருக்கு விண்ணப்பம் செய்வதன் பேரில்), உரிய மாதத்தின் முடிவுரை அறிவிப்புக் கால அளவிற்கு அப்பால் நீட்டிப்புக் காலத்தினைப் பயன்படுத்துகிற நுகர்வோருக்காகக் காலத் தாழ்வு நாட்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் முழு மாதத்தின் செலுத்துகைக்காக அனுமதிக்கப்பட்ட உரிய தேதி முடிவடைந்ததிலிருந்து மாதம் ஒன்றுக்கு 2 விழுக்காடு ஆகும். நீட்டிப்புக் காலம் எதுவும் வழங்கப்படாத போது அல்லது நீட்டிப்புக் காலம் முடிவடைந்த பின்பு காலத்தாழ்வு தொடர்கிற போது, உபரித்தொகை மாதம் ஒன்றுக்கு 1.5 விழுக்காடு ஆகும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சென்னை–600 018**
**2008 நவம்பர் 11.**

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/ 7–2, 19–05–2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/871/2008.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பைக் குறித்துரைத்துள்ளது என்பதாலும், மற்றும் 1–09–2004 நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI–பிரிவு 2–இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், மேற்சொன்ன விதித் தொகுப்பு, மின் துண்டிப்புத் தேதியிலிருந்து 2 ஆண்டுகளுக்குள், மறு இணைப்பிற்கான கட்டணங்களைச் செலுத்த முன்வரும் மின்னிணைப்புத் துண்டிக்கப்பட்ட தாழ் அழுத்த (LT) மின் சேவை நுகர்வோர்களை அனுமதிப்பதற்கு வகை செய்கிறது என்பதாலும்,

மற்றும், தாழ் அழுத்த நுகர்வோர் மற்றும் மின் பகிர்வு உரிமம்தாரர், வேளாண்மை மின்னிணைப்பு பெறுவதற்கு வெகுகாலம் காத்திருப்பதன் பொருட்டு, வகைமுறையை செயற்படுத்துவதிலுள்ள இடர்ப்பாடுகளை தெரியப்படுத்துகிறார்கள் என்பதாலும்,

மற்றும், இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்கான திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும் ;

தற்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவினால் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ. / SC/7/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 01–09–2004 நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2–இல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைக்கிறது:–

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:–**

(1) இந்த விதித் தொகுப்பு, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு நடைமுறைக்கு வந்துள்ள 01–09–2004 அன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படும்.

**2. தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் 22 ஆம் ஒழுங்குமுறைவிதியில் (6) ஆம் மற்றும் (7)ஆம் உள்–ஒழுங்குமுறை விதிகளுக்குப் பதிலாக, பின்வரும் ஒழுங்குமுறைவிதிகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது: –**

"(6) *(i)* மின்னிணைப்பு மூன்று மாதங்கள் அறிவிப்புக்கால அளவிற்கு அப்பால் மின் கட்டணங்கள் செலுத்தாமைக்காக துண்டிக்கப்பட்டிக்கிறபோது, நுகர்வோர், கீழே சொல்லப்பட்ட கால அளவிற்குள் செலுத்த முன் வந்து, உள்ளபடியே நிலுவையைச் செலுத்துவதற்கும் மற்றும் கீழேயுள்ள (ii) ஆம் கூறில் உள்ளவாறு கட்டணங்களைச் செலுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அறிவிப்புக் காலத்திற்கு அப்பால் கால நீட்டிப்பு வழங்கலாம் மற்றும், மின்னிணைப்பிற்கான மின் தொடர்கள் அகற்றப்படாதிருந்து, துண்டிக்கப்பட்ட மின் சேவைக்கு மறுபடியும் மின்னிணைப்பு கொடுக்க வசதியாக இருக்குமானால், உடன்பாட்டுப்பத்திரத்தின் முடிவுறுத்தத்தை ரத்து செய்யலாம்.

| *வகை* | *துண்டிக்கப்பட்ட மின் சேவையின் மறு இணைப்பிற்கான கால அளவு* |
|---|---|
| *(1)* | *(2)* |
| உயர் அழுத்த (HT) நுகர்வோர் | மின் துண்டிப்புத் தேதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள் |
| தாழ் அழுத்த (LT) வேளாண் நுகர்வோர் | – மேற்படி – |
| பிற தாழ் அழுத்த நுகர்வோர் | மின் துண்டிப்புத் தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குள் |

*(ii)* . (4)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்கிணங்க, உரிமதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய நுகர்வோர், நிலுவைத் தொகையைத் தவணைகளில் செலுத்தவும் மற்றும் உரிமம்தாரருக்குக் கொடுபடவேண்டிய கணக்கினை முடித்த பின்பு, செலுத்தப்பட வேண்டிய மொத்த நிலுவைத் தொகையின் 40 விழுக்காட்டினைப்பெற்ற பின்பு மறு இணைப்பு வசதியைப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதிக்கலாம். அது பின் வருவனவற்றை உள்ளடக்கும் : –

(a) மின் துண்டிப்பு தேதியன்றுவுள்ள நிலுவை.

(b) (அறிவிப்புக்கால அளவு உள்ளடங்கலாக) மின் துண்டிப்புத் தேதியிலிருந்து ஆறு மாதக் கால அளவிற்குரிய குறைந்தபட்ச மின் கட்டண வீதம் மற்றும் மின்னளவிக்குரிய வாடகை.

(c) செலுத்துகைத் தேதி வரையில் பொருந்தத்தக்க காலந்தாழ்த்திச் செலுத்தும் உபரிக்கட்டணம் (BPSC) / வட்டி.

(d) எஞ்சியுள்ள 60 விழுக்காட்டுத் தொகையானது, பத்து மாதாந்திரத் தவணைகளில் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(e) மேலேயுள்ளவற்றிற்குக் கூடுதலாக, கணக்கு முடிக்கப்படுகையில், சரிக்கட்டப்பட்ட முழு பிணைய வைப்புத்தொகையானது, புதிய மின்னிணைப்பு கொடுக்கும் முன்பு ஒட்டு மொத்தமாக வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(7) மின்னிணைப்புத் துண்டிக்கப்பட்ட நுகர்வோர், (6) (i) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்ட காலஅளவிற்குப் பின்பு மறு மின்னிணைப்புப் பெறுவதற்கு முன் வருவாரானால், உரிமம்தாரர், அவர்களை புதிய விண்ணப்பதாரர் போன்று பாவித்தல் வேண்டும் மற்றும் புதிய மின்னிணைப்பிற்கு பொருந்தத்தக்க கட்டணங்கள் அனைத்தையும் மற்றும் காலந்தாழ்த்திச் செலுத்தும் உபரிக்கட்டணத்துடன் (BPSC) பிற நிலுவைத் தொகைகள் அனைத்தையும் வசூலித்த பின்பு மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 018
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**[அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ. /SC/ 7–2(1), 20–09–2006 நாளிட்டது]**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/872/2008.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி குறித்துரைத்துள்ளது என்பதாலும், மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2–இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய நிலுவைத் தொகையின் அளவு அல்லாத பிறவற்றோடு கூட குறித்துரைக்கின்ற, ஆறு மாதங்களுக்குரிய குறைந்தபட்ச மின் கட்டண வீதத்தினை வரையறை செய்கின்ற, தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் 22 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (6) மற்றும் (7) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தத்தை அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும் மற்றும் அந்தத் திருத்தம் 2006 ஜூன் 24ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI–பிரிவு 2–இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு நடைமுறைக்கு வந்துள்ள நாளான 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதாலும்,

தமிழ்நாடு மின்சார வாரியம், திருத்தத்தை அறிவிக்கை செய்யும் நாள் வரையில், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் இருக்கிற வகைமுறைகளின்படி குறைந்தபட்ச மின் கட்டண வீதத்தினை வசூலித்து வந்துள்ளதாக எடுத்துரைத்துள்ளது என்பதாலும், மற்றும் முன்னுற இயங்குமாறு அந்தத் திருத்தத்தினை செயற்படுத்துதல், அந்த சமயத்தில் நடைமுறையிலுள்ள விதிகளின்படி, மறு மின்னிணைப்பு வசதியைப் பயன்படுத்துகிற நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்துகிறது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், பின்னர் திருத்தம் செய்யப்பட்ட தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதியினைக் குறித்துரைக்கிறது.

திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதி தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பில், 22 ஆம் ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் விளக்கம், (6) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் முடிவில் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

'' **விளக்கம்:**—ஐயங்களை அகற்றும் பொருட்டு, மேற்சொன்ன திருத்தத்திற்கு முன்பு, (6) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியின் அடிப்படையில் 2006 ஜூன் 21ஆம் நாளுக்கு முன்பு அதாவது, ***தமிழ்நாடு அரசிதழில்*** 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு வெளியிடப்பட்ட தேதிக்கு முன்பு தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் வசூலிக்கப்பட்ட குறைந்தபட்ச மின் கட்டண வீதம் எதுவும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் திருப்பிக் கொடுக்கப்பட தேவையில்லை என்று விளம்பப்படுகிறது''

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சென்னை–600 018,**
**2008 நவம்பர் 11.**

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## தமிழ்நாடு மின்சார வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–3, 10–04–2007 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/873/2008.

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்படுவதாலும், மற்றும் அறிவிக்கை செய்யப்படுவதாலும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI – பிரிவு 2 இல் வெளியிட்டிருப்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தகவலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள விதித்தொகுப்பிலுள்ள கட்டுப்படுத்தும் வகைமுறைகள் இல்லாதிருக்கையில், தேவையில் அடிக்கடி குறைத்தல் ஏற்படுவதினால் மின் கொள்முதல் திட்டத்தில் ஒரு சில இடர்ப்பாடுகள் இருப்பதாலும்,

மற்றும் நுகர்வோர்களின் தேவைக்குறைப்பு பொறுத்த இடர்ப்பாடுகளை அகற்றும் பொருட்டு தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தங்களைச் செய்வது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதாலும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு, அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம் பின்வரும் திருத்தங்களை குறித்துரைக்கிறது **:**

### 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு

**1. குறுந்தலைப்பும் மற்றும் தொடக்கம் :**

(*a*) இந்த விதித் தொகுப்பு, **''**2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு'' என்று வழங்கப்பெறும்.

(*b*) இது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள 17ஆம் ஒழுங்குமுறைவிதித் திருத்தம் செய்தல் :**

தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள 17ஆம் ஒழுங்குமுறைவிதியில், பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது **:**

''**(6)** (*i*) தொடக்க உடன்பாட்டுக் காலமானது, மின் வழங்கல் கிடைத்த தேதியிலிருந்து ஓர் ஆண்டு ஆகும் மற்றும் ஒப்பந்தம் பெற்றத் தேவையிலுள்ள குறைப்பு எதற்கும் பொருந்துதல் ஆகாது.

*(ii)* தொடக்க உடன்பாட்டுக்காலமான ஓர் ஆண்டு முடிந்த பின்பு நுகர்வோர், தம்முடைய தேவைக்காகவும், குறைப்பிற்காகவும் அத்தகைய குறைப்பிற்கான கட்டணம் எதுவும் செலுத்தாமல் ஆண்டிற்கு ஒருமுறை விண்ணப்பிக்கலாம். ஓர் ஆண்டில் இரண்டாவது மற்றும் பிந்திய குறைப்பிற்காக, ஒப்படைக்கப்பட்ட தேவைக்கான தேவைக் கட்டணங்களின் இரண்டு மடங்கு கட்டணங்களை ஒரே தடவையில் செலுத்துவதற்கு நுகர்வோர் உள்ளாதல் வேண்டும்.

*(iii)* நுகர்வோர், தேவையைக் குறைப்பதற்காக விண்ணப்பிக்கும் சமயத்தில், அப்போது இருந்து வரும் ஒப்பந்தம் பெற்ற தேவையின் 50 விழுக்காடு வரை மட்டுமே தேவைக்காகவும், அதனைக் குறைப்பதற்காகவும் விண்ணப்பித்தல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 018
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/ 7–4, 28–5–2007 நாளிட்டது)**

No. VI(2)/874/2008.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்***, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின், (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி மின் கட்டணங்கள் முதலியவற்றை வசூலிப்பதற்கான ஏற்பாடு தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளது, மற்றும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் மின் பகிர்வு உரிமதாரர் (தமிழ்நாடு மின்சார வாரியம்) மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளின் ஒருசில வகைமுறைகளை நிறைவேற்றுகையில், மற்றும் தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பில் இந்தப்படிக்கு குறித்தவகை நடைமுறைகள் இல்லாதிருப்பதால், மின்சாரம் திருடப்படும் நேர்வில் மற்றும் மின்சாரம் முறைகேடாகப் பயன்படுத்தப்படும் நேர்வில், வழங்கல் மதிப்பீடு மற்றும் துண்டிப்பு தொடர்பான வகைமுறைகளை நிறைவேற்றுகையில் குறிப்பாக, ஒருசில இடர்ப்பாடுகளை தெரியப்படுத்துவதாலும்,

மற்றும் மின் வழங்கல் விதித்தொகுப்பில் பின்வருவனவற்றை சேர்ப்பதற்கு 2005ஆம் ஆண்டு மின்சார (இடர்ப்பாடுகளை நீக்குதல்) ஆணை, இந்திய அரசு, அரசாணை 790(E)–இல் அறிக்கை செய்யப்பட்டிருப்பதாலும்:—

*(i)* உரிய நீதிமன்றத்தினால் நீதிமுறையில் தீர்மானிப்பதற்காக நடப்பிலிருக்கும் மின்சாரத் திருட்டைப் பொறுத்தவரை செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணங்களின் மதிப்பீட்டு முறைகள்,

*(ii)* மின் திருட்டு அல்லது அனுமதியில்லாமல் மின்சாரத்தைப் பயன்படுத்துதலைப் பொறுத்தவரை, மின் வழங்கல், துண்டிப்பு மற்றும் மின்னளவி, மின்வடத் தொடர்கள், மின் நிலையம் மற்றும் பிற சாதனம் ஆகியவற்றை அகற்றுதல் மற்றும்,

*(iii)* மின்சார மாற்றுப்பாதை, மின் திருட்டு அல்லது மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துதல் அல்லது மின்நிலையம், மின் தொடர்கள் அல்லது மின் அளவியை மோசம் செய்தல், நிலைகுலைத்தல், அல்லது சேதம் விளைவிப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகள்.

மற்றும் 2006ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின் அளவிகள் நிறுவுகை மற்றும் இயக்கம்) ஒழுங்குமுறை விதிகளின், 15ஆம் ஒழுங்குமுறை விதியின் (2) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், நுகர்வோர் மின்னளவி காட்டும் அளவீடு, தம்முடைய மின் நுகர்வுக்கு ஏற்றதாக இல்லை. மின்னளவி நிற்றல், இலச்சினை சேதமடைதல், மின்னளவி எரிதல், அல்லது சேதமடைந்துள்ளது என்று உரிமதாரருக்கு நுகர்வோர் புகார் செய்யும் நேர்வில், மின் வழங்கல் பொறுத்து அறிவிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளில் விவரிக்கப்பட்டவாறு உரிய ஆணையத்தின் மின் வழங்கல் விதித்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறைகளின்படியும், உரிமதாரர் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாலும்,

மற்றும் ஆணையம், நுகர்வோர் ஒருவர் மின்னளவி குறைபாடுடையதாக இருக்கிறது என்று கருதுவாரானால், அதனை அவர் சிறப்புச் சோதனை செய்வதற்காக உரிமதாரருக்கு விண்ணப்பிக்கலாம் என்று மேற்சொன்ன மின் வழங்கல் விதித்தொகுப்பின் 7ஆம் ஒழுங்குமுறை விதியின் (9) உள்–ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைத்துள்ளதாலும், மற்றும் மேற்சொன்ன மின் வழங்கல் விதித் தொகுப்பின் மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதி 7(9) இல், அத்தகைய சிறப்பு சோதனையைச் செய்வதற்கு தகுதி வாய்ந்த முகமை குறித்து குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை என்பது காணப்படுவதாலும்,

மற்றும் இடர்ப்பாடுகளையும் தவறான எண்ணங்களையும் நீக்குவதற்கு தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்கு வகை செய்வதற்காகத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள், முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதாலும், அதற்கிணங்க முந்திய வெளியீடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

இப்போது, அதற்காக 2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181 ஆம் பிரிவினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், (இதன் பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பைத் திருத்துவதற்கு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் பின்வரும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது, அவையாவன:—

**1. குறுந்தலைப்பு மற்றும் அளாவுகை :–**

(*a*) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(*b*) 14ஆம் மற்றும் 16ஆம் ஒழுங்குமுறை விதிகள் தவிர, இந்த ஒழுங்குமுறை விதிகள்,அவை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

(*c*) 14ஆம் மற்றும் 16ஆம் ஒழுங்குமுறை விதிகள் 2004 செப்டம்பர் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**2. முதன்மை விதித் தொகுப்பின் 2ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

(i) முதன்மை விதித் தொகுப்பின் 2ஆம் ஒழுங்குமுறை விதியில், (a) கூறுக்குப் பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:–

(aa) ''வாரியம்'' என்பது, 1948ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (54/1948) 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி, இந்தச்சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு அமைத்துருவாக்கப்பட்ட மாநில மின்சார வாரியம் என்று பொருள்படும்.

(ii) (h) கூறுக்கு பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :– (hh) ''மின்பகிர்வு உரிமதாரர் '' என்பது, தம்முடைய மின்சாரம் வழங்கல் பகுதிக்குள் உள்ள நுகர்வோருக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின்பகிர்வு அமைப்பினை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம்தாரர் என்று பொருள்படும்.

(iii) (i) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

(i) ''பொறியாளர்'' என்பது, அவர் எந்தப் பெயரில் வழங்கப்பட்டாலும், உரிமதாரரால் பணிக்குஅமர்த்தப்பட்டு, அந்த வட்டாரப் பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கான பொறுப்புடைய ஒரு பொறியாளர் என்று பொருள்படும் மற்றும் இந்த விதித்தொகுப்பின்படி ஒரு பொறியாளரின் அதிகாரம் எதனையும் செலுத்துவதற்கு அவரால் அல்லது அவருடைய மேலதிகாரிகளால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பிற நபர் எவரையும் உள்ளடக்கும்.

(iv) (p) கூறுக்குப் பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

(pp) ''நபர்'' என்பது, ஏதேனும் நிறுமம் அல்லது கூட்டமைப்பு அல்லது கழகம் அல்லது தனி நபர்களின் குழு, கூட்டு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் அல்லது இல்லாவிடினும், அல்லது செயற்கையான சட்டமுறையான நபரையும் உள்ளடக்கும்.

**3. முதன்மை விதித் தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

(i) முதன்மை விதித்தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறை விதியின் (1)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின் (i)ஆம் கூறில், இரண்டாம் வாக்கியத்தில் வரும் ''தற்காலிகமாக மின்சாரம் வழங்கல்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக **''**மின்சாரம் வழங்கல்**''** என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) முதன்மை விதித்தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறை விதியின் (2)ஆம் உள் ஒழுங்குமுறை விதியில், (xii) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

**''**(xiii) மின்னிணைப்புக் கட்டணங்கள்**''**

**4. முதன்மை விதித் தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியில், –

(i) (1) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில்,–

(A). (a) கூறின் முடிவில், பின்வரும் வாக்கியம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

''உரிமதாரர், வெவ்வேறு திறனுடைய மின்னோடிகள் / பற்றுவைப்பு மின்மாற்றிகளுக்காக, உரிய மின் தேக்கி வரையளவுகளைக் குறித்துரைத்தல் வேண்டும்''.

(B). (b) கூறில், முதல் வாக்கியத்தில் ''இரண்டு மாத கால அளவிற்குள்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''இது தொடர்பாக உரிமதாரரால் வழங்கப்பட்ட அறிவிப்புத் தேதியிலிருந்து'' என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(ii). (ii) ஆம் கூறிலுள்ள (2) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில்,

(b) உட்கூறு மற்றும் அதன்படியான குறிப்பு 1–க்குப் பதிலாக பின்வரும் (b) உட்கூறு மற்றும் குறிப்பு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது :–

(b) [18.6 KW (25 HP)]–க்குச் சமமான அல்லது அதைவிடக் குறைந்த ஒப்பந்தம் பெற்ற தேவையுடன் பிறவகையான தாழ் மின்னழுத்த மின்னிணைப்பிற்காக, ஒப்பந்தம் பெற்ற தேவைக்குச் சமமாக அல்லது அதைவிடக் குறைவாக இணைந்த சுமை இருக்கிறவிடத்து, மிகைத் தேவைக் கட்டணங்கள் பொருந்தத்தக்கதாகாது.

**குறிப்பு:**

[18.6 KW (25 HP]–க்குக் குறைவான அல்லது சமமான ஒப்பந்தம் பெற்றத் தேவையுடனான மின்னிணைப்புகளுக்காக, நுகர்வோரின் இணைந்த சுமை ஒப்பந்தம் பெற்றத் தேவைக்கு மேற்படுகிறவிடத்தெல்லாம், உரிமம்தாரர், தேவையைப் பதிவு செய்யும் வசதியுடனான மின்னளவியைப் பொருத்துதல் வேண்டும் மற்றும் நுகர்வோரை, மிகைத் தேவைக்காக விதிக்கத்தக்க வகையின் கீழ் கொண்டு வருதல் வேண்டும். மின்னளவியைப் பொருத்திய பின்பு, பதிவு செய்யப்பட்ட தேவையானது, ஒப்பந்தம் பெற்றத் தேவைக்கு மேற்படுமானால், தற்போதுள்ள தேவை, நுகர்வோருக்குத் தகவல் கொடுத்த பின்பு, பதிவு செய்யப்பட்ட தேவை அளவுக்கு மாற்றப்படுதல் வேண்டும் மற்றும் கூடுதல் தேவை நீட்டிப்பிற்காகப் பொருந்தத்தக்க தொடர்புடைய கட்டணங்கள் அனைத்தும், அடுத்த பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும். உரிமம்தாரர் தேவையைப் பதிவு செய்யும் வசதியுடனான மின்னளவியைப் பொருத்தும் வரையில், மிகைத் தேவைக் கட்டணம் எதுவும் வசூலிக்கத்தக்கதாகாது மற்றும் மிகைத் தேவைக்காக விதிக்கத் தக்க வகையின் கீழ் நுகர்வோரைக் கொண்டு வருதல் ஆகாது.

(iii). (ii) ஆம் கூறிலுள்ள (3) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில், –

(A) (b) உட்கூறுகளுக்கு பதிலாக, பின்வரும் உட்கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

(b) ‘‘வேளாண் வகையின் கீழ் மின்னிணைப்பு பெறும் சமயத்தில், நுகர்வோரால் விண்ணப்பிக்கப்பட்ட மின்திறனுக்கு மிகையாக மதிப்பிடப்பட்ட மின்திறன் உள்ளதாகக் காணப்படுமானால், பொறியாளர், மின் வழங்க மறுத்தல் வேண்டும். அந்த நுகர்வோர் மின்னோடியின் மதிப்பிடப்பட்ட மின்திறன் பொறுத்து பொறியாளரால் செய்யப்பட்ட, முடிவினை ஆட்சேபிப்பாரானால், அரசால்/அரசு ஆய்வகத்தால்/மின் ஆற்றல் திறச் செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட / ஒப்புதலளிக்கப்பட்ட முகமை எதானலும் வழங்கப்பட்ட மின்னோடியின் திறன் பொறுத்தச் சான்றிதழை அளித்து, அவர் அடுத்த மேலதிகாரிக்கு மேல்முறையீடு செய்யலாம்’’ அடுத்த மேலதிகாரியின் முடிவு அறுதியானதாகும் மற்றும் அந்த நுகர்வோரைக் கட்டுப்படுத்தும்.

(B). (c) உட்கூறின் முடிவில், பின்வரும் சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

‘‘மின்னோடியின் மதிப்பிடப்பட்ட திறனின் அடிப்படையில் மிகையான ஒப்பந்தம் பெற்ற சுமைக் கட்டணங்களை வசூலித்தல்,’’

(C).(d) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

(d) தற்போதுள்ள நுகர்வோர், மின்னோடியின் மதிப்பிடப்பட்ட திறன் பொறுத்து பொறியாளரால் செய்யப்பட்ட முடிவினை ஆட்சேபிப்பாரானால், அரசு ஆய்வகத்தில் அல்லது மின் ஆற்றல் திறச் செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற முகமை எதனாலும், மின்னோடியை அதன் திறனுக்காக நுகர்வோரின் செலவில் சோதனை செய்யுமாறும், மற்றும் அத்தகைய கடிதத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அத்தகைய அரசு ஆய்வகம் அல்லது முகமையின் சோதனை அறிக்கையை முன்னிலைப்படுத்துமாறும், கோரும் கடிதம் நுகர்வோருக்கு வழங்கப்படலாம். எனினும், அத்தகைய சோதனை அறிக்கையை முன்னிலைப்படுத்திய பின்பு அந்தக் கட்டணங்கள், பிந்திய நுகர்வுக் கட்டண பட்டியலில் உள்ள சான்றிடப்பட்ட சுமைக்கு சரிக்கட்டப்படுதல் வேண்டும்.

(iv). (4) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், –

(A).(v) ஆம் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

(v) உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகள் தவிர, HT நுகர்வோரைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம், அறிவிக்கப்பட்ட காலத்திற்கான மாதம் ஒவ்வொன்றிற்கும் 1.5 விழுக்காடாக இருத்தல் வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு துறைகளைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம், அறிவிக்கப்பட்ட காலத்திற்கான மாதம் ஒவ்வொன்றிற்கும் 1 விழுக்காடாக இருத்தல் வேண்டும். எனினும், கொடுபட வேண்டிய மாதத்தின் முடிவு வரையுள்ள அறிவிக்கப்பட்ட காலத்திற்கு அப்பாலும் கால நீட்டிப்பினை பயன்படுத்துகிற நுகர்வோரின் BPSC, காலத்தாழ்வு செய்த நாட்களின் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் முழு மாதத்திற்கான செலுத்துகைக்காக அனுமதிக்கப்பட்ட உரிய தேதி முடிவடைந்ததிலிருந்து மாதம் ஒன்றுக்கு 2 விழுக்காடாக இருத்தல் வேண்டும். நீட்டிப்புக்காலம் எதுவும் வழங்கப்படாத போது அல்லது நீட்டிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்பும் காலத்தாழ்வு தொடர்கிற போது, உபரிக்கட்டணம் மாதம் ஒன்றுக்கு 1.5 விழுக்காடாக இருத்தல் வேண்டும்.

(B).(xi) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் விளக்கம் அதன் முடிவில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது **:–**

**“விளக்கம்:** இந்த ஒழுங்குமுறை விதியிலும், இந்த விதித் தொகுப்பின் பிற ஒழுங்குமுறை விதிகளிலும் ‘‘HT நுகர்வோர்’’ என்ற சொற்றொடரின் சுட்டுகையானது, ‘’EHT நுகர்வோர் கூட’’ என்ற சொற்றொடரை சுட்டுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(v). (6) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், –

(A). தலைப்புக்குப் பதிலாக, பின்வரும் தலைப்பு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

‘‘மின்இணைப்பு/ தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்.**’’**

(B). (1) ஆம் கூறில்,–

(i) **‘’**கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் என்ற சொற்றொடர், முதல் வாக்கியத்தில் வரும் **“**மின்னிணைப்பு / தொடர்’’ என்ற சொற்றொடருக்குப் பின்பு சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ii) இனம் (iii) இல், ‘‘மறுபடியும் நிறுவுதல்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘நிறுவுதல்’’என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) இனம் (v) இன், முடிவில் ‘‘போக்குவரத்து உள்ளடங்கலாக’’ என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(vi).(7) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், –

(i) முதலாம் பத்தியில், “(i)” என்ற வாசகம், “விண்ணப்பம் ஒவ்வொன்றும்” என்ற சொற்றொடருக்கு முன்பு புகுத்தப்படுதல் வேண்டும்.

(ii) மேற்சொன்ன முதலாம் பத்தியில் “படிவம் (1)” என்ற வாசகத்திற்குப் பின்பு, “இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கையில்” என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(iii) இரண்டாம் பத்தியில் “(ii)” என்ற வாசகம், “விண்ணப்பம் ஒவ்வொன்றும்” என்ற சொற்றொடருக்கு முன்பு புகுத்தப்படுதல் வேண்டும்.

(iv) மேற்சொன்ன இரண்டாம் பத்தியிலுள்ள கூறு (b) யின், முதலாம் வாக்கியத்தில், “பிணைய வைப்புத்தொகை” என்ற சொற்றொடருக்குப் பின்பு, “மாற்றலுக்கு ஆதரவான ஆவணத்தில் அது உள்ளடங்கவில்லையானால்” என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

**5. முதன்மை விதித் தொகுப்பின் 6ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 6ஆம் ஒழுங்குமுறை விதியில், –

(i) முதலாம் வாக்கியத்தில், “குறுமக் கட்டணம்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “குறுமக் கட்டணங்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (b) கூறில், முதலாம் வரம்புரையில், “ஒரு குறுமக் கட்டணங்கள்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “குறுமக் கட்டணங்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**6. முதன்மை விதித் தொகுப்பின் 7ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 7ஆம் ஒழுங்குமுறை விதியில், –

(a),(6)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின் இரண்டாம் வாக்கியத்தில், “மின்னளவி வட்டு” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “மின்னளவி” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b). (9) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், முதல் வாக்கியத்திற்குப் பின்பு பின்வருவது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

“ஐயத்திற்குரிய / குறைபாடுடைய மின்னளவிகள் உள்ளடங்கலான பூசலிலுள்ள மின் ஆற்றல் அளவிகளுக்காக மேலே சொல்லப்பட்டுள்ள சிறப்புச் சோதனையானது, சோதனை மற்றும் அளவுக் குறியிடுதலுக்கான தேசிய அங்கீகரிப்பு வாரியத்தால் (NABL) அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் சோதனை ஆய்வகத்தில் செய்யப்படுதல் வேண்டும், மற்றும் மூன்றாம் தரப்பினர் மின் அளவு சோதனை ஏற்பாட்டு அமைப்பு நிறுவப்படும் அத்தகைய நேரம் வரையில், உரிமம்தாரர், தமிழ்நாடு அரசின் தலைமை மின் ஆய்வாளரால் நடத்தப்படும் சிறப்புச் சோதனையைச் செய்தல் வேண்டும்.”

(c). (10)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின், (i)கூறில், “ குறைபாடான மின்னளவிகள்” என்ற சொற்றொடர்களுக்குப் பின்பு, “உரிமம்தாரருக்குச் சொந்தமான ” என்ற சொற்றொடர்கள் புகுத்தப்படுதல் வேண்டும்.

**7. முதன்மை விதித் தொகுப்பின் 8ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 8ஆம் ஒழுங்குமுறை விதியின் (9)ஆம் உள் ஒழுங்குமுறை விதியில், “நுகர்வோர் அல்லது அவருடைய சார்பாளர்” என்ற சொற்றொடர் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக, “மின் உற்பத்தியாளரின் / நுகர்வோரின் சார்பாளர்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**8. முதன்மை விதித் தொகுப்பின் 9ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 9ஆம் ஒழுங்குமுறை விதியில், (2) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில், “வழங்கப்பட்ட மின்சாரம்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “மின்கட்டண வீதம் மாற்றம் செய்யப்படும் வரையில் நுகரப்பட்ட மின்சாரம்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**9. முதன்மை விதித் தொகுப்பின் 10ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 10ஆம் ஒழுங்குமுறை விதியில், “24 மணி நேர அறிவிப்பு” என்ற சொற்றொடர் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக, “48 மணி நேர அறிவிப்பு” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**10. முதன்மை விதித் தொகுப்பின் 14ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 14ஆம் ஒழுங்குமுறை விதியின், (1)ஆம் உள் ஒழுங்குமுறை விதியின் (b)கூறில், மூன்றாம் வாக்கியத்திற்குப் பின்பு, பின்வருபவை நான்காம் வாக்கியமாகப் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

“அறிவிப்புக் காலத்தில் கடைசி நாள் விடுமுறை நாள் ஆகும் நேர்வில், அறிவிப்புக் காலம் நீட்டிக்கப்படும் மற்றும் மின் துண்டிப்பைத் தவிர்ப்பதற்கான கடைசி செலுத்துகை நாளானது அடுத்த பணி நாளாகும்.”

**11. முதன்மை விதித் தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 15ஆம் ஒழுங்குமுறை விதியில், “ பொறியாளர்” என்ற வாசகம் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக, “ மின்பகிர்வு உரிமம்தாரரின் சுட்டியமர்த்தப்பட்ட அதிகார அமைப்பு” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**12. முதன்மை விதித் தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித் தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறை விதியில்,–

''(a),(1)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில், கடைசி வாக்கியத்தில் ''மின்துண்டிப்பு தேதி வரை வரம்பிடப்படலாம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''அத்தகைய உடன்பாட்டுப்பத்திரம் முடிவுறும் தேதி வரை செலுத்தத் தக்கதாகும்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

''(b), (3) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில், முதல் வாக்கியத்தில் ''உரிமம்தாரரின் பொறியாளர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மின் பகிர்வு உரிமம்தாரரின் சுட்டியமர்த்தப்பட்ட அதிகார அமைப்பு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**13. முதன்மை விதித் தொகுப்பின் 18ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித் தொகுப்பின் 18ஆம் ஒழுங்குமுறை விதியில், ''நுகர்வோர் குறைதீர் மன்றம்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, முடிவில் ''இந்தச் சட்டத்தின் படி அமைத்துருவாக்கப்பட்ட'' என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

**14. முதன்மை விதித் தொகுப்பின் 19–(A). புதிய ஒழுங்குமுறை விதியைப் புகுத்துதல்:–**

முதன்மை விதித்தொகுப்பின் 19ஆம் ஒழுங்குமுறை விதிக்குப் பின்பு, பின்வரும் புதிய ஒழுங்குமுறை விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

''19–(A) மின்வழங்கலைத் துண்டிப்பதற்கான மற்றும் மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதை நீக்குவதற்கான நடைமுறை:–

(1) சட்டத்தின் 126ஆம் பிரிவின்படி குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு அலுவலர், தாமே முற்பட்டோ அல்லது வளாகம் எதிலும் மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவது பொறுத்து நம்பத்தக்க தகவலைப் பெற்றதன் பேரிலோ, அத்தகைய வளாகத்தை ஆய்வு செய்யலாம்.

(2) கணக்கீட்டு அலுவலர், இணைக்கப்பட்ட சுமை, முத்திரையின் நிலைமை, மின்னளவியின் செயற்பாடு, அறிவிப்பு செய்யப்பட்ட முறைகேடு எதனையும் / காணப்படும் மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதை பதிவுசெய்தல் போன்ற விவரங்களைக் கொண்ட அறிக்கையைத் தயாரித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் சுட்டப்பட்ட அறிக்கை, மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவது காணப்பட்டதா அல்லது இல்லையா என்ற உண்மையை இறுதியான சான்று மெய்ப்பிக்கிறதா என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அத்தகைய சான்றின் விவரங்கள் அந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(4) மின்சாரம் அனுமதியில்லாமல் பயன்படுத்தப்படுவதாக ஐயம் ஏற்படும் நேர்வில், தற்காலிகக் கணக்கீட்டு ஆணையானது, சட்டத்தின் 126(2) ஆம் பிரிவின்படி மாநில அரசால் செய்யப்பட்ட விதிகளின்படி வகுத்துரைக்கப்பட்ட முறையில் பிறப்பிக்கப்படுதல் வேண்டும். மற்றும் இறுதியான கணக்கீட்டு ஆணையானது, சட்டத்தின் 126ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பின்வரும் நடைமுறையின் மூலம் கணக்கீட்டு அலுவலரால் பிறப்பிக்கப்படுதல் வேண்டும். மின் கட்டண நிர்ணயம் பொறுத்து வெவ்வேறு வீதங்கள் நுகர்வுக்கான படிமுறை வீதங்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, தொடர்புடைய மின்னிணைப்பிற்காக கட்டணவீத அமைப்பில் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தளவு கட்டணவீதம் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(5) சட்டத்தின் 126ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்படி குறிப்பிடப்பட்டவாறு சம்பந்தப்பட்ட உரிமம்தாரரிடம் கணக்கிடப்பட்ட தொகையினை அந்த நபர் வைப்பீடு செய்யாதிருப்பாரானால், சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், அத்தகைய கணக்கிடப்பட்ட தொகையை வசூலிப்பதற்கு முற்படலாம் மற்றும் சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்டவாறு மேலுமான நடவடிக்கையை எடுக்கலாம்.

(6) அந்த நபரிடமிருந்து கணக்கிடப்பட்டத் தொகையை வசூலிப்பதற்காக இந்தச் சட்டத்தின் செயற்படுத்தும் வகைமுறைகள் மற்றும் இந்த விதித் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறைகள், பின்பற்றப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட உரிமம்தாரரால் அனுமதிக்கப்பட்ட மற்றும் அந்த நபரால் ஒத்துக் கொள்ளப்பட்ட தவணைகளில் எதனையும் செலுத்தத் தவறுதல் உள்ளடங்கலாக, கணக்கிடப்பட்ட தொகையைச் செலுத்தத் தவறும் நேர்வில், சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், எழுத்து வடிவிலான பதினைந்து நாட்கள் அறிவிப்பு கொடுத்த பின்பு, மின் வழங்கலைத் துண்டிக்கலாம்.

(7) அந்த நபர் மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதற்கான காரணத்தை, அது கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, உடனேயே சம்பந்தப்பட்ட உரிமம்தாரருக்கு எழுத்துவடிவிலான தகவல் கொடுத்த பின்பு நீக்குதல் வேண்டும். சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், தமக்குத் திருப்தி ஏற்படும் வரையில் சரியானதென நிரூபித்து அனுமதியில்லாமல் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான காரணத்தை நீக்குதல் குறித்து அந்த நபரின் கோரிக்கையை சரிபார்த்தல் வேண்டும். அந்த நபர் மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதற்கான காரணத்தை நீக்கத் தவறுகையில், அவ்வாறு மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதற்கான காரணம் நீக்கப்படும் வரையில், மற்றும் சம்பந்தப்பட்ட உரிமம்தாரரால் உண்மையென நிரூபிக்கப்படும் மற்றும் பதிவு செய்யப்படும் வரையில் அல்லது மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்தும் குற்றச்சாட்டுரைக்கான (Allegation) பொறுப்பு அந்த நபரால் மறுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உரிமம்தாரரால் ஏற்கப்படும் வரையில், மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துதல் பொருட்டு கட்டணங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்.

**15. முதன்மை விதித் தொகுப்பின் 22ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்:–**

முதன்மை விதித் தொகுப்பின் 22ஆம் ஒழுங்குமுறை விதியில், –

(a), (1) ஆம் உள் – ஒழுங்குமுறை விதியில், ''பன்னிரெண்டு மணி நேரங்கள்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''நகரப் பகுதியை பொறுத்தவரை மற்றும் இருபத்தி நான்கு மணி நேரங்கள் ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை'' என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(b), (2) ஆம் உள் – ஒழுங்குமுறை விதியில், அதன் முடிவில், பின்வரும் வாக்கியம் சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது,

''அத்தகைய திருத்தப்பெற்ற சோதனை அறிக்கையானது, நுகர்வோரால் அல்லது வளாகத்தின் சட்டப்படியான உரிமையாளரால் அல்லது சட்டப்படியாகக் குடியிருப்பவரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்''.

**16. முதன்மை விதித் தொகுப்பின் 23ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல் :–**

முதன்மை விதித் தொகுப்பின் 23ஆம் ஒழுங்குமுறை விதியில், –

(i) இரண்டாம் வாக்கியத்தில், ''சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகள் உடனடிப் பார்வைக்காக மறுபடியும் தாக்கல் செய்யப்பட்டது'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகள், அதோடு கூட மின்கட்டணங்களை கணக்கிடுவதற்கான மின்வழங்கலைத் துண்டிப்பதற்கான, மற்றும் மின்சாரம் திருடப்படும் நேர்வில், மின்னளவி, மின்தொடர், மின் எந்திரத் தொகுதி, மற்றும் பிற ஆய்வுக் கருவிகளை அகற்றுதல் மற்றும் மின்சார வழிதிருப்புதலை, மின்சாரத் திருட்டை அல்லது மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதை, அல்லது கீழே விவரிக்கப்பட்டுள்ள மின் எந்திரத் தொகுதி, மின்தொடர்கள் அல்லது மின்னளவியை மோசடியாக மாற்றுவதை, கைப்பற்றுவதை அல்லது சேதம் விளைவிப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடைமுறை என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii). (A) உள்–ஒழுங்குமுறை விதிக்குப் பின்பு, பின்வரும் புதிய உள்–ஒழுங்குமுறை விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

**"**(AA) மின்கட்டணங்களை கணக்கிடுவதற்கான, மின் வழங்கலைத் துண்டிப்பதற்கான மற்றும் கீழே விவரிக்கப்பட்டுள்ள மின் திருட்டைப் பொறுத்தவரை, மின்னளவி, மின்தொடர், மின் எந்திரத் தொகுதி மற்றும் பிற ஆய்கருவிகளை அகற்றுவதற்கான நடைமுறை **:–**

(1) (இதில் இதற்குப் பின்பு அதிகாரம் பெற்ற அலுவலர் என்று குறிப்பிடப்படும்) சட்டத்தின் 135ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி அதிகாரம் பெற்ற அலுவலர், ஒன்று தானே முற்பட்டோ அல்லது வளாகம் எதிலும் மின்திருட்டு பொறுத்து, நம்பத் தகுந்த தகவலைப் பெற்றதன் பேரிலோ, அத்தகைய இடம் அல்லது வளாகத்தில் ஆய்வு செய்யலாம். (சோதனை மற்றும் கைப்பற்றுகை தொடர்பாக, 1973ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் வகைமுறைகள், இந்தச் சட்டத்தின்படியான சோதனைகள் மற்றும் கைப்பற்றுகைக்கு, எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, பொருந்தும்).

(2) அதிகாரம் பெற்ற அலுவலர், அந்த இடத்தில் அல்லது வளாகத்தில் தொடர்புடைய மின்சுமை, முத்திரையின் நிலைமை, மின்னளவியின் செயற்பாடு மற்றும் பதிவு, மின்திருட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்படும் செயல்வகை போன்ற விவரங்களை அளிக்கிற அறிக்கையைத் தயார் செய்தல் வேண்டும். தொடர்புடைய உரிமம்தாரரின் மின்னளவி, அளவிடும் சாதனங்கள், ஆய்கருவிகள், மின்தொடர்வடம் அல்லது மின் எந்திரத் தொகுதிக்குச் சேதம் அல்லது அழிவு எதுவும் உரியவாறு அல்லது துல்லியமாகஅளவிடுவதில் அல்லது மின் திருட்டிற்காக தலையிடுகிற குற்றம் சுமத்தப்பட்டவரால் செய்யப்படுதலானது அல்லது செய்யப்படுவதற்கு அனுமதித்தலானது, மின்திருட்டு கண்டுபிடிக்கப்பட்டது அல்லது கண்டுபிடிக்கப்படவில்லை என்ற உண்மையை நிரூபிக்கும் இறுதியான சான்றைச் சுட்டிக்காட்டும் அறிக்கையில் உரியவாறு பதிவு செய்யப்படுதல் வேண்டும். அதிகாரம் பெற்ற அலுவலர் இயலக்கக்கூடியவிடத்து, மின்திருட்டினை கண்டுபிடிப்பதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை எடுத்துக்காட்டுவதற்குப் புகைப்படம் எடுக்கலாம் அல்லது விளக்கவரைபடம் தயாரிக்கலாம் மற்றும் அத்தகைய புகைப்படம் அல்லது வரைபடம் ஆய்வு அறிக்கையின் பகுதியோடு சேர்ந்துவிடும்.

(3) மின்னளவியை அல்லது மின் அளவிடும் சாதனத்தை, மின்னளவி இணைப்புப் பாதுகாப்பு முத்திரையை மோசடியாக மாற்றுவதன் மூலம் அல்லது போலியான முத்திரை மூலம் அசல் முத்திரையை மாற்றுதல் மூலம் செய்யப்படும் சந்தேகப்படும்படியான திருட்டினைப் பொறுத்தவரை, மின்னளவி அகற்றப்பட்டு, முத்திரையிடப்படுதல் வேண்டும் மற்றும் தனிப்பட்ட அறிக்கையானது, மின்னளவி மற்றும் மின் அளவிடும் சாதனம் அகற்றப்பட்டு முத்திரையிடப்படும் என்ற நிபந்தனையின் பேரில், தயார் செய்யப்படுதல் வேண்டும். முத்திரையிடப்படும் சமயத்தில், குற்றம் சுமத்தப்பட்டவரின், அதோடு கூட சம்பந்தப்பட்ட உரிமம்தாரரின் அலுவலர்களின் மற்றும் பிற சாட்சி எவரின் கையொப்பம் அந்த அறிக்கையில் பெறப்படுதல் வேண்டும். இந்த அறிக்கையானது, ஆய்வறிக்கையோடு சேர்ந்துவிடும். அங்கீகரிக்கப்பட்ட சோதனை ஆய்வகத்தில் மின்னளவி சோதனை செய்யப்படுவதன் மூலம் மற்றும் உரிய வீதத்திலான அளவீட்டுச் சாதனத்தின் மூலமும் மின் வழங்கிடு மீண்டும் அளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நேர்வுகளில், சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், வளாகத்தில் இணைப்புச் சுமையை சரிபார்த்தலும் மற்றும் வளாகத்திலுள்ள சாதனத்தின் விவரங்களை ஆய்வறிக்கையில் பதிவு செய்தலும் வேண்டும்.

(4) மின்னளவி அல்லது மின் அளவீட்டுச் சாதனத்தின் மாற்றுவழி மூலம் செல்லும் மின் திருட்டு கண்டுபிடிக்கப்படுமிடத்து அல்லது மின் சுமையானது, முழுவதுமாக அல்லது பகுதியாக அல்லது குற்றம் சுமத்தப்பட்டவரின் மின்னிணைப்பு நேரடியாக மின்தொடர்கள், மின்வடங்கள் அல்லது மின் நிலையத்திலிருந்து இணைப்பு பெறப்பட்டது காணப்படுமிடத்து, அத்தகைய வளாகத்திற்கு மின் வழங்கல் சம்பந்தப்பட்ட உரிமம்தாரரால் அதேயிடத்தில் உடனடியாக துண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட உரிமம்தாரருக்கு மனநிறைவு அளிக்கும் வகையில், திருட்டுக்கான காரணப் பொருள் அகற்றப்பட்ட பின்பு, மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எடுத்துரைப்பதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டவுடன், கணக்கீட்டு பட்டிக்கான கட்டணங்களை செலுத்துவதற்கு அவர் ஏற்புறுதி (Undertaking) கொடுத்த பின்பு மட்டுமே மின்னிணைப்பு மீண்டும் அளிக்கப்படுதல் வேண்டும்.

(5) உரிமம்தாரரின் மின்தொடர்கள், உரிமம்தாரரின் மின்வடங்கள் அல்லது மின் நிலையத்திலிருந்து நேரடியாக எடுத்தல் மூலமான திருட்டைப் பொறுத்தவரை, குற்றம் சுமத்தப்பட்டவர் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்ட பணியமைப்பிலுள்ள உரிமம்தாரரின் மின்னளவி எதனையும் அனுமதியில்லாமல் மின்னிணைப்பு செய்வாரானால் அல்லது மறுபடியும் மின்னிணைப்பு செய்வாரானால், அத்தகைய வளாகத்திற்கு அல்லது இடத்திற்குரிய மின்னிணைப்பு சம்பந்தப்பட்ட உரிமம்தாரரால் உடனடியாகத் துண்டிக்கப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், பின்னதாக மேற்கொண்டும் மின்சாரம் திருடப்படுவதைத் தடுப்பதற்கு தம்முடைய மின்தொடர், மின்வடம் அல்லது மின்நிலையத்திலிருந்து அதனை அகற்றலாம் அல்லது அவற்றிலிருந்து வழி திருப்பலாம் அல்லது திசைமாற்றலாம். ஆனால், அத்தகைய நடவடிக்கை, மற்ற நுகர்வோர்களுக்கு தரமான மின்வழங்கலில் அல்லது மின்பகிர்ந்தளிப்பதில் அசௌகரியம் ஏற்படுத்துதல் ஆகாது.

(6) அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் அதிகாரம் பெற்ற அலுவலருடன் செல்லும் சம்பந்தப்பட்ட உரிமம்தாரரின் பிற அலுவலர் எவரும் மேலேயுள்ள நேர்வுகள் அனைத்திலுமுள்ள ஆய்வறிக்கையில் கையொப்பமிடுதல் வேண்டும் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவரின் அல்லது அவருடைய சார்பாளரின் கையொப்பங்களைப் பெறுதல் வேண்டும், மற்றும் அது, உரிய ரசீதின்படி உடனடியாக மனையிடத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரிடம் அல்லது அவருடைய சார்பாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவரால், ஒன்று கையொப்பமிட அல்லது ஏற்றுக்கொள்ள அல்லது ரசீது கொடுக்க மறுக்கப்படும் நேர்வில், ஆய்வறிக்கையின் நகல் வளாகத்தின் உள்ளே அல்லது வெளியே எடுப்பானதோர் இடத்தில் ஒட்டப்படலாம் மற்றும் அந்த வளாகத்தின் எடுப்பான இடத்தில் ஒட்டப்பட்டுள்ள அறிக்கையின் நகல் அந்தப்படிக்கு ஆய்வறிக்கையின் அலுவலக நகலின் மீது குறிப்பு ஒன்று பதிவு செய்யப்படலாம். அறிக்கையின் நகல் ஒன்று, ஆய்வு செய்யப்பட்ட மூன்று நாட்களுக்குள் பதிவு அஞ்சலில் வளாகத்தினுடைய குற்றம் சுமத்தப்பட்டவருக்கு பின்னதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

**(7)** மின்திருட்டு வழக்கு ஒன்று நிரூபிக்கப்படுமிடத்து, அதிகாரம் பெற்ற அலுவலர், இந்த விதித்தொகுப்பின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் **8**இல் கொடுக்கப்பட்டுள்ள கணக்கீட்டு சூத்திரத்தின்படி கடந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான மின்நுகர்வின் அளவினை கணக்கிடுதல் வேண்டும் மற்றும் பொருந்தத்தக்க மின்கட்டண வீதத்தின் (அதாவது திருடப்பட்ட மின்சாரம் பயன்படுத்தப்பட்ட நேரத்திற்காகப் பொருந்தத்தக்க கட்டண வீதம்) இரண்டு மடங்கினை அத்தகைய நுகர்விற்கான கட்டணங்களுக்காக தற்காலிக கணக்கீட்டு ஆணையைத் தயார் செய்தல் வேண்டும். அதிகாரம் பெற்ற அலுவலர், அத்தகைய பட்டியலுக்கான கால அளவானது, அது உண்மைகள் மூலம் அல்லது குற்றம் சுமத்தப்பட்டவரின் எடுத்துரைத்தலின்போது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் மூலம் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் கவனிக்கப்பட்ட அத்தகைய பிற சான்று எதன் மூலமும் நிரூபிக்கப்படுமானால், குறைக்கப்படலாம். மின்னணு அளவிகள் பொருத்தப்பட்டு, காலமுறை தோறும் சுமை வளைவுகள் ஆராயப்படுகிறவிடத்தெல்லாம், திருட்டுக்காலம், அறிவியல் பூர்வமாக நிர்ணயிக்கப்படக் கூடிய சரியான காலத்திற்கு வரம்பிடப்படும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கணக்கீட்டு ஆணையில் பட்டியல் கால அளவினைக் குறைப்பதற்கான காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும். ஆணையத்தின் கட்டணவீத ஆணையின் மூலம் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின்படி மின்னளவி மூலம் பதிவு செய்யப்பட்ட மின் நுகர்வு நீங்கலாக, மேற்சொன்ன படிவம் **8**–இல் சுட்டப்பட்டுள்ள சூத்திரத்தின்படி வந்தமைந்த மின்நுகர்வுக்கு கட்டணம் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

**(8)** ஆய்வு செய்யப்பட்ட ஐந்து நாட்களுக்குள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், ஆய்வு செய்யும்போது பதிவு செய்யப்பட்ட சான்றின் அடிப்படையில் மின் திருட்டிற்கான கட்டணங்களுக்காக இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் **9**–இல் தற்காலிக கணக்கீட்டு ஆணையை குற்றம் சுமத்தப்பட்டவருக்குச் சார்வு செய்தல் வேண்டும். அந்த ஆணையில், பதிலுரை சமர்ப்பிக்கப்படவேண்டிய நேரம், நாள் மற்றும் இடம், எந்த அலுவலருக்கு முகவரியிடப்பட்டிருந்ததோ, அந்த அலுவலரின் பதவிப் பெயர் / முகவரி ஆகியவை தெளிவாக விளக்கிக் கூறப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர், தம்முடைய எடுத்துரைத்தலை, தற்காலிக கணக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு வேண்டுறுத்தப்படுதல் வேண்டும்.

**(9)** மோசடியாக மாற்றப்பட்ட மின்னளவி மூலமான சந்தேகப்படும் திருட்டினைப் பொறுத்தவரை, அத்தகைய மாற்றப்பட்ட மின்னளவி வெளியே எடுக்கப்பட்டு **(3)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் வகுத்துரைக்கப்பட்டவாறு ஆய்வு செய்யும் சமயத்தில் முத்திரையிடப்பட்டு, சம்பந்தப்பட்ட உரிமம்தாரரால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மூன்றாம் தரப்பினரின் அங்கீகரிக்கப்பட்ட மின்னளவி சோதனை ஆய்வத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட உரிமம்தாரரால் மூன்றாம் தரப்பினரின் மின்னளவி சோதனைக்கு ஏற்பாடு செய்யப்படும் நேரம் வரையில், மாநில அரசின் தலைமை மின் ஆய்வாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவருக்கு, அத்தகைய மின்னளவி சோதனை ஆய்வத்தில் அத்தகைய மின்னளவி சோதனை செய்யப்படுவதை பார்ப்பதற்காக ஏழு பணி நாட்களுடனான அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும். அந்த அறிவிப்பில், சந்தேகப்படுமாறு மோசடியாக மாற்றப்பட்ட மின்னளவி சோதனை செய்யப்படும் நேரம், நாள் மற்றும் இடம் தெளிவாக சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவர், அந்த சோதனையை பார்வையிட அனுமதிக்கப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர், அதனைப் பார்வையிட்ட பின்பு, சோதனை முடிவறிக்கையில் உரியவாறு கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவர் சோதனையைப் பார்வையிடுவதற்கு குறிக்கப்பட்ட நாளன்றும் அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட நேரத்திலும் மின்னளவி சோதனை ஆய்வத்திற்கு வந்து சேரமுடியவில்லையானால் / சோதனை முடிவுகளில் கையொப்பமிட மறுப்பாரானால், சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவர் இல்லாமல் சோதனை முடிவுகளில் கையொப்பமிட மறுப்புடன் சோதனையைச் செய்தல் வேண்டும் மற்றும் சோதனைத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் பதிவு அஞ்சல் மூலம் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு முடிவுகளின் நகல் ஒன்று அனுப்பப்படுதல் வேண்டும்.

**(10)** அந்த மின்னளவி அத்தகைய மின்னளவி சோதனை ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்டுள்ளவிடத்தான நேர்விலும், மின்திருட்டு வழக்கு நிரூபிக்கப்படுகிறவிடத்தான நேர்விலும், **(7)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் குறித்துரைக்கப்பட்டவாறு கணக்கீட்டு நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

**(11)** குற்றம் சுமத்தப்பட்டவர், ஏழு பணிநாட்களுக்குள் தற்காலிக ஆணைக்கு பதிலளிக்காதிருக்கும் நேர்வில், சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், தற்காலிக கணக்கீட்டு ஆணைக்கு எதிராக வசூலிப்பு தொடங்க நடவடிக்கை எடுக்கலாம்.

**(12)** அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவரின் பதிலுரை சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு பணிநாட்களுக்குள், தற்காலிக கணக்கீட்டு ஆணைத் தேதியிலிருந்து ஏழு பணிநாட்களுக்குள் அது செய்யப்படுமானால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவருடன் நேர்முக விசாரணைக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக, அதிகாரம் பெற்ற அலுவலர், அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவருக்கு, அவரை நேர்முக விசாரணைக்கு அனுமதிக்க மூன்று நாட்களுக்குள் அறிவிப்பு சார்பு செய்தல் வேண்டும், மற்றும் அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவரால், விசாரணையின்போது, புதிய பொருண்மைகள் அல்லது ஆவணங்கள், எவையேனுமிருப்பின், அவை கூடுதலாகச் சமர்ப்பிக்கப்படுவதற்கு அனுமதித்தலும் வேண்டும். அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவர் இந்த விஷயத்தில் அந்த அறிவிப்பிற்குப் பதிலளிக்காதிருப்பாரானால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இதில் இதற்குப் பின்பு, குறித்துரைக்கப்பட்ட நடைமுறையின்படி இறுதியான கணக்கீட்டு ஆணையைப் பிறப்பிப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

**(13)** நேர்முக விசாரணைக்கு முன்பு, எந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முன்பு நேர்முக விசாரணை நடத்தப்பட்டதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கிடைக்கக்கூடிய ஏதாயினும் அனைத்து ஆவணங்கள், குற்றம் சுமத்தப்பட்டவரால் சமர்ப்பிக்கப்பட்டவைகள், பதிவுருவின்படியான பொருண்மைகள், நுகர்வு முறை ஆகியவற்றைக் கவனமாக பரிசீலித்த பின்பு, பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.

**(14)** அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கடந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான மின்நுகர்வு அளவினை கணக்கிடுதல் வேண்டும். கணக்கீட்டு அலுவலர், கடந்த ஓராண்டிற்கு அல்லது அதற்கு மேலும் தொடர்பான மின்னிணைப்பின் மின் நுகர்வு முறையை ஆய்வு செய்யலாம். அவசியமானால், அதனை, மின்னிணைப்பின் சுமை/ உற்பத்திமுறை அல்லது மின்வெளிப்பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சந்தேகிக்கப்படும் திருட்டைப் பொறுத்தவரை, நுகர்வு முறையானது கணக்கிடப்பட்ட நுகர்வுடன் ஏற்றதாக இருக்குமானால், அல்லது முடிவைப் பொறுத்தவரை, சந்தேகப்படும் திருட்டு நிரூபிக்கப்படவில்லையென்றால், மேலுமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதல் ஆகாது, மற்றும் அந்த முடிவு, மூன்று பணிநாட்களுக்குள் உரிய ரசீது பெற்று குற்றம் சுமத்தப்பட்டவருக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

**(15)** குற்றம் சுமத்தப்பட்டவரால் சமர்ப்பிக்கப்பட்ட பொருண்மைகளைப் பரிசீலனை செய்து, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் விசாரணை தேதியிலிருந்து ஏழு பணி நாட்களுக்குள், இந்த விதித்தொகுப்பின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 10–இல் இறுதி கணக்கீட்டு ஆணையை பிறப்பித்தல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர் நேர்முக விசாரணைக்கு பதிலளிக்கவில்லையென்றால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், தற்காலிக கணக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் இறுதி கணக்கீட்டு ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும். இறுதி கணக்கீட்டு ஆணையானது, ஆய்வறிக்கையின், குற்றம் சுமத்தப்பட்டவர் எழுத்து வடிவிலான பதிலுரையில், அதோடு கூட தம்முடைய நேர்முக விசாரணையின்போது அவரால் சமர்ப்பிக்கப்பட்டவைகளில் மற்றும் அதனை ஏற்பதற்கான அல்லது நிராகரிப்பதற்கான காரணங்கள் மற்றும் **(12)** ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின்படியான கணக்கீட்டு கட்டணங்கள் ஆகியவற்றின் சுருக்க உரையினைக் கொண்டதாகும். இறுதி கணக்கீட்டு ஆணையில், கட்டணங்கள், எவையேனுமிருப்பின், அவை கணக்கீடு செய்யப்பட்ட காலஅளவின் போது குற்றம் சுமத்தப்பட்டவரால் செலுத்தப்பட்டு, அதிகாரம் கொடுக்கப்படுமானால், அத்தகைய காலஅளவிற்கான பட்டியல் இரட்டிப்பாவதைத் தடுப்பதற்கு, உரியவாறு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**(16)** குற்றம் சுமத்தப்பட்டவர், இறுதி கணக்கீட்டு ஆணையைப் பெற்றதிலிருந்து ஏழு பணிநாட்களுக்குள் செலுத்துகை செய்வதற்கு வேண்டுறுத்தப்படுதல் வேண்டும்.

**(17)** அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், குற்றம் சுமத்தப்பட்டவரின் நிதிநிலைமை மற்றும் பிற நிலைமைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, குற்றம் சுமத்தப்பட்டவரால் செய்யப்படும் எழுத்துவடிவிலான வேண்டுதலின் பேரிலும், விதிகளின்படி கொடுபட வேண்டிய உபரித்தொகையுடன் சேர்த்து செலுத்துகைப் பட்டியலுக்கு இணங்க அவரால் கொடுக்கப்படும் ஏற்புறுதியின் பேரிலும், செலுத்துகையின் கடைசித் தேதியை நீட்டிக்கலாம் அல்லது செலுத்துகை தவணைகளில் செய்யப்படுவதற்கு ஒப்புதலளிக்கலாம். அந்தத் தொகை, நீட்டிக்கப்பட்ட கடைசிதேதி மற்றும் தவணைகளிலான செலுத்துகைக் காலம் ஆகியவை குறிப்பிடத்தக்க ஆணையில் தெளிவாக விளக்கிக் கூறப்படுதல் வேண்டும். குறிப்பிடத்தக்க ஆணையின் நகல், அதே நாளில் உரிய ரசீது பெற்றதன் பேரில், குற்றம் சுமத்தப்பட்டவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

**(18)** அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் அனுமதிக்கப்பட்ட மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவரால் ஒத்துக்கொள்ளப்பட்ட பட்டியல் தவணைகளில் எதனையும் செலுத்தத் தவறுதல் உள்ளடங்கலாக கணக்கீட்டுத் தொகையைச் செலுத்தத் தவறும் நேர்வில், தொடர்புடைய உரிமம்தாரர், எழுத்துவடிவிலான பதினைந்து நாட்கள் அறிவிப்பு கொடுத்த பின்பு, மின் வழங்கலைத் துண்டித்தல், மின்னளவி மற்றும் மின்னிணைப்பு தொடரை மற்றும் இந்த இணைப்பிற்கு மின் வழங்கும் மின்தளவாடங்களையும் கூட அகற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், குற்றம் சுமத்தப்பட்டவர் அறிவிப்புக்கால அளவிற்குள் செலுத்துகை செய்வாரானால், அந்த வகைக்குப் பொருந்தத்தக்க உபரித் தொகைகள் கூட இந்த விதித் தொகுப்பில் வகுத்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்பட வேண்டியதாகும்.

**(19)** முறையாக மின்னிணைப்பு பெறப்படாதிருக்கிற வளாகத்திலுள்ள மின்திருட்டாக இருந்து, அது கண்டுபிடிக்கப்பட்டுள்ள நேர்வில், தொடர்புடைய உரிமம்தாரர், அத்தகைய வளாகத்தின் மின்னிணைப்பினை உடனடியாகத் துண்டித்தல் வேண்டும். மின் திருட்டிற்காகக் கணக்கீடு செய்யப்பட்ட கட்டணங்கள் முழுவதும் செலுத்தப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டவர் கொடுபட வேண்டியவைகளை கொடுத்துத் தீர்த்தபின்பும், வேண்டுறுத்தப்படும் வழக்கமான நடைமுறைகளை நிறைவேற்றிய பின்பு முறைப்படியான புதிய இணைப்பு கிடைத்த பின்பும் மட்டுமே அத்தகைய வளாகத்தில் மின்வழங்கலானது, திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

**(20)** குற்றம் சுமத்தப்பட்டவர் செலுத்துகை செய்யாதிருப்பாரானால், சம்பந்தப்பட்ட உரிமம்தாரர், அத்தகைய ஆணைக்கெதிராக அவருக்கு கொடுபட வேண்டியவைகளை வசூலிக்க முற்படலாம் மற்றும் சட்டத்தின்படி அனுமதிக்கப்படுகிறவாறான மேலுமான நடவடிக்கையை எடுக்கலாம்.

**(21)** தற்காலிக அல்லது இறுதி கணக்கீட்டு ஆணை நியாயமான சிரத்தையுடன் சார்வு செய்யப்படுவதற்கு நபர் எவரும் கிடைக்காதிருப்பாரானால் அல்லது எவரேனும் நபர், அத்தகைய ஆணையை ஏற்பதற்கு மறுப்பாரானால், அல்லது அத்தகைய ஆணையைப் பெறுவதற்கு தவிர்ப்பாரானால், அது இரண்டு சாட்சிகளின் முன்னிலையில், ஆய்வு செய்யப்பட்ட வளாகத்தில் ஒட்டப்படுதல் வேண்டும், மற்றும், அத்தகைய நேர்வில், அந்தப்படிக்கான ஒரு மேற்குறிப்பு அத்தகைய ஆணையின் நகலில் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு ஒட்டப்பட்ட கணக்கீட்டு ஆணை அந்த நபருக்கு அல்லது அந்த வளாகத்தில் குடியிருப்பவருக்கு உரியவாறு சார்வு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**(22)** மேலேயுள்ள நேர்வுகள் அனைத்திலும், ஒட்டு மொத்தப் பணமும் ஏற்கெனவே வசூலிக்கப்பட்டுள்ள நேர்வுகள் தவிர, உரிமம்தாரர், ஆய்வு செய்துள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் சேகரிக்கப்பட்ட பொருள்களின் அடிப்படையில் மின் திருட்டினைச் செய்துள்ளதாகச் சந்தேகப்படும் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிராக, இந்தச்சட்டத்தின் **151**ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டவாறு முறையீட்டைத் தாக்கல் செய்தல் வேண்டும். இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் **11**–இல் உள்ளவாறு அறிவிப்பினை ஒன்றாகச் சேர்ப்பதைப் பொறுத்தவரை, அறிவிப்பு வழங்கப்படலாம் மற்றும் சட்டத்தின் **152**ஆம் பிரிவின்படி தொகை வசூலிக்கப்படலாம்.

**விளக்கம் :–** இந்த ஒழுங்குமுறை விதியின் மற்றும் 23–BB ஒழுங்குமுறை விதியின் நோக்கத்திற்காக :–

(a) ''குற்றம் சுமத்தப்பட்டவர்'' என்பது, மின்திருட்டு கண்டுபிடிக்கப்படும் தொடர்புற்ற காலத்தில் அல்லது அதில் குடியிருப்பவர் அல்லது அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது பிரதிநிதி அல்லது வளாகத்தில் குடியிருக்கிற அல்லது அதன் அனுபோகத்திலிருக்கிற அல்லது அதனைப் பொறுப்பில் கொண்டிருக்கிற பிறநபர் எவரும் அல்லது மின்திருட்டினால் பயன் பெற்றுள்ள பிற நபர் எவரும் என்று பொருள் தந்து உள்ளடக்கும்.

(b) ''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது, அவர் தொடர்புடைய உரிமம்தாரரின் அலுவலராக இல்லாதிருக்கும் நேர்வில், இந்த விதித்தொகுப்பின் படி அதிகாரமளிக்கப்பட்ட மின்திருட்டைக் கணக்கிடுதல் உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறு, மின் திருட்டைக் கையாளும் நோக்கத்திற்காக மாநில அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராக நியமனம் செய்யப்பட்ட அல்லது அமர்த்தப்பட்ட ஓர் அலுவலர் என்று பொருள்தந்து உள்ளடக்கும்.

(c) ''தொடர்புடைய உரிமம்தாரர் '' என்பது, மின்திருட்டு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிற உரிமம்தாரர் அல்லது அவருடைய உரிமையளிக்கப்பட்டவர் அல்லது அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது பிரதிநிதி என்று பொருள்தந்து உள்ளடக்கும்.

(iii) (B) உள்–ஒழுங்குமுறை விதிக்குப் பின்பு, பின்வரும், புதிய உள்–ஒழுங்குமுறைவிதி புகுத்தப்படுதல்வேண்டும், அதாவது:–

(BB) கீழே விவரிக்கப்பட்டவாறு மின் வழி 'மாற்றலை' மின் திருட்டை அல்லது அனுமதியில்லாமல் மின்சாரத்தைப் பயன்படுத்துதலை அல்லது அனுமதியில்லாமல் மின் தளவாடம், மின் தொடர்கள் அல்லது மின்னளவியை நிலைகுலைத்தலை, கைப்பற்றுதலை அல்லது சேதம் விளைவித்தலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் :

(1) 2006 ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின்னளவிகள் பொருத்துதல் மற்றும் இயக்கம்) ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டவாறும், ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட பிற ஏதேனும் உத்தரவுகளின்படியும் உரிமம்தாரர், பல்வேறு மின்னளவிகளை வழக்கமான சோதனை மற்றும் சான்றளித்தலுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) அனைத்துத் தொழிலக புதிய மின்னிணைப்புகளில் அல்லது ஒவ்வோர் ஆண்டிலும் இருந்து வரும் தொழிலக மின்னிணைப்புகளில் குறைந்தது 10 விழுக்காடு மின்னளவிகள் பொருத்துதல் மற்றும் இயக்கத்தின் மீது, இந்தச் சட்டத்தின்படியான அதிகார அமைப்பால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டவாறு மோசடியாக மாற்றுவதைத் தடுக்கும் சிறப்பியல்புகளுடன் மின்னளவிப் பெட்டிகள் மற்றும் மின்னளவிகளைத் திருட முடியாதவாறு வகை செய்தவற்கு உரிமம்தாரர் ஏற்பாடு செய்தல் வேண்டும். இது, பிறவகைகளின் சுமை / தேவை 18.6 கி.வாட் (kw) மேலே இருக்கிற அவற்றிக்கும் நீட்டிக்கப்படலாம்.

(3) அனைத்துப் புதிய தொழிலக உயர் அழுத்தம் (HT) மற்றும் மின்னளவை அமைப்புகள், காந்தத் தூண்டல், அதிர்வு, நிலைமின்னியல் அதி உயர் அழுத்த (EHT) மின்னிறக்கம், மின்னோட்ட மாறுதல்கள், பேரலை மின்னழுத்தம், சாய்வான தொங்குநிலை, கிளையலைகள் அல்லது பிற ஏதேனும் காரணி போன்ற புறத்தாக்கங்களிலிருந்து பாதுகாப்பளிக்கப்படுதல் வேண்டும். இது, பிற இனங்களுக்கும், அதன் தற்போதைய ஒப்பந்தச் சுமை / தேவை 18.6(kw)கி வாட்டிற்கு மேற்படுகிறவிடத்து நீட்டிக்கப்படலாம்.

(4) உரிமம்தாரர், மின் திருட்டு அல்லது மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துதலை அல்லது மின் தளவாடம், மின் தொடர் அல்லது மின்னளவியை நிலைமாற்றுவதை, கைப்பற்றுவதை அல்லது சேதப்படுத்துவதைத் தடுப்பதை உறுதி செய்வதற்கு தம்முடைய அலுவலர்களால் ஒழுங்காக அல்லது முறை தவறாது வணிகத்தில் ஆய்வு செய்வதற்காக ஏற்பாடு செய்தல் வேண்டும். மொத்த மின்னிணைப்புகளில் குறைந்தது 5 விழுக்காடு ஆண்டுதோறும் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் 126, 135 (2) ஆகிய பிரிவுகளில் அடங்கியுள்ள வகைமுறைகள் திறம்பட நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(5) குறிப்பாக மின் திருட்டு நடக்கக்கூடிய பகுதிகளில், உரிமம்தாரரால் மின் திருட்டு வழக்குகளைக் கண்டுபிடிப்பதில் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

(6) உரிமம்தாரர், ஒரு அமைப்பினை விஸ்தரித்தல்வேண்டும் மற்றும் 18.6 (kw) கிலோவாட்டும் அதற்கு மேலும் ஒப்பந்த தேவையுள்ள உயர்அழுத்த (HT) மின்னிணைப்புகள் மற்றும் தாழ்வழுத்த (LT) மின்னிணைப்புகள் உள்ளடங்களாக, அதிக மதிப்பு நுகர்வு செய்யும் நுகர்வோரை மாதாந்திரமாக முறையாகக் கண்காணிப்புச் செய்வதற்கு மூன்று மாதங்களுக்குள் அந்த இடத்தில் அமைப்பினை விஸ்தரித்தல் வேண்டும். நுகர்விலுள்ள மாறுபாடுகள் கவனமாகப் பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும். ஐயம் ஏற்படும் நேரங்களில், உடனடியாக ஆய்வு செய்ய உரிமம்தாரர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(7) உரிமம்தாரர், உயர்அழுத்த (HT) மின்னிணைப்புகள் அனைத்தின் மீதும், சேய்மை மின்னளவுக்கருவிகளை, முன்னுரிமையின் பேரில் பொருத்துவற்கு முயற்சி செய்தல் வேண்டும், மற்றும் நுகர்வினைக் கண்காணிக்கும் மற்றும் மின் திருட்டினைத் தடுக்கும் நோக்கத்திற்காக, செலவினை சிக்கனமாகச் செய்வது ஆய்வு செய்த பின்பு ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் செயற்படுத்தப்படலாம். உரிமம்தாரர், உயர் மதிப்பு தாழ்வழுத்த மின்னிணைப்புகளின் மீது சேய்மை மின்னளவிகளைப் பொருத்துவற்கு மேலும் முயற்சி செய்தல் வேண்டும்.

(8) உரிமம்தாரர், மின் திருட்டு அல்லது மின்சாரத்தை அனுமதி பெறாமல் பயன்படுத்துவதால் ஏற்படும் வணிக இழப்புகளின் நிலை பொறுத்து மின் திருட்டு அல்லது மின்சாரத்தை அனுமதி பெறாமல் பயன்படுத்துதல் அல்லது மின் தளவாடம், மின்தொடர்கள் அல்லது மின்னளவியின் நிலையைக் குலைத்தல், கைப்பற்றுதல் அல்லது சேதப்படுத்தலுக்கு நேர்மையான நுகர்வோரைச் சம்பந்தப்படுத்துதல் மற்றும் நுகர்வோரின் ஒத்துழைப்பை நாடுதல் பொறுத்து விழிப்புணர்வை கொண்டு வர ஊடகங்கள், தொலைக்காட்சி, செய்தித்தாள் மூலம் மற்றும் உரிமம்தாரரின் நுகர்வோர் பணி தொடர்புடைய அலுவலகங்களில் விளம்பரப் பலகைகள் வைப்பதன் மூலம் உரிய விளம்பரம் செய்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(9) உரிமம்தாரர், மின்னூட்டி வாரியாக (Feeder wise) ஆன இழப்புகளை, மின்சாரத்தை திசைமாற்றுவதை, மின் திருட்டினை அல்லது மின்சாரத்தை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதை, மின்தளவாடம், மின் தொடர்கள், அல்லது மின்னளவியை நிலைகுலைப்பதை, கைப்பற்றுவதை அல்லது அதனை சேதப்படுத்துவதை தடுப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளை மற்றும் அதனுடைய இணையதளத்தில் அந்த ஆண்டின்போது பெறப்பட்ட முடிவுகளைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(10) உரிமம்தாரர், ஆய்வு செய்யும் அலுவலர்களுக்கு, அவர்களின் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பாதுகாப்பு அலுவலர்களை வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும், மற்றும் அதன்பொருட்டான செலவினங்கள் உரிமம்தாரரின் வருடாந்திர வருவாய்த் தேவையின் மூலம் அனுமதிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பாதுகாப்பு பணியாளர்கள், ஆய்வு செய்யும் அலுவலரின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு ஆய்வு செய்யும் அலுவலர்களுடனேயே வழக்கமாகச் செய்தல் வேண்டும்.

(11) உரிமம்தாரர், சந்தேகப்படும் பகுதியில் மின் திருட்டு ஏற்படக்கூடிய இடத்தில் பகிர்மான மின் மாற்றியின் மீது மின்னளவியைப் பொருத்த ஏற்பாடு செய்தல்வேண்டும், மற்றும் அத்தகைய மின்னளவிகளைக் கண்காணித்து, பகிர்மான மின் மாற்றியுடன் இணைக்கப்பட்ட தனிப்பட்ட நுகர்வோரின் மின்னளவிகளின் நுகர்வுடன் அத்தகைய மின்னளவிகளின் நுகர்வினை கண்காணித்தல் வேண்டும். உரிமம்தாரர், பகிர்மான மின்மாற்றிகள் மின்னளவியின் நுகர்விற்கும் பகிர்மான மின் மாற்றியுடன் இணைக்கப்பட்ட தனிப்பட்ட நுகர்வோரின் மின்னளவிகள் நுகர்விற்குமான வேறுபாடு விபரீதமாக இருக்குமானால், தீவிரமான ஆய்வினை அந்தந்தப்பகுதிகளில் செய்தல் வேண்டும்.

(12) உரிமம்தாரர், நேரடியாக, எந்த வழியிலாவது திருட்டினைத் தடுப்பதற்கு, தேவைப்படுமிடத்தெல்லாம், சிறிய திறனுடைய பகிர்மான மின் மாற்றியைப் பயன்படுத்தி திருட்டு நடக்கும் பகுதிகளில் HV அதிக மின் அழுத்த பகிர்மான அமைப்பிற்கு ஏற்பாடு செய்யலாம்.

(13) உரிமம்தாரர், வளாகத்திற்கு வெளியே, ஆனால் எல்லைச் சுவற்றிற்குள் கணக்கெடுக்க, ஆய்வு செய்ய மற்றும் சோதனையிட மற்றும் பிற தொடர்புடைய பணிகளுக்காக எளிதில் அணுகத்தக்க பொருத்தமானதொரு இடத்தில் இருந்து வரும் நுகர்வோரின் மின்னளவிகளை மறுபடியும் வைக்க அதிகாரமுடையவர் ஆவார்.

(14) உரிமம்தாரர், மின்னளவி கணக்கிடுநரின் பகுதியை குறைந்தது ஆண்டிற்கு ஒருமுறை அவர்களுடைய மின்னளவிகளைக் கணக்கிடும் பகுதியானது சுற்றுமுறையில் மாற்றப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல்வேண்டும்.

**17. முதன்மை விதித் தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல் :**

முதன்மை விதித் தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் (3)ஆம் உள்– ஒழுங்குமுறைவிதியின் (அ) கூறில், ''மாநில மின்கட்டமைப்பு விதித் தொகுப்பு'' என்ற சொற்றொடர் விட்டு விடப்படுதல் வேண்டும்.

**18. முதன்மை விதித் தொகுப்பில் "படிவம் 1" என்ற சொற்றொடருக்கு முன்பு "பிற்சேர்க்கை" என்ற சொற்றொடரைப் புகுத்துதல் :**

முதன்மை விதித் தொகுப்பில், [ஒழுங்குமுறை விதி 5 (7) ஐ சுட்டும்] "படிவம்–1'' என்ற சொற்றொடருக்கு முன்பு ''பிற்சேர்க்கை'' என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

**19. முதன்மை விதித் தொகுப்பின் 7ஆம் படிவத்திற்குப் பின்பு 8 முதல் 11 வரையிலான புதிய படிவங்களைச் சேர்த்தல்:**

முதன்மை விதித்தொகுப்பில், 7ஆம் படிவத்திற்குப் பின்பு, மற்றும் அது தொடர்பான பதிவுகளில், பின்வரும் 8 முதல் 11 வரையிலான புதிய படிவங்கள் மற்றும் அது தொடர்பான பதிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன :–

**படிவம் 8**

**[ஒழுங்குமுறைவிதி 23 (AA) (7) ஐப் பார்க்கவும்]**

**மின் திருட்டினைப் பொறுத்தவரை, மின்னாற்றல் அளவினைக்**

**கணக்கிடுவதற்குரிய சூத்திரம்.**

மின் திருட்டினைப் பொறுத்தவரை, மின்னாற்றல் அளவினைக் கணக்கிடுவதற்கான சூத்திரத்தின் படி கணக்கிடுவதற்குப் பின்வரும் காரணிகள் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்:–

(i) சேவையின் வகை.

(ii) இணைக்கப்பட்ட சுமை/ ஒப்பந்தம் பெற்ற தேவை

(iii) சுமைக் காரணி

(iv) (ஊரக/நகரத் / தொழிலக) மின்னூட்டியின் இயல்பு மற்றும் மின்னூட்டியில் மின் வழங்கல் கட்டுப்பாடுகள், கணிக்கப்படவேண்டிய ஒரு நாளுக்கான பயன்பாட்டு நேரங்கள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பின்வருவனவற்றையும் திருட்டின் (காலவரை) குறைந்த கால அளவினையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்:–

- (i) பன்னிரெண்டுமாதங்கள் கால அளவு.
- (ii) செயலகத்துறையினரால் முன் ஆய்வு ஏதேனும் செய்யப்பட்டிருப்பின், அந்த தேதியிலிருந்தான அல்லது மின்னளவி சோதனைப் பிரிவின் கண்டுபிடிப்புத் தேதியிலிருந்தான கால அளவு.
- (iii) மின்னிணைப்புத் தேதியிலிருந்து கண்டுபிடிப்புத் தேதி வரை.
- (iv) மின்னணு மின்னளவிகள் பொருத்தப்படுகிற இடத்தெல்லாம், மற்றும் காலமுறையாக சுமை வளைவுகள் ஆராயப்பட்டு, அறிவியல் ரீதியாக முடிவு செய்யப்பட வேண்டிய சரியான கால அளவிற்கு வரம்பிடப்பட வேண்டிய திருட்டுக் காலஅளவு.
- (v) குற்றம் சுமத்தப்பட்டவரால் முன்னிலைப்படுத்தப்படும் ஆவணத்தின் அடிப்படையில்.
- (vi) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால், தம்முடைய மிகச் சிறந்த தீர்ப்பின்படி, கணக்கிடப்படும் பிற ஏதேனும் நியாயமானக் கால அளவு.

$$U = \frac{L \times LF \times H \times D}{DF}$$

U = கணக்கிடப்பட்ட மின்னாற்றலின் அளவு அலகுகளில் (Unity)

L = சுமை / தேவை kw கிலோவாட்டில்

LF = சுமைக்காரணி.

H = ஒரு நாளில் பயன்படுத்தப்படுவதற்குக் கருதப்பட்ட சுமை நேரங்களின் எண்ணிக்கை.

D = நாட்களில் கணக்கிடப்படும் காலவரை.

DF = வேற்றுமைக்காரணி.

**பின்வரும் அட்டவணைகள், சுமைக்காரணி, திருடப்பட்ட மின்னாற்றலின் பல்வேறுவகைகளுக்கான உபயோகம், நாள் ஒன்றுக்கு உபயோகிக்கும் நேரங்களின் எண்ணிக்கை:—**

**அட்டவணை – A**

| *திருடப்பட்ட மின்னாற்றலின் வகைகளுக்கான உபயோகம்.* | *மாற்றுக் காரணி.* | *சுமைக் காரணி.* | *நாள் ஒன்றுக்கான நேரங்களின் எண்ணிக்கை.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| (காற்று குளிர்பதனிச்சுமை இல்லாமல்) வீட்டு மற்றும் குடிசைகள் உபயோகம் | 1 | 30 விழுக்காடு | 12 |
| (காற்றுகுளிர் பதனிச்சுமையுடன்) வீட்டு உபயோகம் | 1 | மார்ச் முதல் செப்டம்பர் 70 விழுக்காடு | 12 |
| | | பிற மாதங்கள் 30 விழுக்காடு | 12 |
| குடிசைத் தொழில்கள், விசைத்தறிகள் முதலியன உள்ளடங்கலான தொழில்கள் | 1 | 80 விழுக்காடு | B அட்டவணைப்படி |
| பொது விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்கல் | 1 | 100 விழுக்காடு | 8 |
| விவசாயம் | 1 | 100 விழுக்காடு | 10 |
| அனைத்துப் பிற வகைகள் | 1.1 | 90 விழுக்காடு | 12 |

**அட்டவணை – B**

| *எண்.* | *வகை.* | *நாள் ஒன்றுக்கான நேரங்களின் எண்ணிக்கை.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | நாள் ஒன்றுக்கு 14 மணி நேரங்கள் மின் வழங்கலுக்கு மட்டும் ஊரக மின்னூட்டிகளின் உயர் அழுத்தம்— | |
| | *(i)* பகல் நேர முறை மாற்றுப்பணி மட்டும் | 6 |
| | *(ii)* இரவு நேர முறை மாற்றுப்பணி மட்டும் | 8 |
| | *(iii)* பகல் மற்றும் இரவு ஆகிய இரண்டு முறை மாற்றுப்பணி | 14 |
| 2 | 24 மணி நேர மின் வழங்கல் கொண்டுள்ள மின்னூட்டிகளின் உயர் அழுத்தம்— | |
| | *(i)* பகல் நேர முறை மாற்றுப் பணி மட்டும் | 8 |
| | *(ii)* 2 முறை மாற்றுப் பணிகள் | 16 |
| | *(iii)* 3 முறை மாற்றுப் பணிகள் | 24 |

(i) "உபயோக வகைகள்" என்ற வாசகம், சந்தேகிக்கப்படும் திருட்டு மின்னாற்றல் பயன்படுத்தப்படும் நோக்கத்திற்காகச் சுட்டப்படும் அட்டவணை–A-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**உதாரணமாக—**குடிசை மின்னிணைப்பிலுள்ள திருடப்படும் மின்னாற்றல் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்படுமானால், கணக்கீடு "வீட்டு உபயோக வகை"–யின் கீழ் கணக்கிடப்படும். வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுமானால், மேலேயுள்ள, அட்டவணை–A இல் குறிப்பிடப்பட்டவாறு அது "அனைத்துப் பிற வகைகளின்" கீழ் கணக்கிடப்படும்.

(ii) (*a*) உயர் அழுத்த மின்னிணைப்புகளுக்காக, பெருமத் தேவையானது, ஒப்பந்தம் பெற்ற தேவையின் குறுமத்திற்கு உட்பட்டு ஆய்வுநேரத்தில், மொத்தம் இணைக்கப்பட்ட சுமையின் 75 விழுக்காடாக கணக்கிடப்படுதல் வேண்டும். KVA அல்லது KW மாற்றுகைக்காக, திறன்கூறு 0.90 பயன்படுத்தப்படலாம்.

(*b*) தேவைக்கட்டணங்களின் கணக்கீடு:–

பெருமத் தேவைக்கான மின் கட்டண வீதம் உரிய HT–க்கு இரண்டு மடங்கு.

**படிவம் – 9**

**[ஒழுங்குமுறைவிதி 23 (AA) (8)-ஐப் பார்க்கவும்.]**

**2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 135/138-இன்படி மின் திருட்டிற்கான தற்காலிக கணக்கீட்டு அட்டவணை**

**2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 135/138.**

அனுப்புநர்

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

பெறுநர்

(எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)

கடித எண்.......................................................................................................நாளிட்டது.

ஐயா,

பொருள் – மின் திருட்டு – கண்டுபிடிக்கப்பட்டது எஸ்.சி. எண்.................................. தற்காலிக கணக்கீட்டு ஆணை – குறித்து.

பொருள் – நாளிட்ட ஆய்வு அறிக்கை

**1.0.** (ஆய்வுசெய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு)......................................அன்று (நேரம்)..................................இல் மணிகளில் எஸ்.சி. எண்ணிலுள்ள மின்னிணைப்பு............................................................இருப்பிடத்திலுள்ள கதவு எண்........................................... இல், எஸ்.எப். எண்............................................................இல் (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு / திருமதி.....................................................................................பெயரில் இருக்கிறது / இருந்தது அது என்னால், உனது / உங்கள் சார்பாளர் திரு/திருமதி.........................................................முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

**2.0.** ஆய்வின் போது மின் திருட்டு செய்யப்பட்டுள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டது........................................................ ....................................................................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு / அனுமதி பெறாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தைச் செய்வதன் மூலம், நீர் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர். மேலே சொன்ன சட்ட முரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

**3.0.** தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, நேர்மையின்றி மின்சாரம் திருடப்பட்டுள்ளது / சட்டமுரணாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்வதன் பொருட்டு உம்மால் ஏற்பட்ட தோராய இழப்பு ரூ.......................... (..........................................................................ரூபாய்) மற்றும் இதனுடன் கணக்குப் பணித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

**4.0.** மேலே சுட்டப்பட்டவாறான கணக்கீட்டுத் தொகை இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். மற்றபடி, மின்னிணைப்பானது, மேலுமான அறிவிப்பு இன்றி துண்டிக்கப்படுவதற்கு உள்ளாகும்.

**5.0.** செலுத்துவதற்கான அல்லது தவணைகளில் செலுத்துவதற்கான கடைசித் தேதியின் நீட்டிப்பு, விதிகளின்படி கொடுக்கப்படவேண்டிய உபரிக்கட்டணத்துடன் சேர்த்து செலுத்துகைப்பட்டியலுக்கு இணங்கச் செலுத்துவதாகக் கொடுக்கப்பட்ட ஏற்புறுதிக்கு உட்பட்டு தங்களால் எழுத்து வடிவில் செய்யப்பட்ட கோரிக்கையின் பேரில் கீழே கையொப்பமிட்டவரால் பரிசீலிக்கப்படலாம்.

**6.0.** தாங்கள், தற்காலிகக் கணக்கீட்டிற்கு எதிராக, மறுப்புரைகள், எவையேனுமிருப்பின், அவற்றைத்தாக்கல் செய்ய விரும்புவீரானால், இந்த ஆணையைப் பெற்றத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் போதிய மெய்ப்பிப்புடன் கீழே கையொப்பமிட்டவரின் முகவரிக்குத் தங்களுடைய விளக்கத்தினை தாங்கள் அனுப்பலாம். தாங்கள், கீழே கையொப்பமிட்டவரின் முன்பு விசாரணைக் காலத் தொடர்புடைய ஆவணங்களுடன் நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சார்பாளர் மூலமாகவோ ஆஜராவதற்குத் தெரிந்தெடுக்கவும் செய்யலாம்.

**7.0.** தாங்கள் உடனடியாக, இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்கப்படுமாறு கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள,

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்..........................................................,

இணைப்பு :

1. அறிக்கை

2. பதிவுச் செய்யப்பட்ட விவர அறிக்கை (ஏதேனுமிருப்பின்) அதன்

3. மஹசர் – ஆகியவற்றின் நகல்கள்.

நகல் அனுப்பப்படுநர்...........................................................

நகல் பெறுநர்.......................................................................

இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்வு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

* எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும்.

**படிவம்–10**

**(ஒழுங்குமுறை விதி 23 (AA) (15) ஐப் பார்க்கவும்)**

**2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135ஆம் பிரிவின்படி மின் திருட்டிற்கான**

**இறுதிக் கணக்கீட்டு ஆணை**

அனுப்புநர்:

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

பெறுநர்:

(எவருடைய பெயரில் மின்னிணைப்பு
உள்ளதோ அந்த நபரின் அல்லது
குடியிருப்பவரின் அல்லது
அனுபோகதாரர்,
முதலியோரின் முழு முகவரி)

கடித எண்...........................................................................................நாளிட்டது

ஐயா,

பொருள் – மின் திருட்டு – கண்டுபிடிக்கப்பட்டது எஸ்.சி. எண்............................
இறுதிக் கணக்கீட்டு ஆணை – குறித்து.

பொருள் – 1. தற்காலிக கணக்கீட்டு ஆணை......................

2. தங்களின் பதிலுரை........................

1.0. (ஆய்வுசெய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு).......................................அன்று (நேரம்)..................................இல் மணிகளில் எஸ்.சி. எண்ணிலுள்ள மின்னிணைப்பு..........................................................இருப்பிடத்திலுள்ள கதவு எண்...................................... இல், எஸ்.எப். எண்...............................................................இல் (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு / திருமதி...................................................................................பெயரில் இருக்கிறது / இருந்தது அது என்னால், உனது / உங்கள் சார்பாளர் திரு/திருமதி........................................................முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0. ஆய்வின் போது மின் திருட்டு செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டது..................................................... ...............................................................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு/உரிமை இல்லாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தினைச் செய்வதன் மூலம், நீர், உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர். மேலே சொன்ன சட்ட முரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

**3.0** பார்வையில் சுட்டப்பட்டுள்ள தற்காலிகக் கணக்கீட்டு ஆணை தங்களுக்கு வழங்கப்பட்டது மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, தங்களுடைய மறுப்புரைகளைத் தாக்கல் செய்வதற்கும் மற்றும் விசாரணையில் ஆஜராவதற்கும் தாங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.

**4.0** விவரமான ஆய்வின் பேரிலும், தங்களுடைய கடிதத்தில்/நேர்முக விசாரணையின் போது தங்களால் கொடுக்கப்பட்ட விளக்கம், அளிக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் பதிவுருக்களைப் பரிசீலித்ததன் பேரிலும் கீழே விவரிக்கப்பட்டவாறு மின் திருட்டு தங்களால் செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது:—

(அறிவிக்கப்பட்ட விளக்கம் மற்றும் முடிவுகளின்படியான மின் திருட்டை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட நியாயமான/விவரமான ஆணை, திருட்டு உள்ளது தொடர்பாக மேற்சொன்ன மின் திருட்டு பொறுத்து நுகர்வோரின் ஈடுபாடு அல்லது பங்கு தொடர்பாக உரிமம்தாரரின் கோரிக்கைக்கு ஆதரவான பொருட்கள் தொடர்பாக செய்யப்பட வேண்டிய சுட்டுகை).

**5.0** தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறைவிதிகளுக்கிணங்க, நேர்மையின்றி மின்சாரம் திருடப்பட்டுள்ளது. சட்டமுரணான மின் வழங்கலுக்கான கணக்கீட்டுத் தொகை ரூ.....................(ரூபாய்..............................................................) மற்றும் இத்துடன் கணக்குப் பணித்தாள் இணைக்கப்பட்டுள்ளது. மேலே சுட்டப்பட்டுள்ள கணக்கீட்டுத் தொகையானது, இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். மற்றபடி, மின்னிணைப்பு, மேலுமான அறிவிப்பு இல்லாமல் துண்டிக்கப்படுவதற்கு உள்ளாகும்.

**6.0** செலுத்துவதற்கான அல்லது தவணைகளில் செலுத்துவதற்கான கடைசித் தேதியின் நீட்டிப்பு, கொடுக்கப்படவேண்டிய உபரிக்கட்டணத்துடன் சேர்த்து செலுத்துகைப்பட்டியலுக்கு இணங்கச் செலுத்துவதாகக் கொடுக்கப்பட்ட ஏற்புறுதிக்கு உட்பட்டு தங்களால் எழுத்து வடிவில் செய்யப்பட்ட கோரிக்கையின் பேரில் கீழே கையொப்பமிட்டவரால் பரிசீலிக்கப்படலாம்.

தாங்கள் உடனடியாக, இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்கப்படுமாறு கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.............................................................

இணைப்பு :

1. அறிக்கை
2. பதிவுச் செய்யப்பட்ட விவர அறிக்கை (ஏதேனுமிருப்பின்) அதன்
3. மஹசர் –
4. தற்காலிகக் கணக்கீட்டு ஆணை – ஆகியவற்றின் நகல்கள்.

நகல் அனுப்பப்படுநர்.............................................................

நகல் பெறுநர்.........................................................................

இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்வு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

**படிவம் – 11**

**(ஒழுங்குமுறை விதி 23 (AA) (22)ஐப் பார்க்கவும் )**

**2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 152ஆம் பிரிவின்படி**

**குற்ற நிறுத்திசைவு (Compounding of offence)**

அனுப்புநர்

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

பெறுநர்

(எவருடைய பெயரில் மின்னிணைப்பு
உள்ளதோ அந்த நபரின் அல்லது
குடியிருப்பவரின் அல்லது
அனுபோகதாரர்,
முதலியோரின் முழு முகவரி)

கடித எண்..................................................................................................நாளிட்டது

ஐயா,

**பொருள் –** மின் திருட்டு – கண்டுபிடிக்கப்பட்டது எஸ்.சி. எண்..................................
தொகை நிறுத்திசைவுக்கான ஆணை – குறித்து.

1.0 (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு)..........................................அன்று (நேரம்)......................................................இல் மணிகளில் எஸ்.சி. எண்ணிலுள்ள மின்னிணைப்பு.................................................இருப்பிடத்திலுள்ள கதவு எண்...................................இல், எஸ்.எப். எண்.......................................இல் (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு / திருமதி.....................................................பெயரில் இருக்கிறது / இருந்தது அது என்னால், உனது / உங்கள் சார்பாளர் திரு/திருமதி............................................................முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0 ஆய்வின் போது மின் திருட்டு செய்யப்பட்டுள்ள என்பது கண்டுபிடிக்கப்பட்டது................................................ ........................................................................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு / அனுமதி பெறாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தினைச் செய்வதன் மூலம், நீர் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்.

3.0 மேலே சொன்ன சட்ட முரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

4.0 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 152ஆம் பிரிவின்படி குற்ற நிறுத்திசைவுக்கு தாங்கள் விருப்பம் தெரிவித்துள்ளீர்கள். மேலே சொல்லப்பட்டவாறு குற்ற நிறுத்திசைவுக்காக, ரூ........................................................................... (ரூபாய்.....................................................................) செலுத்துமாறு தாங்கள் வேண்டுறுத்தப்படுநீர்கள்.

தங்கள் உண்மையுள்ள
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்............................................................

இணைப்பு :
கணக்குப் பணித்தாள்

நகல் பெறுநர்..............................................................................

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

சென்னை–600 018
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–5, 23–08–2007 நாளிட்டது)**
**[கடித எண். த.மி.ஒ.ஆ / AD(L)F அறிவிக்கைகள்/ D753/ 2007]**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/875/2008.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், மின்சாரக் கட்டணங்கள் முதலியவற்றை வசூலிப்பதற்காக வகை செய்யும், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பை, 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு குறித்துரைத்துள்ளதாலும், அறிவிக்கை செய்துள்ளதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பினை, 2007 ஜுன் 13ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் குறித்துரைத்திருப்பதாலும், அறிவிக்கை செய்திருப்பதாலும், இந்திய அரசின் அறிவிக்கையின் அடிப்படையில், அரசாணை 790(E)இல், 2005ஆம் ஆண்டு மின்சார (இடர்ப்பாடுகளை நீக்குதல்) ஆணை பின்வரும் மின்சார வழங்கல் விதித் தொகுப்பில் சேர்க்கப்படும் :–

(i) உரிய நீதிமன்றத்தால் நீதிமுறையில் தீர்ப்பளிப்பது நடப்பிலுள்ள மின் திருட்டைப் பொறுத்தவரை, செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணங்களின் கணக்கீட்டு முறைகள் :

(ii) மின் திருட்டு அல்லது அனுமதி பெறா மின் பயன்பாட்டினைப் பொறுத்தவரை, மின் வழங்கலைத் துண்டித்தல் மற்றும் மின்னளவி, மின் தொடர்கள், மின் தளவாடம் மற்றும் பிற கருவிகளை அகற்றுதல், மற்றும்

(iii)மின் வழிமாற்றல், மின் திருட்டு அல்லது அனுமதி பெறாமல் மின்சாரத்தைப் பயன்படுத்துவதை அல்லது நிலை குலைத்தலை, கைப்பற்றுகையை அல்லது மின் தளவாடம், மின் தொடர்கள் அல்லது மின்னளவியைச் சேதப்படுத்துவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் இந்திய அரசு 2007 மே 29ஆம் நாளிட்ட அறிவிக்கையில், அனுமதிபெறாமல் மின்சாரத்தைப் பயன்படுத்துதல், மின் திருட்டு முதலியவை தொடர்பான பல்வேறு பிரிவுகளில் திருத்தங்களைக் கொண்டுள்ள 2007ஆம் ஆண்டு மின்சாரத் (திருத்தம்) சட்டத்தை வெளியிட்டுள்ளதாலும், தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின்(மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின்படி அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம், (இதில் இதன் பின்பு முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பைத் திருத்தம் செய்வதற்கு பின் வரும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது, அதாவது :–

### 1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :

(a) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (இரண்டாம் திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2007 ஜுன் 12ஆம் நாளிட்ட இந்திய அரசிதழில் எந்தத் தேதியில் 2007ஆம் ஆண்டு மின்சாரத் (திருத்தம்) சட்டத்தின், வகைமுறைகள் நடைமுறைக்கு வரும் என்று மத்திய அரசு குறிப்பிடுகிறதோ அந்தத் தேதியான 2007 ஜுன் 15 அன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

### 2. முதன்மை விதித் தொகுப்பின் 23ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல் :

உள்–ஒழுங்குமுறைவிதி 23 (AA) க்கு பதிலாக, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

23(AA) சட்டத்தின் 135ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டவாறான மின் திருட்டைப் பொறுத்தவரை, மின்கட்டணங்களை கணக்கிடுவதற்கான, மின் வழங்கலைத் துண்டிப்பதற்கான மற்றும் மின்னளவி, மின்தொடர், மின் தளவாடம் மற்றும் பிற கருவிகளை அகற்றுவதற்கான நடைமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) (இதில் இதன் பின்பு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்று குறிப்பிடப்படும்) சட்டத்தின் 135 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், ஒன்று தானாக முற்பட்டோ அல்லது வளாகம் எதிலுமுள்ள மின் திருட்டு தொடர்பாக நம்பத்தகுந்த தகவலைப் பெற்றதன் பேரிலோ, அத்தகைய இடம் அல்லது வளாகத்தினை ஆய்வு செய்யலாம் (சோதனை மற்றும் கைப்பற்றுகை தொடர்பான, 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படியான வகைமுறைகள், எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, இந்தச் சட்டத்தின்படியான சோதனைகள் மற்றும் கைப்பற்றுகைகளுக்கும் பொருந்தும்).

(2) (a) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அந்த இடத்தில் அல்லது வளாகத்தில் இணைக்கப்பட்ட சுமை, முத்திரைகளின் நிலை, மின்னளவியின் செயல் மற்றும் பதிவு, மின் திருட்டிற்காகக் கைக்கொள்ளப்படும் செயல்வகை போன்ற விவரங்களைத் தெரிவிக்கும் அறிக்கையைத் தயார் செய்தல் வேண்டும். தொடர்புடைய உரிமம்தாரர் அல்லது மின் வழங்குநரின் மின்னளவி, மின்னளவைச் சாதனங்கள், கருவிகள், மின் தொடர், மின் வடம் அல்லது மின் தளவாடத்திற்கு சேதம் அல்லது அழிவு எதுவும் முறையாக அல்லது துல்லியமாக மின்சாரத்தை அளவிடும் அளவியல் குறுக்கிடுகிற அல்லது மின் திருட்டிற்காக குற்றம் சுமத்தப்பட்ட நபரால் செய்யப்படுகிறவிடத்து அல்லது செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறவிடத்து மின் திருட்டு கண்டு பிடிக்கப்பட்டது அல்லது கண்டுபிடிக்கப்படவில்லை என்ற உண்மையை இறுதியான சான்று மெய்ப்பித்ததா என்பதைச் சுட்டிக்காட்டும்

அறிக்கையில் உரியவாறு பதிவு செய்தலும் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இயலக்கூடிய இடத்தெல்லாம், மின் திருட்டு செய்யப்பட்டுள்ளதைக் கண்டுபிடிப்பதற்கான ஏற்பாடுகளை விளக்கும் நிழற்படம் எடுக்கலாம் அல்லது விளக்கப்படம் தயார் செய்யலாம் மற்றும் அத்தகைய நிழற்படம் அல்லது விளக்கப்படம் ஆய்வு அறிக்கையோடு சேர்ந்துவிடும். அத்தகைய மின் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டதன் பேரில், ஆணையத்தால் இந்த நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட உரிமதாரரின் அல்லது, நேர்வுக்கேற்ப, மின் வழங்குநரின் அலுவலர், உடனடியாக மின் வழங்கல் தொடரைத் துண்டிக்கலாம் மற்றும் ஆய்வு செய்துள்ள கணக்கீட்டு அலுவலரால் சேகரிக்கப்பட்ட சான்றுப் பொருட்களின் அடிப்படையில் சட்டத்தின் 135 (1A) பிரிவில் குறிப்பிடப்பட்ட நடைமுறையின்படி காவல் நிலையத்தில் முறையீட்டைத் தாக்கல் செய்தல் வேண்டும். வளாகத்தின் மின் வழங்கல், சட்டத்தின் 135 (1A) பிரிவின் மூன்றாம் வரம்புரையின் நிபந்தனையை நிறைவு செய்த பின்பு மட்டுமே மீட்டுத் தரப் படுதல் வேண்டும்.

(b) சட்டத்தின் 135ஆம் பிரிவின் (1A) உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மேற்சொன்ன செயல்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் நிறைவேற்றுவதற்கு, சட்டத்தின் 135ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (a) முதல் (c) வரையுள்ள கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட செயல்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் செய்வதற்கு தமிழ்நாடு அரசால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமம்தாரரின் அல்லது மின் வழங்குநரின் அதே அலுவலர்களுக்கு ஆணையம் அதிகாரமளிக்கிறது.

(3) மின்னளவியை அல்லது மின்னளவிடும் சாதனத்தை, நிலைகுலைப்பு மின்னளவி இணைப்புப் பாதுகாப்பு முத்திரையை நிலைகுலைப்பதன் மூலம் அல்லது போலியான முத்திரை மூலம் அசல் முத்திரைக்குப் பதிலாக வைப்பதன் மூலம் சந்தேகப்படும் திருட்டைப் பொறுத்தவரை, மின்னளவி அகற்றப்பட்டு முத்திரையிடப்படுதல் வேண்டும். மற்றும் தனிப்பட்ட அறிக்கை ஒன்று, மின்னளவிடும் சாதனம் அகற்றப்பட்டு முத்திரையிடப்படும் என்ற நிபந்தனையின் பேரில் தயாரிக்கப்படுதல் வேண்டும். முத்திரையிடப்படும் சமயத்தில், குற்றம் சுமத்தப்பட்டவரின் மற்றும் தொடர்புடைய உரிமம்தாரரின் அல்லது, நேர்வுக்கேற்ப, மின் வழங்குநரின் அலுவலர்களின் கையொப்பங்கள் அந்த அறிக்கையில் பெறப்படுதல் வேண்டும். இந்த அறிக்கை, ஆய்வு அறிக்கையோடு சேர்ந்து விடும். மின் வழங்கலானது, அங்கீகரிக்கப்பட்ட சோதனை ஆய்வகத்தில் மின்னளவி சோதனை செய்யப்படுவதன் மூலமும், மற்றும் (2)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் குறித்துரைக்கப்பட்டவாறான நிபந்தனையை நிறைவு செய்வதற்கு உட்பட்டு உரிய வீதத்திலான மின்னளவிடும் சாதனத்தின் மூலமும் மட்டுமே மீட்டுத்தரப்படுதல் வேண்டும். அத்தகைய நேர்வுகளில், தொடர்புடைய உரிமம்தாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, வழங்குநர் வளாகத்தில் இணைக்கப்பட்ட சுமையைச் சரிபார்த்தலும் மற்றும் ஆய்வு அறிக்கையில், வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சாதனத்தின் விவரங்களையும் பதிவு செய்தல் வேண்டும்.

(4) மின்னளவி அல்லது மின்னளவிடப்படும் சாதனத்தின் குறுக்குப்பாதையின் மூலமான மின் திருட்டு கண்டுபிடிக்கப்படுகிறவிடத்தான நேர்வுகளில், மற்றும் மின்சுமை, முழுவதுமாக அல்லது பகுதியாக, அல்லது குற்றம் சுமத்தப்பட்டவரின் மின்னிணைப்பு, அத்தகைய வளாகத்திற்குரிய மின் தொடர்கள், மின் வடங்கள் அல்லது மின் தளவாடம், மின் வழங்கலுடன் நேரடியாக இணைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படுகிறவிடத்து (2)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்டவாறு உடனடியாக துண்டிக்கப்படுதல் வேண்டும். மற்றும் தொடர்புடைய உரிமதாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, வழங்குநருக்குத் திருப்தியளிக்கும் வகையிலும் மற்றும் (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான நிபந்தனையை நிறைவு செய்வதற்கு உட்பட்டும் திருட்டிற்கான காரணம் அகற்றப்பட்ட பின்பு மட்டுமே மின்னிணைப்பு மீட்டுத் தரப்படுதல் வேண்டும்.

(5) உரிமதாரரின் அல்லது வழங்குநரின் மின் தொடர்கள், மின் வடங்கள், அல்லது உரிமதாரரின் அல்லது வழங்குநரின் மின் தளவாடத்திலிருந்து நேரடியாக மின்சாரம் எடுத்தலின் மூலமான திருட்டாக இருக்கும் நேர்வில், துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பிலிருந்து உரிமம்தாரரின் அல்லது வழங்குநரின் மின்னளவி எதனையும் குற்றம் சுமத்தப்பட்டவர் அனுமதி பெறாமல் இணைத்திருந்தால் அல்லது மறுபடியும் இணைத்திருந்தால், பிறகு அத்தகைய வளாகங்களுக்கு அல்லது இடத்திற்குரிய மின்னிணைப்பு (2) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு உடனே துண்டிக்கப்படுதல் வேண்டும். தொடர்புடைய உரிமதாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, வழங்குநர், மேலுமான மின் திருட்டைத் தடுப்பதற்குத் தம்முடைய மின்வடம் அல்லது மின்தளவாடத்தினை பின்னதாக அகற்றலாம் அல்லது மின் வழிமாற்றலாம் அல்லது திசைமாற்றலாம், ஆனால், அத்தகைய செயல், பிற நுகர்வோருக்கு தரமான மின் வழங்கல் அளிப்பதில் அசௌகரியம் எதனையும் விளைவித்தலோ அல்லது மின் வழங்கலில் இடையூறு விளைவித்தலோ ஆகாது.

(6) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருடன் சேர்ந்து போகும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மற்றும் தொடர்புடைய உரிமதாரரின் அல்லது, நேர்வுக்கேற்ப, வழங்குநரின் பிற அலுவலர் எவரும், மேலேயுள்ள நேர்வுகள் அனைத்திலும் ஆய்வு அறிக்கையில் கையொப்பமிடுதல் வேண்டும் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவரின் அல்லது அவருடைய சார்பாளரின் கையொப்பங்களையும் பெறுதல் வேண்டும் மற்றும் அது உரிய ரசீதின்படி உடனடியாக மனையிடத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர் ஒன்று கையொப்பமிடுவதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு அல்லது ரசீது கொடுப்பதற்கு மறுக்கப்படும் நேர்வில், ஆய்வு அறிக்கையின்படி, ஒன்று வளாகத்தில் உள்ளே அல்லது வெளியே எடுப்பானதொரு இடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும். மற்றும் அந்தப்படிக்கு ஆய்வு அறிக்கையின் அலுவலகப்படியின் மீது குறிப்பு பதிவு செய்யப்பட்ட அந்த அறிக்கையின்படியானது, வளாகத்தின் எடுப்பானதொரு இடத்தில் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். அறிக்கையின்படி ஒன்று, ஆய்வு செய்யப்பட்ட மூன்று நாட்களுக்குள் பதிவு அஞ்சலில் வளாகத்தினுடைய குற்றம் சுமத்தப்பட்டவருக்கு பின்னதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(7) மின் திருட்டு செய்யப்பட்டுள்ளது என்று நிரூபிக்கப்படுகிறவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இந்த விதித்தொகுப்பிற்குரிய பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 8–இல் கொடுக்கப்பட்டுள்ள கணக்கீட்டு சூத்திரத்தின்படி கடந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான மின் நுகர்வின் அளவினைக் கணக்கிடுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நுகர்விற்காக பொருந்தத்தக்க கட்டண வீதத்தின் (அதாவது திருடப்பட்ட மின்சாரத்தினை பயன்படுத்தும் நோக்கத்திற்காக பொருந்தத்தக்கக் கட்டண வீதம்) இரண்டு மடங்குகள் கட்டணங்களுக்காகத் தற்காலிக கணக்கீட்டு ஆணையைத் தயார் செய்தல் வேண்டும். மற்றும் உரிய ரசீதின்படி குற்றம் சுமத்தப்பட்டவருக்குச் சார்வு செய்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய

பட்டியலிடலுக்கான காலஅளவை, அது உண்மைகள் அல்லது குற்றம் சுமத்தப்பட்டவரின் எடுத்துரைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் மூலம் கவனிக்கப்பட்ட அத்தகைய பிற சான்று எதன் மூலமாவது நிரூபிக்கப்படுமானால், குறைக்கலாம். மின்னனு அளவிகள் பொருத்தப்பட்டு காலமுறை தோறும் சுமை வளைவுகள் அறியப்படுகிற இடத்தெல்லாம், மின் திருட்டுக் காலஅளவு, அறிவியல்பூர்வமாக நிர்ணயிக்கப்படும் உண்மையான காலஅளவிற்கு வரம்பிடப்படுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பட்டியலிடல் கால அளவிலுள்ள அத்தகைய குறைப்பிற்கான காரணங்களை கணக்கீட்டு ஆணையில் பதிவு செய்தல் வேண்டும். மேற்சொன்ன படிவம் 8–இல் குறிப்பிடப்பட்ட சூத்திரத்தின்படி அடையப் பெற்ற மின் நுகர்வு, ஆணையத்தின் மின் கட்டண வீத ஆணையின் மூலம் குறித்துரைக்கப்பட்ட வீதத்தின்படி அளவியினால் பதிவு செய்யப்பட்ட மின் நுகர்வு நீங்கலாக, கட்டணம் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(8) ஆய்வின் ஐந்து நாட்களுக்குள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், ஆய்வின்போது பதிவு செய்யப்பட்ட சான்றின் அடிப்படையில் மின் திருட்டிற்கான கட்டணங்களுக்காக இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 9–இல் தற்காலிக கணக்கீட்டு ஆணையை குற்றம் சுமத்தப்பட்டவருக்குச் சார்வு செய்தல்வேண்டும். அந்த ஆணையில், பதிலுரை அனுப்பப்பட வேண்டிய காலம், நாள், மற்றும் இடம், மற்றும் எவருக்கு அது முகவரியிடப்பட வேண்டுமோ அந்த அலுவலரின் பதவிப் பெயர்/ முகவரி ஆகியவை தெளிவாக விளக்கிக் கூறப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர், தற்காலிகக் கணக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் தம்முடைய எடுத்துரைத்தலை அனுப்புமாறு வேண்டுறுத்தப்படுதல் வேண்டும்.

(9) சந்தேகப்படும் திருட்டு நிலை குலைக்கப்பட்ட மின்னளவி மூலம் செய்யப்படும் நேர்வில், அத்தகைய நிலை குலைக்கப்பட்ட மின்னளவி (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் வகுத்துரைக்கப்பட்டவாறு வெளியே எடுக்கப்பட்டு, ஆய்வின் போது முத்திரையிடப்பட்டு, உரிமம்தாரரால் அல்லது, நேர்வுக்கேற்ப, சம்பந்தப்பட்ட வழங்குநரால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மூன்றாம் தரப்பினர் அங்கீகரிக்கப்பட்ட சோதனை ஆய்வகத்திற்கு அல்லது மாநில அரசின் தலைமை மின்சார ஆய்வாளருக்கு, அத்தகைய காலம் வரையில் மூன்றாம் தரப்பினர் மின்னளவி சோதனை ஏற்பாடு உரிமம்தாரரால் அல்லது, நேர்வுக்கேற்ப, சம்பந்தப்பட்ட வழங்குநரால் நிறுவப்படுவதற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர், அத்தகைய மின்னளவி சோதனை ஆய்வகத்தில் அத்தகைய மின்னளவியின் சோதனையைப் பார்வையிடுவதற்காக ஏழு பணி நாட்கள் அறிவிப்பு வழங்கப்படுதல் வேண்டும். அந்த அறிவிப்பில், சந்தேகப்படக்கூடிய நிலைகுலைக்கப்பட்ட மின்னளவி சோதனை செய்யப்படும் காலம், நாள், மற்றும் இடம் ஆகியவை தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவர் சோதனையைப் பார்வையிட அனுமதிக்கப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர் அதனைப் பார்வையிட்ட பின்பு, சோதனை முடிவு அறிக்கையில் உரியவாறு கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவர், சோதனையைப் பார்வையிடுவதற்கு அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட குறிப்பிட்ட நாள் மற்றும் காலத்தில் மின்னளவி சோதனை ஆய்வகத்திற்கு வரவில்லையானால் அல்லது சோதனை முடிவுகளில் கையொப்பமிட மறுப்பாரானால், உரிமம்தாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, சம்பந்தப்பட்ட வழங்குநர், அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவர் இல்லாமல் சோதனையைச் செய்தல் வேண்டும் மற்றும் சோதனைத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் பதிவு அஞ்சல் மூலம் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு முடிவின் நகல் ஒன்று அனுப்பப்படுதல் வேண்டும்.

(10) அத்தகைய மின்னளவி சோதனை ஆய்வகத்தில் மின்னளவி சோதனை செய்யப்பட்டுள்ளவிடத்தான நேர்விலும் மின் திருட்டு வழக்கு நிரூபிக்கப்படுகிறவிடத்தும், (7) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் குறித்துரைக்கப்பட்டவாறு கணக்கீட்டிற்கான நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(11) குற்றம் சுமத்தப்பட்டவர், ஏழு பணி நாட்களுக்குள் தற்காலிக ஆணைக்குப் பதிலளிக்காதிருக்கும் நேர்வில், உரிமம்தாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, தொடர்புடைய வழங்குநர் தற்காலிக கணக்கீட்டு ஆணைக்கு எதிராக வசூலிப்பைத் தொடங்க முற்படலாம்.

(12) அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவரின் பதிலுரை அனுப்பப்பட்டதிலிருந்து ஏழு பணி நாட்களுக்குள், தற்காலிகக் கணக்கீட்டு ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து ஏழு பணி நாட்களுக்குள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவருடன் நேரடி விசாரணைக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இந்த நோக்கத்திற்காக அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவருக்கு, அவரை நேர்முக விசாரணைக்கு அனுமதிக்கிற மூன்று நாட்கள் அறிவிப்பைச் சார்வு செய்தல் வேண்டும். மற்றும் அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவரால் விசாரணையின் போது, புதிய பொருண்மைகள் அல்லது ஆவணங்களைக் கூடுதலாகப் பணிவுடன் முன்வைத்தல் எதனையும் செய்யவும் அனுமதித்தல் வேண்டும். அத்தகைய குற்றம் சுமத்தப்பட்டவர், இந்த விஷயம் தொடர்பான அறிவிப்பிற்கு பதிலளிக்கவில்லை என்றால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இதில் இதன் பின்பு, குறித்துரைக்கப்பட்ட நடைமுறையின்படி, இறுதி கணக்கீட்டு ஆணை பிறப்பிக்க முற்படுதல் வேண்டும்.

(13) நேர்முக விசாரணைக்கு முன்பு, எவருக்கு முன்பு நேர்முக விசாரணை நடத்தப்பட வேண்டுமோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கிடைக்கக்கூடிய எதுவாயினும், அனைத்து ஆவணங்கள், குற்றம் சுமத்தப்பட்டவரால் செய்யப்பட்ட முன்வைத்தல்கள், பதிவுருவிலுள்ள பொருண்மைகள் நுகரும் முறை ஆகியவற்றை கவனமாகப் பரிசீலித்த பின்பு, இந்த வழக்கை பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.

(14) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கடந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான மின் நுகர்வின் அளவினைக் கணக்கிடுதல் வேண்டும். கணக்கீட்டு அலுவலர், கடந்த ஓர் ஆண்டிற்கு அல்லது அதற்கு மேலுமான காலத்திற்கு தொடர்புடைய மின்னிணைப்பின் மின் நுகர்வு முறையை ஆராயலாம். அவசியமாயின், அதனை, மின்னிணைப்பின் சுமை உற்பத்திமுறை அல்லது வெளிப்பாடுடனும் கூட ஒப்பிட்டுப் பார்க்கலாம். கணக்கிடப்பட்ட நுகர்வுக்கு ஏற்றதாக நுகர்வுமுறை இருக்குமானால், சந்தேகப்படக்கூடிய திருட்டைப் பொறுத்து அல்லது சந்தேகப்படக்கூடிய திருட்டு நிரூபிக்கப்படவில்லை என்றால் முடிவைப் பொருத்தவரை, மேலுமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதல் ஆகாது மற்றும் அந்த முடிவு, மூன்று பணி நாட்களுக்குள் உரிய ரசீதின்படி குற்றம் சுமத்தப்பட்டவருக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் வளாகத்திற்குரிய மின் வழங்கல், உடனடியாக மீட்டுத்தரப்படுதல் வேண்டும்.

**(15)** குற்றம் சுமத்தப்பட்டவரால் பணிந்து முன் வைக்கப்பட்ட பொருண்மைகளை பரிசீலிக்கையில், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், விசாரணைத் தேதியிலிருந்து ஏழு பணி நாட்களுக்குள், இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கை **10**இல் உள்ள படிவம் **10**இல் இறுதி கணக்கீட்டு ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர் நேர்முக விசாரணையில் பதிலளிக்கவில்லை என்றால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், தற்காலிக கணக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் இறுதி கணக்கீட்டு ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும். இந்தக் குறிப்பிடத்தக்க ஆணையானது, ஆய்வு அறிக்கையின் சுருக்க உரை, குற்றம் சுமத்தப்பட்டவருடைய பதிலுரையிலும் அதோடு தம்முடைய நேர்முக விசாரணையிலும் அவரால் செய்யப்பட்ட முன் வைத்தல்கள் மற்றும் அதனை ஏற்பதற்கான அல்லது நிராகரிப்பதற்கான காரணங்கள் மற்றும் **(12)**ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின்படியான கணக்கீட்டுக் கட்டணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். இறுதிக் கணக்கீட்டு ஆணையில், கட்டணங்கள், எவையேனுமிருப்பின், அவை, எந்தக்கால அளவிற்காகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதோ அந்தக் கால அளவின் போது குற்றம் சுமத்தப்பட்டவரால் செலுத்தப்பட்டவை அதிகாரமளிக்கப்படுமானால், அத்தகைய காலஅளவிற்கு மறுபடியும் பட்டியலிடுதலை தவிர்ப்பதற்கு, உரியவாறு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**(16)** குறிப்பிடத்தக்க ஆணையில், இறுதி கணக்கீட்டுத் தொகை மற்றும் கடைசித் தேதி ஆகியவை, தெளிவாக விளக்கிக் கூறப்படுதல் வேண்டும். குறிப்பிடத்தக்க ஆணையின் நகல் ஒன்று, அதே நாளில் உரிய ரசீதின்படி குற்றம் சுமத்தப்பட்டவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

**(17)** குற்றம் சுமத்தப்பட்டவர், இறுதி கணக்கீட்டு ஆணையைப் பெற்ற ஏழு பணி நாட்களுக்குள் செலுத்துகை செய்வதற்கு வேண்டுறுத்தப்படுதல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவரால் வைப்பீட்டுத் தொகை அல்லது கணக்கீட்டுத் தொகை அல்லது மின் கட்டணங்கள் செலுத்தப்படுவதன்பேரில், வளாகத்திற்கு மின் வழங்கல், சட்டத்தின் **135 (1A)**பிரிவின் மூன்றாம் வரம்புரையில் சுட்டப்பட்டவாறு மீட்டுத் தரப்படுதல் வேண்டும்.

**(18)** கணக்கீட்டுத் தொகை செலுத்துவதில் தவறுகை செய்யும் நேர்வில், உரிமம்தாரர் அல்லது, நேர்வுக் கேற்ப, தொடர்புடைய மின் வழங்குநர், எழுத்து வடிவிலான பதினைந்து நாட்கள் அறிவிப்பு கொடுத்த பின்பு, இந்த மின்னிணைப்பிற்கு மின் வழங்கல் கொடுப்பதற்கு மின்னளவி மற்றும் மின்னிணைப்புத் தொடர், மின் தளவாடம் ஆகியவற்றை அகற்றுதல் வேண்டும். ஆயினும், குற்றம் சுமத்தப்பட்டவர் அறிவிப்புக் காலஅளவிற்குள், செலுத்துகை செய்வாரானால், இந்த இனத்திற்குப் பொருந்தத்தக்க உபரிக் கட்டணமும் கூட, இந்த விதித் தொகுப்பில் வகுத்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்படத்தக்கதாகும்.

**(19)** இந்த வளாகத்திலுள்ள மின் திருட்டானது, முறையான மின்னிணைப்பிலிருந்து செய்யப்படவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளவிடத்தான நேர்வில், உரிமம்தாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, தொடர்புடைய மின் வழங்குநர் அத்தகைய வளாகத்திற்கு மின் வழங்கலை உடனடியாகத் துண்டித்தல் வேண்டும். அத்தகைய வளாகங்களில், மின் வழங்கல், உபரிக்கட்டணம், ஏதேனுமிருப்பின், அதனை, மின் திருட்டிற்காக கணக்கிடப்பட்ட கட்டணங்களின் பொருட்டு செலுத்தப்படவேண்டியவைகளை குற்றம் சுமத்தப்பட்டவர் முழுவதுமாகத் தீர்வு செய்துள்ள பின்பு மற்றும் தேவைப்படும் நடைமுறைகளை நிறைவு செய்தபின்பு, முறையான புதிய மின்னிணைப்பினை பயன்படுத்தியுள்ள பின்பு மட்டுமே கொடுக்கப்படுதல் வேண்டும்.

**(20)** குற்றம் சுமத்தப்பட்டவர் செலுத்துகை செய்யாதிருப்பாரானால், உரிமம்தாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, தொடர்புடைய மின் வழங்குநர் இந்தச் சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்டவாறு, ஆணைக்கெதிராக அதற்கு கொடுபடவேண்டியவைகளை வசூலிக்க முற்படலாம் மற்றும் மேலுமான நடவடிக்கை எடுக்கலாம்.

**(21)** கிடைக்கக்கூடியவராக இல்லாதிருக்கிற நபர் எவருக்கும், தற்காலிக அல்லது இறுதி கணக்கீட்டு ஆணை நியாயமான சிரத்தையுடன் சார்வு செய்யப்படுமானால் அல்லது நபர் எவரும் அத்தகைய ஆணையை ஏற்க மறுப்பாரானால் அல்லது பெறுவதற்குத் தவிர்ப்பாரானால், அது, ஆய்வு செய்யப்பட்ட வளாகத்தில் இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் ஒட்டப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நேர்வில், அந்தப்படிக்கு மேற்குறிப்பு ஒன்று அத்தகைய ஆணையின் நகலில் எழுதப்படுதல் வேண்டும். அவ்வாறு ஒட்டப்பட்ட கணக்கீட்டு ஆணை அந்த நபருக்கு அல்லது அந்த வளாகத்தின் அனுபோகதாரருக்கு உரியவாறு சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

**(22)** இந்த விதிமுறையின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் **11**இல் உள்ளவாறு ஒன்றாகச் சேர்த்து அறிவிப்பு வழங்கப்படலாம் மற்றும் சட்டத்தின் **152**ஆம் பிரிவின்படி தொகை வசூலிக்கப்படலாம்.

**விளக்கம் :–**இந்த ஒழுங்குமுறைவிதி மற்றும் 23-BB ஒழுங்குமுறை விதியின் நோக்கத்திற்காக :

(*a*) ''குற்றம் சுமத்தப்பட்டவர்'' என்பது, வளாகத்தின் உரிமையாளர் அல்லது அனுபோகதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது சார்பாளர் அல்லது மின்திருட்டு கண்டுபிடிக்கப்பட்ட சமயத்தில் வளாகத்தின் அனுபோகத்திலுள்ள அல்லது உடைமையிலுள்ள பொறுப்பைக் கொண்டுள்ள பிற நபர் எவரும் அல்லது மின்திருட்டினால் பயனடைந்துள்ள பிற நபர் எவரும் என்று பொருள் தந்து உள்ளடக்கும்.

(*b*) ''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது, அவர் உரிமம்தாரரின் அல்லது, நேர்வுக்கேற்ப, மின் வழங்குநரின் அலுவலராக இல்லாதிருக்கும் நேர்வில், இந்த விதித் தொகுப்பின்படி அதிகாரமளிக்கப்பட்ட மின் திருட்டுக் கணக்கீடு உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறு மின்திருட்டைக் கையாளும் நோக்கத்திற்காக மாநில அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராக நியமனஞ் செய்யப்பட்ட அல்லது அமர்த்தப்பட்ட அலுவலர் என்று பொருள் தந்து உள்ளடக்கும்.

(*c*) ''உரிமம்தாரர் அல்லது மின் வழங்குநர்'' என்பது, உரிமம்தாரர் அல்லது, நேர்வுக்கேற்ப, மின் வழங்குநர் அல்லது மின்திருட்டு சம்பவத்திற்காகக் குற்றம் சாட்டும் அவருடைய உரிமை வழங்கப்பட்டவர் அல்லது அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது சார்பாளர் என்று பொருள் தந்து உள்ளடக்கும்.

**3. முதன்மை விதித் தொகுப்பில் படிவம் 8 மற்றும் அது தொடர்பாக பதிவுகளுக்குப் பின் அதற்குப் பதிலாக பின்வரும் 9 முதல் 11 வரையுள்ள படிவங்கள் மற்றும் அது தொடர்பான பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—**

**படிவம்—9.**

**[ஒழுங்குமுறை விதி 23(AA) (8)—ஐப் பார்க்கவும்.]**

**2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 135/138இன்படி மின் திருட்டிற்கான தற்காலிகக் கணக்கீட்டு ஆணை**

**அனுப்புநர்**
(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

**பெறுநர் :**
(எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர், முதலானோரின் முழு முகவரி)

**கடித எண்.........................................................................................நாளிட்டது**

**ஐயா,**

**பொருள் —** மின் திருட்டு—கண்டுபிடிக்கப்பட்டது எஸ்.சி. எண்..........................
தற்காலிக கணக்கீட்டு ஆணை—குறித்து.

**பொருள் —** நாளிட்ட ஆய்வு அறிக்கை

1.0. (ஆய்வுசெய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு).......................................................அன்று (நேரம்)....................................இல் ................................மணிகளில் எஸ்.சி. எண்ணிலுள்ள மின்னிணைப்பு...............................................இருப்பிடத்திலுள்ள கதவு எண்................................இல், எஸ்.எப். எண்.................................இல் (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு/திருமதி.............................................................................பெயரில் இருக்கிறது/இருந்தது அது என்னால், உனது/ உங்கள் சார்பாளர் திரு./திருமதி......................................................முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0. ஆய்வின்போது மின்திருட்டு செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டது........................................... ...............................................................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு/அனுமதிபெறாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்).

மேற்சொன்ன குற்றத்தைச் செய்வதன் மூலம், நீர் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்.

மேலே சொன்ன சட்ட முரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

3.0. தமிழ்நாடு மின்சாரம் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, நேர்மையின்றி மின்சாரம் திருடப்பட்டுள்ளது/சட்டமுரணாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்வதன் பொருட்டு உம்மால் ஏற்பட்ட தோராய இழப்பு ரூ.....................................(.........................................................................ரூபாய்) மற்றும் இதனுடன் கணக்குப் பணித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

4.0. மேலே சுட்டப்பட்டவாறான கணக்கீட்டுத் தொகை இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

5.0. தற்காலிகக் கணக்கீட்டிற்கு எதிராக, தாங்கள் மறுப்புரைகள், எவையேனுமிருப்பின், அவற்றைத் தாக்கல் செய்ய விரும்புவீர்களானால், தாங்கள் தங்களுடைய விளக்கத்தினை, இந்த ஆணையைப் பெற்ற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் போதுமான நிரூபணத்துடன் கீழே கையொப்பமிட்டவருக்கு முகவரியிட்டு அனுப்பலாம். கீழே கையொப்பமிட்டவரின் முன்பு விசாரணைக்காகத் தொடர்புடைய ஆவணங்களுடன் தாங்கள் நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சார்பாளர் மூலமாகவோ ஆஜராவதற்குத் தெரிந்தெடுக்கவும் செய்யலாம்.

6.0. தாங்கள் உடனடியாக, இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்கப்படுமாறு கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர். . . . . . . .

**இணைப்பு :**

1. அறிக்கை
2. பதிவு செய்யப்பட்ட விவரஅறிக்கை (ஏதேனுமிருப்பின்) அதன்
3. மஹசர்—ஆகியவற்றின் நகல்கள்.

நகல் அனுப்பப்படுநர்................................................

நகல் பெறுநர்..............................................................

இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்வு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

* எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும்.

**படிவம்—10**

**[ஒழுங்குமுறை விதி 23(AA) (15)—ஐப் பார்க்கவும்.]**

**2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135ஆம் பிரிவின்படி மின் திருட்டிற்கான இறுதிக் கணக்கீட்டு ஆணை**

**அனுப்புநர்**
(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

**பெறுநர்**
(எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரார், முதலியோரின் முழு முகவரி)

**கடித எண்..................................................................................நாளிட்டது**

**ஐயா,**

**பொருள்** – மின் திருட்டு—கண்டுபிடிக்கப்பட்டது எஸ்.சி. எண்........................................ இறுதிக் கணக்கீட்டு ஆணை—குறித்து.

பொருள் – 1. தற்காலிக கணக்கீட்டு ஆணை........................................

2. தங்களின் பதிலுரை.............................................................

1.0 (ஆய்வுசெய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு)..........................................அன்று (நேரம்)...................................... இல்............................மணிகளில் எஸ்.சி. எண்ணிலுள்ள மின்னிணைப்பு........................................................இருப்பிடத்திலுள்ள கதவு எண்.................................இல், எஸ்.எப். எண்.......................................இல் (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு./திருமதி.................................................................பெயரில் இருக்கிறது/இருந்தது அது என்னால், உனது/உங்கள் சார்பாளர் திரு/திருமதி........................................................முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0 ஆய்வின்போது மின்திருட்டு செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.......................................................... ..........................................................................................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு/அனுமதிபெறாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தினைச் செய்வதன்மூலம், நீர் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர். மேலே சொன்ன சட்ட முரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

3.0 பார்வையில் சுட்டப்பட்டுள்ள தற்காலிகக் கணக்கீட்டு ஆணை தங்களுக்கு வழங்கப்பட்டது மற்றும் தமிழ்நாடு மின்சாரம் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, தங்களுடைய மறுப்புரைகளைத் தாக்கல் செய்வதற்கும் மற்றும் விசாரணையில் ஆஜராவதற்கும் தாங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.

4.0 விவரமான ஆய்வின்பேரிலும், தங்களுடைய கடிதத்தில்/நேர்முக விசாரணையின்போது தங்களால் முனையப்பட்ட விளக்கம், அளிக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் பதிவுருக்களைப் பரிசீலித்ததன் பேரிலும் கீழே விவரிக்கப்பட்டவாறு மின்திருட்டு தங்களால் செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது :—

(அறிவிக்கப்பட்ட விளக்கம் மற்றும் முடிவுகளின்படியான மின்திருட்டை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட நியாயமான/விவரமான ஆணை திருட்டு உள்ளது தொடர்பாக மேற்சொன்ன மின்திருட்டு பொறுத்து நுகர்வோரின் ஈடுபாடு அல்லது பங்கு தொடர்பாக உரிமம்தாரரின் கோரிக்கைக்கு ஆதரவான பொருட்கள் தொடர்பாக செய்யப்பட வேண்டிய சுட்டுகை).

5.0 தமிழ்நாடு மின்சாரம் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறைவிதிகளுக்கிணங்க, நேர்மையின்றி மின்சாரம் திருடப்பட்டுள்ளது. சட்டமுரணான மின் வழங்கலுக்கான கணக்கீட்டுத் தொகை ரூ................ (ரூபாய்..................................................) மற்றும் இத்துடன் கணக்குப் பணித்தாள் இணைக்கப்பட்டுள்ளது. மேலே சுட்டப்பட்டுள்ள கணக்கீட்டுத் தொகையானது, இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

தாங்கள் உடனடியாக, இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்கப்படுமாறு கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்......................................

**இணைப்பு :**

1. அறிக்கை
2. பதிவுச் செய்யப்பட்ட விவரஅறிக்கை (ஏதேனுமிருப்பின்) அதன்
3. மஹசர்
4. தற்காலிக் கணக்கீட்டு ஆணை

நகல் அனுப்பப்படுநர்.............................................................

இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்வு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

## படிவம்–11

**[ஒழுங்குமுறை விதி 23(AA) (22)–ஐப் பார்க்கவும்.]**

**2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 152ஆம் பிரிவின்படி**

**குற்ற நிறுத்திசைவு (Compounding of offence)**

**அனுப்புநர்:**
(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

**பெறுநர்:**
(எவருடைய பெயரில் மின்னிணைப்பு
உள்ளதோ அந்த நபரின் அல்லது
குடியிருப்பவரின் அல்லது
அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)

**கடித எண்..........................................................................................................................நாளிட்டது**

**ஐயா,**

**பொருள் –** மின் திருட்டு – கண்டுபிடிக்கப்பட்டது எஸ்.சி. எண்...........................
தொகை நிறுத்திசைவுக்கான ஆணை–குறித்து.

1.0 (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு)..........................................அன்று (நேரம்)................................இல் மணிகளில் எஸ்.சி. எண்ணிலுள்ள மின்னிணைப்பு........................................................இருப்பிடத்திலுள்ள கதவு எண்................................ இல், எஸ்.எப். எண்...................................................................................இல் (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு/திருமதி....................................பெயரில் இருக்கிறது/இருந்தது அது என்னால், உனது/உமது சார்பாளர் திரு/திருமதி....................................................................முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0 ஆய்வின்போது மின்திருட்டு செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.......................................................................... ...........................................................................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு/அனுமதிபெறாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தினைச் செய்வதன்மூலம், நீர் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்.

3.0 மேலே சொன்ன சட்ட முரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

4.0 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 152ஆம் பிரிவின்படி குற்ற நிறுத்திசைவுக்காக நீர் தெரிவு செய்துள்ளீர், மேலே சொல்லப்பட்டவாறு குற்ற நிறுத்திசைவுக்காக, ரூ...............................................................

(ரூபாய்....................................................................) செலுத்துமாறு தாங்கள் கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்..........................................

**இணைப்பு :**
கணக்குப் பணித்தாள்

நகல் பெறுநர்.........................................................................

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**சென்னை–600 018,**
**2008 நவம்பர் 11.**

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**
**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–6, 03–12–2007 நாளிட்டது)**
**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/8–7, 03–12–2007 நாளிட்டது)**
**(அறிக்கை எண் த.மி.ஒ.ஆ./SPR/9/1–8, 03–12–2007 நாளிட்டது)**
**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/876/2008.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு, 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI-பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் மேலேயுள்ள விதித் தொகுப்புகள் மற்றும் மேலே சுட்டப்பட்ட 2004 ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விதிகளுக்குப் பொருத்தமான திருத்தங்களுக்கு வகை செய்யும் ஒருங்கிணைக்கப்பட்ட திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் மேற்சொன்ன திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, இதற்காக, மேற்சொன்ன சட்டத்தின் 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம், மேற்சொன்ன மின் வழங்கல் விதித் தொகுப்பு, மின் பகிர்மான விதித் தொகுப்பு, 2004ஆம் ஆண்டு ஒழுங்குமுறைவிதிகள் ஆகியவற்றிற்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI-பிரிவு 2 (பின்னிணைப்பில்) வெளியிட்டுள்ளது.

**அத்தியாயம் 1, முன்னுரையாக**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :—**

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு, மின் பகிர்மான விதித் தொகுப்பு மற்றும் செயல்திறச் செந்தரங்கள் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(2) இந்த ஒழுங்குமுறைவிதிகள், அவை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**அத்தியாயம் 2 – தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைத் திருத்தம் செய்தல்**

**2. தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல் :**

தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17ஆம் ஒழுங்குமுறைவிதியில், (6)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு, பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :—

“(7) உரிமம்தாரர், (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்படும் அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், நுகர்வோரால் செய்யப்பட்ட பிணைய வைப்புத்தொகை அல்லது கூடுதல் பிணைய வைப்புத்தொகை அல்லது ஏதேனும் பிற வைப்புத்தொகைக்கு

எதிராக, நுகர்வோரிடமிருந்து நிலுவைகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகலாகும், நுகர்வோரிடமிருந்து கொடுபடவேண்டிய நிலுவைகளைச் சரிக்கட்டுதல் வேண்டும் மற்றும் சரிக்கட்டுதல் செய்த பின்பு, மீதி வைப்பீட்டுத்தொகை, ஏதேனுமிருப்பின், அதனை, (3)ஆம் உள்—ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்படும் அறிவிப்புக் காலஅளவு முடிவடையும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நுகர்வோருக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.''

**அத்தியாயம் 3—தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பினைத் திருத்தம் செய்தல்.**

**3. தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 33ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்:—**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 33ஆம் ஒழுங்குமுறைவிதியில், (4)ஆம் உள்—ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு பின்வரும் ஒழுங்குமுறைவிதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :—

''(5) ஒன்று, (3) ஆம் உள்—ஒழுங்குமுறைவிதியின்படி நுகர்வோரால் அல்லது, நேர்வுக்கேற்ப, (4) ஆம் உள்—ஒழுங்குமுறைவிதியின்படி உரிமம்தாரரால் உடன்பாட்டுப்பத்திரம் முடிவுறுத்தப்படும் நேர்வில், உரிமம்தாரர், நுகர்வோரால் செய்யப்பட்ட பிணைய வைப்பீடு அல்லது கூடுதல் பிணைய வைப்பீடு அல்லது ஏதேனும் பிற வைப்பீட்டிற்கு எதிராக நுகர்வோரிடமிருந்து நிலுவைகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகலாகும், நுகர்வோரால் கொடுபடவேண்டிய நிலுவைகளைச் சரிக்கட்டுதல் செய்த பின்பு, நுகர்வோரிடமிருந்து கொடுபடவேண்டிய நிலுவைகள், எவையேனுமிருப்பின், அவற்றை வசூலித்தல் வேண்டும், மற்றும் அத்தகைய சரிக்கட்டுதல் செய்த பின்பு, உடன்பாட்டுப்பத்திரம் முடிவுறுத்தப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நுகர்வோரிடம், மீதி வைப்பீட்டுத் தொகை, ஏதேனுமிருப்பின், அதனை திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.''

**அத்தியாயம் 4—2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகள்.**

**4. 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் 21ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல் :—**

2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் 21ஆம் ஒழுங்குமுறைவிதியில்,—

(i) தொடக்கப் பத்தியில் கடைசி வாக்கியத்திற்குப் பதிலாகப் பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

''வழங்கப்பட வேண்டிய நஷ்டஈடு, கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்படுகிறது, அதாவது:—

**அட்டவணை ''**

(ii) (i) ஆம் கூறில் திருத்தம் செய்யப்பட்டவாறு மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதியின்படி அட்டவணையில்,—

(*a*) ''வ.எண்.'' என்ற தலைப்பின்கீழ் முதல் பத்தியில் ''8'' ஆம் இலக்கத்திற்குப் பின்பு, ''9'' ஆம் இலக்கம் சேர்க்கப்படும்.

(*b*) ''நிகழ்ச்சிகள்'' என்ற தலைப்பின்கீழ் இரண்டாம் பத்தியில் ''குறையைக் கையாளுதல்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் சேர்க்கப்படும், அதாவது :—

''தற்காலிக மின் வழங்கல் காலம் முடிவடைந்த பின்பு தற்காலிக மின் வழங்கல் பொறுத்த வைப்பீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் மற்றும் மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் 17(6) ஆம் ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 33(5)ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான காலஅளவிற்குள் மீதி வைப்பீட்டுத் தொகையை திருப்பிக் கொடுத்தல்.''

(*c*) ''வழங்கப்படவேண்டிய நஷ்டஈடு'' என்ற தலைப்பின்கீழ், ''குறையைக் கையாளுவதில் தவறுகைக்காக ரூ. 50/—'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''திருப்பிக் கொடுக்கும் நாள் வரையில், ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலான வட்டிக்குக் கூடுதலாக வாரம் ஒன்றுக்கு அல்லது காலத்தாழ்வின் அதன் பகுதிக்கு ரூ. 100/—'' என்ற சொற்றொடர் சேர்க்கப்படும்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

சென்னை—600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## (அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–7, 2007, 14–12–2007நாளிட்டது)

## (ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

No. VI(2)/877/2008.

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்படுவதாலும் மற்றும் அது 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கை செய்யப்படுவதாலும்,

மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த தெருவிளக்குகள், குடிநீர் வழங்கலுக்கான பணிகள் மற்றும் பிற அனைத்துப் பணிகள் தொடர்பாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பினைத் திருத்தங்கள் செய்வது அவசியமென கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள், முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதாலும் மற்றும் அதற்கிணங்க அந்த முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவினாலும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற வகைமுறைகள் அனைத்தினாலும் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் (இதன் பின்பு முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைக்கிறது, அதாவது :–

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(*a*) இந்த விதித் தொகுப்பு “2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (இரண்டாம் திருத்தம்) விதித் தொகுப்பு,” என்று வழங்கப்பெறும்.

(*b*) இந்த விதித் தொகுப்பு, 2007 மார்ச் 13 அன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படும்.

**2. முதன்மை விதித் தொகுப்பின் 5 ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல் :**

முதன்மை விதித் தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியின் (4)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில்,—

(*a*) (*ii*) ஆம் கூறுக்கு பதிலாகப் பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும்:—

(ii) (a) HT நுகர்வோர் எவரும், உரிய தேதியில் பட்டியல் எதனையும் செலுத்துவதற்குப் புறக்கணிக்கிறவிடத்து, அவர் செலுத்துகைக்கான உரிய தேதிக்குப் பின்வரும் நாளிலிருந்து காலங்கடந்து செலுத்துகைக்கான உபரிக்கட்டணம் செலுத்துவதற்கு உள்ளாதல் வேண்டும். (உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பொது விளக்கு மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகள் மற்றும் பிற பணிகள் தவிர) LT நுகர்வோர் எவரும் அறிவிப்புக்கால அளவின் கடைசி நாளில் பட்டியல் எதனையும் செலுத்துவதற்கு புறக்கணிக்கிறவிடத்து, அவர், அறிவிப்புக்கால அளவின் கடைசி நாளுக்கு அடுத்து வரும் நாளிலிருந்து காலங்கடந்த செலுத்துகைக்கான உபரிக்கட்டணம் செலுத்துவதற்கு உள்ளாதல் வேண்டும்.

(*b*) உள்ளாட்சி அமைப்புகள் பொது விளக்குகள் மற்றும் பொது குடிநீர்ப்பணிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிற பணிகளுக்கான LT மின்னிணைப்புகள் பொறுத்து பட்டியல்கள் எவற்றையும் செலுத்த புறக்கணிக்கிறவிடத்து தவறுகிறவிடத்து, காலங்கடந்த செலுத்துகைக்கான உபரிக்கட்டணம், கோரிக்கைத் தேதியிலிருந்து 60 நாட்களுக்கு அப்பால் செய்யப்படும் செலுத்துகைகளுக்குப் பொருந்தத்தக்கதாகும். கோரிக்கைத் தேதியிலிருந்து 60 நாட்களுக்கு அப்பால் செய்யப்பட்ட செலுத்துகையைப் பொறுத்தவரை, காலங்கடந்த செலுத்துகைக்கான உபரிக் கட்டணம், கோரிக்கைத் தேதியான 60 ஆம் நாளுக்கு அடுத்துவரும் நாளிலிருந்து செலுத்தத்தக்கதாகும்.

(*c*) உபரிக்கட்டணத்தின், குறைந்தபட்சக்கால அளவானது பதினைந்து நாட்கள் ஆகும் மற்றும் காலத்தாழ்வு பதினைந்து நாட்களுக்கு மேற்பட்டு, ஆனால், ஒரு மாதத்திற்கு மேற்படாதிருக்கிறவிடத்து, அது, முழு மாதங்களின் எண்ணிக்கை ஆகும் மற்றும் ஒரு மாதத்தின் பின்னம் எதுவும், நாட்களின் எண்ணிக்கைக்குச் சரிசமவீத அளவானதாகும்.

(*b*) (*iv*) ஆம் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

(*iv*) (உள்ளாட்சி அமைப்புகள் தவிர) LT நுகர்வோரைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம், மின்சாரம் வழங்கலுக்காகக் கொடுபட வேண்டியதாக இருக்கிற நிலுவைத்தொகைக்காக மாதம் ஒன்றுக்கு 1.5 விழுக்காடாக ஆக இருத்தல் வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த LT மின்னிணைப்புகளைப் பொறுத்தவரை, உபரிக்கட்டணம் மின்சாரம் வழங்கலுக்காக கொடுபடவேண்டியதாக இருக்கிற நிலுவைக்காக மாதம் ஒன்றுக்கு 0.5 விழுக்காடாக இருத்தல் வேண்டும்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

சென்னை–600 018,
2008 நவம்பர் 11.

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE PRINCIPAL SECRETARY TO GOVERNMENT AND
COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU